

மே'61
13 ந.பை

கிராம நலம்

" கவிஞர் தாகூர் தமது கவியுணர்வுக்கு ஏற்ப வருங்கால நன்மைக்கு என்றே வாழ்கிறார். நாமும் அப்படி வாழவேண்டுமென்று விரும்புகிறார். பொழுது புலரும்போது, வானை நோக்கிப் பறந்து செல்லும் பறவைகள், திவ்விய கீதங்களை இசைத்துச் செல்லும் அற்புதக் காட்சியை, வியக்கும் நம் பார்வைக்கு அவர் அளிக்கிறார்....

....பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்கள் கேட்பதெல்லாம், ஒரே ஒரு கீதத்தைத்தான். சத்தளிக்கும் உணவே அது. அதை அவர்களுக்கு, இன்னொருவர் கொடுக்க முடியாது. அவர்களே அதைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். உழைத்துப் பாடுபடுவதனால் மாத்திரமே, அதைச் சம்பாதிக்க முடியும்."

—மகாத்மாவின் மணிமொழி

'கிராம நல' இதழ் ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்., பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை, துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.எ.எஸ்., துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.எ.எஸ்., துணைக் காரியதரிசி [வேலைமுறை]

ஸ்ரீ எஸ். வேங்கடரமணன், ஐ.எ.எஸ்., துணைக் காரியதரிசி, நிதித்துறை [திட்டம்]

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.எ., பொதுஜனத் தொடர்பு அதிகாரி- ஆசிரியர்.

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், "கிராம நலம்", கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்–சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டா. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 6	மே 1961	படி 8

பொருளடக்கம்

	பக்கம்.
சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுத்திட்டம்	2
சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்—காட்னேரி	3
பஞ்சாயத்து நிர்வாகம்—ஆய்வுக் குழுவினர் அறிக்கையின் சாரம் ..	5
கிராம வளம் பெருக—டாக்டர் ஜே. ஸி. குமரப்பா	7
மக்கள் ஆட்சியின் அடித்தளம்—பஞ்சாயத்து—ஸ்ரீ ஜவஹர்லால் நேரு ..	9
"அன்னைத் தமிழின் அருள்" (கவிதை)—'விஜயாலயன்'	10
மானவாரி நிலங்களில் திருந்திய சாகுபடி—திரு. கே. எஸ். சுப்பிரமணியம்	11
வரப்பெற்றோம்	12
தமிழ் நாட்டில் பூதான இயக்கம்	13
காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்— திரு. வெ. சாமிநாத சர்மா ..	15
பாண்டி நாட்டு நாடோடிப் பாடல்கள்—திரு. ராஜ. வேதசிகாமணி ..	17
காணிக்கை—திரு. மீ. லீ. சபரிராஜன்	19
"அன்பை வளர்த்து உயர்வு எய்திடுவோம் (கவிதை)—திருமதி சௌந்தரா கைலாசம்".	22
கேள்வியும் பதிலும்	27
கடிதக்கருத்தரங்கு	28
சொல்லின் செல்வர் மறைந்தார்	33
பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு	35
வாசகர்களுக்கு	36

பகுதி 2—பஞ்சாயத்து—அரசினர் இதழ்

தமிழ் நாட்டில் ரசாயன உர விநியோகம்	i—v
தழை உரம் பற்றிய தப்பெண்ணங்கள்—திரு. எம்.எஸ். சிவராமன், ஐ.சி.எஸ்.,	vi—viii
அரசாங்க ஆணைகள்	ix—x
வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்	xi
காலத்தை வென்ற கவியரசர்	xii

அடுத்த இதழில்:—11-5-61 முதல் 16-5-61 வரை உதகமண்டலத்தில் நடைபெற்ற மாவட்டக் கலெக்டர்கள் மாநாடு பற்றிய முழு விவரமும் வெளியிடப்படும்.

சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுத் திட்டம்

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக உள்ளன. புதிய பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்களும், கிராம மக்களும் ஊரை உயர்த்தும் திருப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவதைக் காண்கிறோம். இந்த ஆர்வம் மேலும், நல்ல முறையில் பயன்படும் வகையில், ஒரு பரிசுத் திட்டத்தை அளிக்க " கிராம நலம் " முன்வந்துள்ளது.

கீழே எட்டுத் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் ஏதாவது ஒன்றினை அடிப்படையாக வைத்துக் கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். கட்டுரைகள் "கிராம நல"த்தில் இரண்டு பக்கங்களுக்குமேல் போகக்கூடாது. வெள்ளைத் தாளில், இரண்டு பக்கங்களிலும் எழுதாமல், ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டும்.

பொருள் :—

1. கிராமப் பொருளாதார வளத்தைப் பெருக்கப் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்.
2. வயது வந்த குழந்தைகள் எல்லோருக்கும் கல்வியறிவு புகட்டப் பஞ்சாயத்துக்கள் செய்ய வேண்டியதென்ன ?
3. பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டத்தைத் திறமையுடன் நடத்துவது எப்படி ?
4. கிராமக் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் என்ன செய்யலாம் ?
5. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் பஞ்சாயத்துக்கள் என்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் ?
6. பொது இடங்களில் மரங்களை நட்டுப் பராமரித்தல் பற்றி பஞ்சாயத்துக்களின் கடமைகள்.
7. ஜனத் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் என்ன செய்யலாம் ?
8. உணவு உற்பத்தி விஷயத்தில், பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கள்.

மேற்குறிப்பிட்ட துறைகளில், உங்கள் கிராமத்தில் எத்தனையோ திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். செய்துள்ள சாதனைகள் என்னென்ன, கிடைத்த பலன்கள், வெற்றி தோல்விகள் எல்லாவற்றையும், அனுபவ வாயிலாக அடைந்த படிப்பினைகளின் அடிப்படையில், விளக்கிக் கட்டுரை வடிவில் எழுதி அனுப்ப வேண்டும். என்னென்ன செய்யலாம் என்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமல், மற்றப் பஞ்சாயத்துக்களுக்கும் பயன்படும் வகையில், செய்துள்ளவேலைகளைப்பற்றிய விவரங்கள் மட்டுமே முக்கிய இடம் பெறவேண்டும். 'சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்' என்ற தலைப்பில் டி. கல்லுப்பட்டிவட்டாரத்திலுள்ள, "காரைக்கேணி", "காடனேரி" ஆகிய கிராமப் பஞ்சாயத்துக்களைப் பற்றிய கட்டுரைகள், முறையே "கிராம நலம்" மார்ச், மே இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரைப் போட்டியில் கலந்துகொள்பவர்கள், இந்த இரு கட்டுரைகளையும் கவனத்துடன் படித்து, அந்த முறையிலேயே தங்களுடைய கட்டுரைகளை எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் மூன்று சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசளிக்கப்படும்.

முதற் பரிசு ரூ. 25.00.
இரண்டாவது பரிசு ரூ. 15.00.
மூன்றாவது பரிசு ரூ. 10.00.

ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து இப்பரிசுகள் வழங்கப்படும். கட்டுரையின்மேல் "கிராம நலம் கட்டுரைப் போட்டி" என்று தலைப்பிட்டு அனுப்பவும். அத்துடன் தங்களுடைய **முழு முகவரியையும்** தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து மன்ற உறுப்பினர்கள், மற்றும் பஞ்சாயத்து வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

ஆசிரியர்,
" கிராம நலம்,"
கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறை,
தமிழ்நாடு அரசாங்கத் தலைமை அலுவலகம்,
சென்னை-9.

8 - JUN 196

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

[" சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள் " என்னும் தொடரில் இது இரண்டாவது கட்டுரை. மார்ச் " கிராம நல " இதழில், காரைக்கேணி கிராமப் பஞ்சாயத்து பற்றி, இத்தொடரில் முதற் கட்டுரை வெளி வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும். இந்தக் கட்டுரை காடனேரி கிராமப் பஞ்சாயத்தின் சிறப்புக்களைக் கூறுகிறது. " கிராம நல " துணை ஆசிரியர் திரு. வ. சம்பந்தம் அவர்கள், காடனேரியில் நடை பெறும் மாதிரி நில அளவைப் பணி, பிற வளர்ச்சிப் பணிகளை நேரில் கண்டு இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

இது போன்ற சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள் நமது மாநிலத்தில் பல இருக்கும். அவற்றின் செயல் முறைகளையும், சாதனைகளையும் விளக்கிக் கட்டுரை வடிவில் அனுப்பினால், இந்தத் தொடரில் வெளி யிடப்படும். அத்தகைய கட்டுரைகளை மனமார வரவேற்கிறோம் . —ஆசிரியர்.]

காடனேரி காட்டும் வழி

தமிழ் நாட்டில் எவ்வளவோ ஊர்களின் பெயர்கள் சிதைந்து உச்சரிக்கப்படுகின்றன. ' காடனேரி ' என்ற பெயரைத்தான் எடுத்துக்கொள்ளுங்கள். " கருட நெறி " என்ற அழகான பெயர் மாறி, " காடநெறி " என்றாகி, கடைசியில் " காடனேரி " என்று சிதைந்து வழங்கப்படுகிறது. இந்தக் " காடனேரி " மதுரை மாவட்டத்தில் டி. கல்லுப்பட்டி வட்டாரத்தில் கல்லுப்பட்டிக்கு இரண்டு கல் தொலைவில் உள்ள ஒரு சிறிய கிராமம். தமிழ் நாட்டில் எங்கோ ஒரு மூலையில் உள்ள ஒரு சிறிய கிராமத்தைப்பற்றி எழுத என்ன அவசியம் வந்துவிட்டது என்று நீங்கள் கேட்கலாம். அதில்தான் சூட்சுமம் இருக்கிறது. இந்தக் " காடனேரி " எல்லாக் கிராமங்களைப் போல் அல்லாமல், ஒரு தனிப் பட்ட கீர்த்தி பெற்றுப் பொலிவுடன் திகழ்கிறது. 1950-ம் ஆண்டிலேயே பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் (Firka Development Scheme) தமிழகத்தில் துவக்கப்பட்டபொழுதே, " காடனேரி " ஒரு மாதிரிக் கிராமமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்தனை ஆண்டுகள் 'காடனேரி ' கிராமத்தை ஒரு மாதிரி கிராமமாக மாற்றி யமைக்க எல்லோரும் எடுத்துக்கொண்ட முயற்சி வீண் போகவில்லை என்றே சொல்லலாம். உழைப்புத்திறன் படைத்த கிராம மக்கள், ஊரை உயர்த்தக் கங்கணம் கட்டிக் கொண்டு முன் வந்து விட்டால், அதனால் விளையும் பலன் அபாரமாகத்தானே இருக்கமுடியும் ? " முயற்சி இங்கே மெய்வருந்தக் கூலிதந்திருக்கிறது". ' காடனேரி ' கிராமத்தை நல்லதொரு லட்சியக் கிராமமாக மாற்றி யமைக்க பெரும்பாடு பட்டுள்ளனர், கிராம மக்களும் வட்டார வளர்ச்சி அலுவலர்களும். டி. கல்லுப்பட்டி வட்டாரத்தில் கிராம வளர்ச்சித் துறையில் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்து நிற்கின்ற கிராமங்கள், காரைக் கேணியும், காடனேரியும்தான்.

நில அளவைப் பணி

கல்லுப்பட்டி வட்டாரத்தில் மட்டுமல்லாமல், தமிழ் நாட்டிலேயே முதன் முதலாக காடனேரி கிராமத்தில் தான் ஒரு மாதிரி சர்வே, கிராம அளவில் எடுக்கப் பட்டுள்ளது. இந்த சர்வே, வட்டார வளர்ச்சி அலுவ லரால் பெருத்த பாடுபட்டு எடுக்கப்பட்டுள்ளது. காட னேரி சிறு கிராமம். ஆயிரத்தைக்கூட எட்டாத ஜனத் தொகை கொண்ட கிராமம்தான். இருந்தாலும், இந்த சர்வே எடுத்துள்ள வகையைப் பார்த்தால், உண்மையிலே இந்தக் கிராம மக்களும், வட்டார வளர்ச்சி அலுவலர் களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் ஆகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட ஊரைப்பற்றிய சகல விஷயங்களும் அடங்கிய சர்வே எடுக்கவேண்டுமென்று தீர்மானித்து, " காடனேரி " கிராமத்தை இதற்காகத் தேர்ந்து எடுத்தார்கள். எல்லாத் துறைகளிலும் கிராமத்தின் நிலை என்ன என்று கண்டறிய பூர்வாங்க வேலை, ஜனவரி 1960-ல் துவங்கப்பட்டது. ஏப்ரல், 14, 1960-க்குள், நான்கு மாதங்களுக்கும் குறைந்த காலத்தில், இந்த சர்வே வேலை முடிந்து விட்டது. வட்டார வளர்ச்சி அலு வலர்களின் சலியாத உழைப்பும், கிராம மக்களின் முழு ஒத்துழைப்புமே இந்த வேலை இவ்வளவு சீக்கிரமாக முடியக் காரணமாக இருந்தது. கிராம மக்களின் ஒத் துழைப்பு மட்டும் இல்லையென்றால், இப்படிப்பட்ட ஒரு சர்வே எடுத்துத் தயாரித்து முடிப்பதென்பது குதிரைக் கொம்புதான்.

விவசாயத் துறையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள் ளாமல், மற்ற எல்லாத் துறைகளைப்பற்றியும் கிராம

சம்பந்தமான புள்ளி விவரங்களை மிகுந்த சிரமப்பட்டு சேர்த்திருக்கிறார்கள். விவசாயம், தொழில், வேலை யின்மை, கிராம மக்களின் வருமான வசதிகள், செல வினங்கள், கல்வி வளர்ச்சி, கால் நடைப் பராமரிப்பு, துணி மணி வசதிகள், வீட்டுச் செலவு, உணவுக்காக ஆகும் செலவு, சினிமா, காபி, பீடி, சிகரெட் போன்றவை களுக்காக ஆகும் பல்வேறுபட்ட செலவுகள், சந்தைகள், திருவிழாக்களுக்காக ஆகும் செலவு என்று பல்வேறு பட்ட துறையிலும், இந்தக் கிராமம் சம்பந்தப்பட்டவரையில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஒரு குறிப் பிட்ட துறையை மட்டும் காட்டாமல், மக்களின் வாழ்விலே ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் கிராம அளவில் புள்ளி விவரங்கள் எடுப்பது, தமிழ் நாட்டிலே காடனேரி கிராமத்தில்தான் வட்டார வளர்ச்சித் துறை யினரால் மேற்கொள்ளப்பட்டு, வெற்றியுடன் முடிந் திருக்கிறது என்பது பெருமகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

உழைப்பின் சின்னம்—ஊர்மக்கள்

'காடனேரி' கிராமத்தின் மொத்த ஜனத்தொகை 989. இதில் ஆண்கள் 349. பெண்கள் 343 பேர். ஆண் குழந்தைகள் 158. பெண் குழந்தைகள் 139. இதிலே எழுதப்படிக்கத் தெரிந்த ஆண்கள் 232 பேர். படித்த பெண்கள் 67 பேர். காடனேரி கிராமத்து மக்கள் நல்ல உழைப்பாளிகள். விவசாய வேலைக்கு இந்தக் கிரா மத்திலிருந்து ஏராளமான பெண்கள் உள்ளனர். இந்தக் கிராமத்தில் மட்டுமல்லாமல், சுற்றுப்புற கிராமங்களுக்கும் இவர்கள் சென்று, வயல்களில் வேலை செய்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் பயிர் செய்யப்படும் நில அளவு 993 ஏக்கர்கள். ஜனத்தொகை 989. மொத்தம் உள்ள கால் நடைகள் 1,208. (இதிலே ஆடுகள் அதிகம்). ஏறக்குறைய பயிர் செய்யப்படும் நில அளவு, கிராம ஜனத்தொகை, கால் நடைகளின் எண்ணிக்கை இவை மூன்றும் ஒரே அளவுள்ளதாக அமைந்துள்ளது குறிப் பிடத்தக்கது. இந்தக் கிராமத்திலே வசிக்கின்ற மக்கள் சொந்தமாக வைத்திருக்கிற நிலத்தின் அளவு 737 ஏக்கர்கள். யார் யாருக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, அந்தந்த நிலங்களின் சர்வே எண்கள் என்னென்ன, நிலத்திலே பயிர் செய்யப்படும் நிலப்பரப்பளவு எவ்வளவு என்பது பற்றிய புள்ளி விவரங்கள் எல்லாம் சிரமப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளன. ஏதாவது ஒரு குறிப்பிட்ட எக்கர் நிலப்பரப்பைப் பற்றிய தகவல்கள் வேண்டுமானால், அங்கு மிங்கும் அலைந்து ஓட வேண்டியதில்லை. இந்தப் புள்ளி விவரங்கள் அடங்கிய படத்தைப் பார்த்தால் போதும். தெளிவாகத் தெரிந்துவிடும்.

இந்தக் கிராமத்தின் வேலை வசதிகளும் சற்று அதிகமா கவேதான் உள்ளன. ஆண்களில் வருடம் 365 நாட்களுக் கும் 40 பேருக்கு வேலையிருக்கிறது. 300 நாட்கள் வேலை 199 பேருக்கும், 250 நாட்கள் வேலை 189 பேர்களுக்கும், மேற்பார்வை செய்கின்றவர்கள் 11 பேரும் என்ற நிலை உள்ளது. அதே மாதிரி, பெண்கள் பற்றியும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்தில் படித்த ஆண்கள் 232. படித்த பெண்கள் 67 பேர். மொத்தம் 299 பேர். கிரா மத்தின் மொத்த ஜனத்தொகையில் இது 30 சதவீதமாகும். இந்த வீதாசாரம் ஒரு புது உணர்வை யும் ஒரு புதுத்தெம்பையும் கிராம மக்களுக்கு ஊட்டி, மேலும் கல்வித்துறையில் அவர்களை ஊக்குவிக்கப் பெரி தும் துணை செய்கிறது.

சொந்த விவசாயம் செய்பவர்கள் ஆண்களில் 199 பேரும் பெண்களில் 171 பேருமாவார். மற்றபடி கூலிக்கு வேலை செய்பவர்கள், மேற்பார்வை செய் பவர்கள். ஆடுமாடு மேய்த்தல், வியாபாரம், இதர விவகாரங் களில் ஈடுபட்டுள்ளவர்கள் என்று இக்கிராம மக்கள் பல் வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கிராமத்தின் முக்கிய விளைச்சல் நெற் பயிர். 140 ஏக்கர்களில் நெல் பயிரிடப்படுகிறது. மற்றபடி கிரா மத்தின் முக்கிய பயிர்கள் மிளகாய், உளுந்து, வரகு, ராகி, சோளம் முதலியன, மொத்தம் 993 ஏக்கர் களில் இந்தப் பயிர்களெல்லாம் பயிரிடப்படுகின்றன. பயி ராக்கப்படும் பயிர்களின் மதிப்பு கிட்டத்தட்ட 2 லட்சம் ரூபாயாகிறது.

இக்கிராமத்தின் மொத்த உற்பத்தி 2,106 பொதி களாகும். (120 பட்டணம்படி=1 பொதி) தேவைப்படுகிற உணவு 2,470 பொதி, ஆகவே, 364 பொதிகள் அளவு உணவு பற்றாக்குறையாகிறது. ஆனால் வருடா வருடம் உற்பத்தி பெருகி வருகிறது. 1960-க்கு முன்னால் பருவ மழை தவறிவிட்டது. போதிய தண்ணீர் வசதியின்மை யால், விளைச்சல் குறைந்திருந்தது. ஆனால் பருவ மழை குறித்த காலத்தில் சென்ற ஆண்டு பெய்ததினால் ஏரி, குளம், எல்லாம் நிரம்பியுள்ளன. இந்த ஆண்டு நல்ல விளைச்சல் கிடைக்கும். இன்னும் வரு கின்ற ஆண்டுகளில் விளைச்சல் மிகவும் அதிகமாக இருக்கும் எனக் கிராமவாசிகள் உறுதியாக உள்ளனர். இந்தப் பற்றாக்குறை துடைத்தெறியப்பட்டு, தன்னிறைவு பெற்ற கிராமமாக காடனேரி வெகு சீக்கிரத்தில் வந்து விடும். கிராமத்திற்குக் கிடைக்கின்ற உர அளவு, மற்ற கிராமங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இங்கே அதிகம்தான். நஞ்சைக்கு 5 டன்னும், புஞ்சை நிலங் களுக்கு 10 டன்னும், தோட்ட நிலங்களுக்கு 5 டன் என்றும் கிடைக்கிறது. இது இந்திய சராசரி கிராமத் திற்குக் கிடைப்பதைவிட சற்று அதிகம்தான்.

இந்தக் கிராமத்தின் பொருள் மொத்த மதிப்பு கிட்டத் தட்ட 8 லட்சம் ரூபாயாகும். மக்கள் பொறுப்பை உணர்ந்து மேலும் மேலும் தங்கள் கிராமத்தை உயர்த்தப் பாடுபடுகின்றனர். கால்நடைகள் கிராமத்தில் அதிகம் இதில் ஆடுகள்தான் ஏராளம்.

(29-ம் பக்கம் பார்க்க.)

ஆய்வுக் குழுவினர் அறிக்கையின் சாரம்:

பஞ்சாயத்து நிர்வாகம்

[பாராளுமன்றத்தில் உள்ள காங்கிரஸ் கட்சி, சமீபத்தில் ஏழு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை (Study Team) அமைத்தது. இக்குழு ராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் செய்து, அந்த இரு மாநிலங்களிலும் பஞ்சாயத்து ஆட்சி நடைபெறும் விதத்தைப் பற்றிய ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையின் சாரத்தை கீழே தந்துள்ளோம். ராஜஸ்தானமும், ஆந்திரப் பிரதேசமும் ஆகிய இரு மாநிலங்களும், முதன் முதலாக, பஞ்சாயத்து ஆட்சி முறையை அமுலுக்குக்கொண்டுவந்தன என்ற செய்தி எல்லோரும் அறிந்ததே—ஆசிரியர்]

இராஜஸ்தான்

இராஜஸ்தானத்து மக்கள், பஞ்சாயத்து ஆட்சியைப் பரீட்சார்த்தமானதொன்று என்ற மட்டில் கருதவில்லை; ஜனநாயகத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட ஒரு வாழ்க்கை நெறி என்றே அதைக் கருதுகின்றனர். தமக்கும், தம் நாட்டுக்கும் சேவை செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகப் பஞ்சாயத்து ஆட்சி முறையை, அவர்கள் கொண்டிருக்கிருர்கள். பஞ்சாயத்து ஆட்சி முறையை வெற்றியடையச் செய்வதே அவர்களுடைய கடமையும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளின் கடமையும் ஆகும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

பொதுஜனப் பிரதிநிதிகளும் அதிகாரிகளும்

பொதுஜனப் பிரதிநிதிகள், அதிகாரிகள் ஆகியோரிடையே இருக்கும் தொடர்பு நல்லுறவுடன் அமைந்ததாக இருக்கிறது. மேலும், அவர்கள், ஒத்துழைப்பு, நல்லெண்ணம் ஆகியவற்றின் அடிப்படையில் தங்கள் பணிகளைச் சிறப்புறச் செய்து வருகின்றனர். இராஜஸ்தானில் நாங்கள் கண்ட இடங்களில் எல்லாம் அதிகாரிகள்—பொதுஜனப்பிரதிநிதிகள் உறவு நல்ல முறையில் இருத்தலைக் கண்டோம். இந்த ஆட்சி முறையில், தம்முடன் பணியாற்றுகின்ற ஒவ்வொருவரையும் அவர்கள் இன்றியமையாதவர்களாகக் கருதிப் போற்றுகின்றனர்.

வளர்ச்சிப் பணிகள்

அதிகாரிகளிடையே ஏற்பட்டுள்ள மனமாற்றம், பொதுமக்களின் மனப்பான்மையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்களும், வட்டாரத்தின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில், அதிகாரிகளுடன் முழு மனத்துடன் ஒத்துழைக்கத் தொடங்கியுள்ளார்கள். இந்தச் சூழ்நிலை, வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கைக்கு நல்ல அறிகுறியாக அமைந்திருப்பதுடன், பிற மாநிலங்களுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகவும் அமைந்துள்ளது. பருகு நீர்க்கிணறுகளில் நீர்மட்டம் உயரவும், நீர்ப்பாசனத்துக்கு மழைநீரைத் தேக்கிவைக்க நீர்த்தேக்கங்களும், இணைப்புப் பாதைகளும், ஆரம்ப-நடுநிலைப் பள்ளிகளும், பதனிடு குழிகளும், முப்பதிலிருந்து நாற்பதாயிரம் ரூபாய் வரை செலவு செய்து வெட்டப்பட்டுள்ள புதிய பருகு நீர்க்கிணறுகளும், அரிஜனங்கள், பிற பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வீடுகள் முதலான ஆக்கவேலைகளைப் பொது ஜனப் பிரதிநிதிகளடங்கிய நிறுவனங்கள் மேற்கொண்டு நன்கு நிறைவேற்றியுள்ள காட்சியை நாங்கள் கண்ணாரக் கண்டு வியந்தோம். மக்கள் பிரதிநிதிகள் வட்டார வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வம் காட்டிவருகின்றனர். ஆரம்பப் பள்ளிகளையும், நடுநிலைப் பள்ளிகளையும், முதியோர் பள்ளிகளையும் நடத்துவதுடன், அவர்கள், செய்தியறிவிப்பு நிலையங்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் கூட நிர்வகித்து வருகின்றனர்.

கூட்ட நிகழ்ச்சி

நாங்கள் பார்வையிட்ட சில பஞ்சாயத்து சமிதி உறுப்பினரிடையே, கூட்ட நடவடிக்கைகளில் மிகுந்த ஆர்வம் காட்டும் தன்மையையும், முக்கிய விஷயங்களை விவாதித்து முடிவு காணும் தன்மையையும் கண்டு மகிழ்ந்தோம். அவர்கள், கூட்டநிகழ்ச்சிகளை, தங்களுடைய நல்ல ஆலோசனைகளை உரிமையுடன் பரிமாறிக்கொள்ள அமைந்த ஒரு நிகழ்ச்சியாகக் கருதுகின்றனர். உறுப்பினர்கள், தம் பொறுப்புக்களை மிகுந்த எச்சரிக்கையுடன் உணர்ந்து செயலாற்றுகின்றனர். இந்த நிறுவனங்களின் சிறப்புக்கள் மட்டும் தான் நாங்கள் பார்வையிட்ட போது எங்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன என்றில்லை; குறைகளையும் கண்டோம். பஞ்சாயத்துக்களில் தீவிரக் கட்சிப் பூசல்கள் நிலவக் கண்டோம். ஆனால், அந்த அலங்கோலம் எங்கும் காணப்படும் பொதுவான குறையே ஆகும்.

கல்வித் துறை

பஞ்சாயத்து சமிதிகள் தொடங்கிய பின், ஆரம்பப் பள்ளிகளின் மேற்பார்வை—பஞ்சாயத்து சமிதிகளிடமும் கிராமப் பஞ்சாயத்துக்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஆரம்ப ஆசிரியர்களின் வேலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. இப்பொழுதெல்லாம் ஆசிரியர்கள் வேலைக்கு வராமல் இருக்க முடியாது. அவர்கள் தங்கள் மாதச் சம்பளங்களை ஊரிலேயே பெற்றுக்கொள்கின்றனர். அதற்கென்று அவர்கள் மாவட்ட, தாலுகா அல்லது வட்டாரத் தலைநகருக்குச் செல்ல வேண்டிய தேவை கிடையாது. பள்ளிக்கூட நேரங்களையும், விடுமுறை நாட்களையும் அந்தந்தப்பிரதேசங்களின் வசதிகளுக்கேற்ப மாற்றியமைத்தது

குறிப்பிடத்தக்க செயலாகும். அறுவடைக் காலத்தோடு ஒத்துப்போகுமாறு கோடை விடுமுறை தள்ளிப்போடப் பட்டுள்ளது. சில இடங்களில், பள்ளிக்கூட நேரத்தில், ஒரு மணி நேரத்தைக் குறைத்து, அந்த நேரத்தில் ஆசிரியர்கள், முதியோர் வகுப்புக்களை நடத்துமாறு பணிக்கப் பட்டுள்ளனர். இந்த முறை, முதியோர் கல்வித் திட்டத்தை மேலும் துரிதப்படுத்த தூண்டுதலாக அமைந்துள்ளது.

பிற்பட்ட சமூகத்தினரின் முன்னேற்றம்

நாங்கள் பார்வையிட்ட பஞ்சாயத்து சமிதிகளும், பஞ்சாயத்துக்களும், பிற்பட்ட சமூகத்துக்குத் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை உணர்ந்துள்ள நிலைமையினைக் கண்டோம். அந்த நிறுவனங்கள் பிற்பட்ட சமூகத்தினரின் முன்னேற்றத்துக்காகத் தங்களால் இயன்ற அளவு பணிசெய்ய மனப்பூர்வமாக முயல்வதையும், பிற்பட்ட சமூகத்தினரும், தங்களுக்குச் செய்யப்படும் தொண்டின் தன்மையை உணர்ந்து நடக்கும் இயல்பையும் கண்டோம். அவர்களிடம் நிலவி வந்த தாழ்வு மனப்பான்மையும் படிப்படியாகக் குறைந்து வருதலைக் கண்டோம். பஞ்சாயத்து சமிதி, கிராமப் பஞ்சாயத்துக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் அரிஜன உறுப்பினர் பிற உறுப்பினர்களுடன் சரிசமமாக அமர்ந்து, தம் கருத்துக்களைத் தயங்காமல் எடுத்துரைக்கின்றனர்.

நிதி நிலை

பல இடங்களிலும் பொது நிதிகள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கென்று பொறுப்புடன் செலவழிக்கப்படுவதைக் காண மிகவும் உற்சாகமளிப்பதாய் இருந்தது. இராஜஸ்தானத்தில், வட்டாரத்தின் எல்லா திட்டங்களும், பஞ்சாயத்து சமிதிகளினாலேயே நிறைவேற்றப்படுகின்றன. அதற்கான நிதிகளைச் சமிதி, வளர்ச்சிக்கான திட்டமிடப் பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து மானியங்களைப் பெறுவதுடன், அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்களிடமிருந்தும் மானியத் தொகைகளைப் பெறுகின்றன. பஞ்சாயத்துக்களும், சில வரிகளை விதிப்பதன் மூலம் நிதி சேர்க்க அதிகாரம் பெற்றிருக்கின்றன. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கென்று, வீட்டு வரி, தொழில் வரி, வட்டிக்குப் பணம் கொடுப்பவரின் மேல் விதிக்கும் வரி, நிலவரியின் மீது விதிக்கும் வரி முதலான பல வரிகளை விதிப்பதன் மூலம், புதிய வரிகள் விதித்தலை மேற்கொள்ளப் பஞ்சாயத்து சமிதிகள் முடிவுசெய்துள்ளன என்பது தெரியவந்தது.

குறைகாணும் மனப்பான்மை

ஏதாவது ஒரு காரணத்துக்காக, பஞ்சாயத்து சமிதியும் கிராமப் பஞ்சாயத்தும்—அரசாங்கத்தைக் குறை கூறிக் கொண்டிருப்பது என்ற மனப்பான்மை இங்கே சிறிதளவும் இல்லை. முன்பெல்லாம், எல்லாக் குறைகளுக்கும் அதிகாரிகளையே குறைகூறுகின்ற மனப்பான்மை நிலவி வந்தது. ஆனால், இப்பொழுது அந்த நிலை மாறி, எதாவது குறை கண்டால், அதற்கு என்ன காரணம், தாங்களும் அதற்குப் பொறுப்பாளிகளா என்று ஆராய்ந்தறிகிற மனப்பான்மை உருவாகியுள்ளது. அதிகாரிகளின் இன்றியமையாத ஒத்துழைப்பையும், விரும்பிப் பெற வேண்டும் என்ற நிலையும் வளர்ந்துள்ளது.

ஏற்பட்ட இடையூறுகள்

இந்த நிறுவனங்கள் சில இடையூறுகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது. இதற்குக் காரணம், இவை முதன் முதலாக இப்பொழுதுதான் பெரும்பொறுப்புக்களை ஏற்றுள்ளன. பெரும்பாலும், கல்வி அறிவும், முன் அனுபவமும் அற்றவர்கள் பொறுப்பேற்க நேர்ந்தமையும், வருவாய்க்கு வேண்டிய துறைகளும், தேவையான நிதிவசதிகளும் இல்லாமையுமே முதலாவது தடையாகும். இருந்த போதிலும், கல்வி அறிவு குறைவாகவுள்ள அவர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு எப்பொழுதும் இருந்துவருகிறது. போதிய அனுபவம் இல்லாமை உண்மையிலேயே ஒரு குறைதான். ஆனால், இந்தக் குறை போகப்போகச் சரியாகிவிடும்.

இரண்டாவதாக, பஞ்சாயத்து சமிதி-கிராமப் பஞ்சாயத்துகளில் நேரடிக் கட்சிப் பூசல் வளருவது ஆக்க வேலைக்கு ஒரு தடையாகும். கட்சிப் பூசல்களின் காரணமாக, இவ்வமைப்புக்களின் ஒழுங்கான வேலைமுறை பாதிக்கப்படுகிறது. பதவிப்போட்டி இருத்தல் இயற்கையே என்றாலும், காலப்போக்கில், தேர்தலில் தோற்றவர்கள், திட்டங்களை நிறைவேற்றத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கடமையைச் செய்யத் துணையாக இருக்கவேண்டுமே அல்லாது, தடையாக இருக்கக் கூடாது. காலப்போக்கில் இந்த நல்லுணர்வும் வளருதல் வேண்டும்.

மூன்றுவதாக, தொழில் துறை வல்லுநர்களின் துணை இல்லாமையால், இந்த நிறுவனங்களுக்குப் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. பலதுறை வளர்ச்சிக்கென அளிக்கப்படும் மானியங்கள் அதனால் செலவிடப்படாமல் தேங்கியிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, குடிசைத்தொழில் வளர்ச்சியைச் சொல்லலாம். சில இடங்களில், தகுதி பெற்ற மருத்துவர்கள் கிடைக்காமையால், நிதிவசதியிருந்தும் சுகாதார நிலையங்கள் நடத்த முடியாத நிலையினைக் கண்டோம்.

உணவு உற்பத்தியும் தொழில் வளர்ச்சியும்

நீர்ப் பாசன விஷயத்தில் தண்ணீர் பற்றுக்குறை இருந்த போதிலும், புதிய கருவிகளைப் பயன் படுத்துதல், பொறுக்கு விதைகள், நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், நீர்த்தேக்கங்கள் கட்டுதல், வரிசைகளில் நடுதல், பூச்சி மருந்துகளைப் போடுதல் முதலான முறைகளைக் கையாள்வதன் மூலம் விவசாய உற்பத்தியைப் பெருக்கத் தீவிரமான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நீர்வளமுள்ள பகுதிகளைப் பிரித்து, பழத் தோட்டங்கள், காய்கறித்தோட்டங்கள், விதைப் பெருக்கு பண்ணைகள் முதலானவைஅமைக்கப்பட்டு, குறிப்பிடத்தக்

(30-ம் பக்கம் பார்க்க.)

ஆராய்ச்சிக் கட்டுரை

கிராம வளம் பெருக....

[டாக்டர். ஜே. ஸி. குமரப்பா]

[மகாத்மா காந்தியடிகளின் பிரதம சிஷ்யர்களில் ஒருவர் டாக்டர் ஜே. சி. குமரப்பா அவர்கள். காந்தியக் கொள்கைகளிலே அசைக்க முடியாத நம்பிக்கையும், ஆழ்ந்த பற்றும் கொண்டவர். காந்தியத் தத்துவங்களை, நாட்டு மக்களின் மனத்திலே பதிய வைக்க அரும்பாடுபட்ட கர்ம வீரர். காந்தியப் பொருளாதாரத்தை விளக்கி, அருமையான நூல்களை அவர் எழுதியுள்ளார். காலம் சென்ற டாக்டர் குமரப்பா அவர்கள், கல்லுப்பட்டி காந்திநிகேதன் ஆசிரமத்திலே பலநாள் வாழ்ந்தார் என்பது, தமிழ்நாட்டுக்குப் பெருமை தரத்தக்க விஷயமாகும். "குமரப்பா நினைவு நிதி" திரட்ட முடிவு செய்து, குமரப்பா நினைவு ஆயத்தக் குழு, இந்த வேலையில் முழு மூச்சுடன் இறங்கியுள்ளது. இதுபற்றிய முழு விவரங்களுக்கு "செயலாளர், குமரப்பா நினைவு ஆயத்தக் குழு, 5, நாகத்தம்மன் கோயில் தெரு, சென்னை-15," என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். —ஆசிரியர்].

சுதந்திரமாக இயங்க விரும்பும் எந்த நாடும், அதன் உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றிலும் சுயதேவைப் பூர்த்தி உண்டாகும்படியான பொருளாதாரத்திட்ட மொன்றை வகுத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். சுய நிறைவுள்ள ஒரு சமூகத்தையும் அது அமைத்துக் கொள்ள முற்பட வேண்டும். கிடைத்திருக்கும் சுதந்திரத்தைக் காத்துக்கொள்ள நாம் படைபலத்தை அதிகரித்தால் போதும் என்று நினைக்கலாம். ஆனால், அது அரசியல் சுதந்திரமாக இருக்குமேயன்றி, மக்கள் சுதந்திரமாகாது. அத்தகைய சுதந்திரம் நிலைபெற முடியாது. ஜப்பான், ஜெர்மனி, பிரான்சு போன்ற பல ஐரோப்பிய நாடுகளின் வரலாறு, படைபலத்தின் பயனின்மையை நமக்கு நன்கு எடுத்துக்காட்டி யிருக்கின்றன. முழுப் போர்க்கோலம் பூண்ட நாடுகளும்கூட, சில சமயங்களில் தம்மால் சமாளிக்க இயலாத சந்தர்ப்பங்களுக்குப் பலியாகியிருக்கின்றன. எனவே, பொருளாதார சமூக —சுயராஜ்யமே நாட்டின் நிலையான சுதந்திரத்திற்கு சிறந்த, மிகத்தேவையான அடிப்படையாகும்.

வேளாண்மை—உயிர்த் தொழில்

நமது நாடு விவசாயத்தை முக்கியதொழிலாகக் கொண்ட ஒரு நாடு. ஆகவே, மக்களின் அன்றாடத் தேவைகளை அங்கங்கே உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் நமது பொருளாதாரத் திட்டம் அமைய வேண்டும். அப்படி வகுக்கப்பட்ட திட்டம், விவசாயம், கிராமத் தொழில்கள் இவ்விரண்டின் சீரிய வளர்ச்சியை முக்கிய அம்சங்களாகக் கொண்டதாகவே அமையவேண்டும். அப்படிச் செய்தால், மக்களுக்கு உண்டு களிக்கப் போதிய உணவும், உடுத்து மகிழத் தேவையான துணியும், வசிக்கப் போதுமான இருப்பிடமும் கிடைக்கும். ஒவ்வொரு மனிதனுக்கும் போதிய உணவு மட்டுமல்ல, சத்துள்ள உணவும் கிடைக்கும் வகையில், நமது உணவுப் பொருளுற்பத்திக்கான திட்டம் வகுக்கப்பட வேண்டும். அதேபோல, மக்களின் உடைக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, போதிய பருத்தி, கம்பளி போன்ற மூலப் பொருட்களையும் நாம் உற்பத்தி செய்ய வேண்டும். இம்முறையால் ஆங்காங்கே மக்களின் அத்தியாவசியத்திற்கானவற்றை உற்பத்தி செய்யப் போதிய நிலத்தை ஒவ்வொரு கிராமமும் ஒதுக்கி வைக்க வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் நிலத்தின் வகைகள் அங்கே விளையக்கூடிய பொருள்கள் பற்றியபுள்ளி விவரங்கள் விரிவாக எடுக்கப்பட்டு, ஆங்காங்கே உற்பத்தி செய்ய வேண்டிய மூலப்பொருள்கள், உணவுப் பொருள்கள் எல்லாம் ஏற்கனவே வகுக்கப்பட்ட திட்டத்திற்கேற்பச் செய்யப்பட வேண்டும்; அதற்குத் தேவையானபடி, நிலத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்தின் பணிகள்

மேற் கண்ட திட்டம் கிராம நிலையிலேயே உற்பத்தியை ஒழுங்கு படுத்தி வருகிறது. இதைக் கண்காணிக்கும் பொறுப்பை ஜனநாயக முறையில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களிடம் ஒப்புவிக்க வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் திட்டப்படி என்ன பயிரிட வேண்டும் என்பதைக் கிராம பஞ்சாயத்து நிர்ணயித்து, பயிரிட அனுமதிக்க வேண்டும், அல்லது, நிலமனைத்தையும் ஊர் பொதுஉடைமையின் கீழ்க்கொண்டு வந்து, பயிரிட அனுமதி வழங்க வேண்டும்.

பயிர் செய்யப்பட்ட பொருள்கள் யாவும் அக்கிராமத்தின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வாங்கவோ, விற்கவோ, செய்யப்பட வேண்டும். இதனால், கிராம மக்கள் தங்கள் தேவைக்கானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியைப் பண்ட மாற்றம் செய்து கொள்ள சாத்தியமாயிருக்கும். காலக் கிரமத்தில், அக்கூட்டுறவு சங்கங்கள் அங்கங்கே விளையும் மூலப் பொருட்களை உற்பத்தி பொருட்களாகத் தயாரிக்கும் தொழில்களை மேற்கொண்டு நடத்தலாம். மிகுதியாக உள்ள எப்பொருளும், அக்கிராமத்தில் கிடைக்காத மற்ற தேவைப் பொருட்களுடன் மாற்றிக் கொள்ளலாம். இந்த ஏற்பாட்டால், மக்களுக்கு இன்றியமையாத தேவைப் பொருட்கள் கிடைப்பதுடன், கிராமத் தொழில்கள் முன்னேறவும் கிராமங்களிலே உற்பத்தி செய்யும் மூலப் பொருட்களை உற்பத்திப் பொருட்களாக தயாரித்தல், அதை வினியோகித்தல், தேவைக்கு மேற்பட்டதை விற்றல் போன்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கும் வாய்ப்பும் மக்களுக்குக் கிடைக்கிறது.

விவசாயிகள் உற்பத்தியை இயன்ற அளவு பெருக்கப் பல விதங்களில் அவர்களுக்கு வசதிகள் கிடைக்க வேண்டும், பூமியை நன்கு பண்படுத்தி நீர்வளமும், நிலவளமும் பொருந்தியதாகச் செய்ய வேண்டும். இதற்குக் கிராமங்களில் குப்பையை உபயோகித்துக் கலப்புரம், பசுந்தாளுரம் போன்றவற்றை தயார் செய்ய வேண்டும்; மண்ணரிப்பைத் தடுக்க மரம் நட வேண்டும்; பாசன வசதிகளை அதிகரிக்க, கிராமத்தவர்கள் தாமே ஆங்காங்குள்ள நீர் நிலைகளுக்கேற்ப, வசதிகள் செய்து கொள்ள வேண்டும். இவ்வேலைகளின் முழுப் பொறுப்பும் கிராமப் பஞ்சாயத்திடம் இருக்க வேண்டும். ஆனால், இதற்குத் தேவையான தொழில் நுட்ப அறிஞர்களின் உதவியை அரசாங்கம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். ஆனல், இவ்வபிவிருத்தி வேலைகள் யாவும் கிராமத்தாரின் சக்திக்குட்பட்டதாகவே இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல், கிராமத்தின் சக்திக்குப் புறம்பானதும், மிகுந்த தொழில் நுட்ப மடங்கியதுமாக நமது திட்டங்கள் இருக்குமானுல், கிராம முன்னேற்றத்திற்காக வகுக்கப்படும் அத்திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு. அந்நியர்கள் கையில் சென்று விடும். இதனுல், கிராமநலம் குன்றுவதுடன், அவர்களுக்கு பல தீமைகளும் ஏற்படக்கூடும்.

பண்ட மாற்று முறை

இன்றைய நிலையில் நாணயச் செலாவணி வளர்ந்து பண்டமாற்றத்திற்குத் தகுந்த ஒரு சாதனமாக இராமல், அதுவே ஒரு இலக்காகவும், தொழிலாகவும் மாறிவிட்டிருக்கிறது. இதனுல் கிராமப் பொருளாதாரம் ஊரார் வசம் இல்லாமல் பட்டணங்களிலுள்ள சில சுயநல வாதிகள் கையில் சிக்கிக் கொண்டிருக்கிறது. கிராம மக்களே தமது பொருளாதார நிலையைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டுமானுல், கூடிய வரை நாம் நாணய மாற்று முறையைக் கையாளாமல், பண்டமாற்று முறையையே கையாள வேண்டும். அதாவது, இயன்ற வரை பண்டத்திற்கு மாற்று மற்றொரு பண்டமாகவே இருக்கும்; பணமல்ல. இதனுல், பணப்புழக்கமே இருக்காது என்பது பொருளல்ல. பணப்புழக்கம் ஓர் அளவிற்கு இருக்கும். ஆனுல், அது கிராமத்தின் பொது நலனைக் காக்கும் நோக்கத்துடன் செய்யப்படும். இம்முறையால், கிராமத்தில் உற்பத்தி யாகும் செல்வம் அங்கேயே தங்கி, அங்குள்ள மக்களுக்கே பயன்படும் விதத்தில் அமையும். அப்படியில்லாமல், உற்பத்திப் பொருட்கள், உடனுக்குடன் விற்பனையாகுமானுல், பணம் படைத்தவர் அதை வாங்கிப் பதுக்கவும், பட்டினி கிடப்போர் என்றும் பட்டினி கிடக்கவும் நேரிடும். வலியோர் எளியோரைச் சுரண்டாமல் தடுக்கவும், கிராமங்கள் தனது நலனுக்காக உற்பத்திச் செய்யவும், இத்திட்டம் வழி வகுக்கிறது.

அரசியல் நோக்குடன் இதைப் பார்ப்போமானுல், கிராமத்தாருக்கு, அவரவர்கள் வேலையை தாமே செய்து கொள்ள பூரண சுதந்திரமும், நல்ல அனுபவமும் கிடைக்கிறது. பாதைகள் அமைத்தல், மண்ணரிப்பைத் தடுத்தல், குளங்கள்—ஏரிகள், கிணறுகள் போன்ற நீர் நிலைகளைப் பராமரித்தல் போன்ற பொது நல வேலைகளைக் கிராம சமுதாயம் ஒன்ருகக் கூடிச் செய்யும் வாய்ப்பு இதிலுண்டு. உண்மையான கூட்டுறவு—முறை வாழ்க்கை அங்கே உதயமாகிறது.

வயது வந்தோருக்கு வாக்குரிமை கொடுத்துவிடுவதால் ஜனநாயகம் ஏற்பட்டுவிடுவதில்லை. வாக்குரிமையைப் பயன் படுத்தும் வாய்ப்பும், சமுதாயத்தின் பொதுப் பொறுப்புக்களை நிர்வகிக்கும் வாய்ப்பும் கிராம மக்களுக்கே அளித்தாலன்றி, ஜன நாயகம் அமைய முடியாது. அங்கு நல்லெண்ணமும், கூட்டுறவும் உதயமாவது அதை விட அரிது. ஆகவே, உண்மையான கூட்டுறவு மனப்பான்மையையும், நல்லெண்ணத்தையும் அடிப்படையாகக் கொண்ட பஞ்சாயத்தை நிறுவ, இப்பொறுப்புக்களை மக்களிடமே ஒப்படைப்பது இன்றியமையாததாகும். காலப்போக்கில், இந்த ஸ்தாபனங்கள் மேலும் மேலும் பொறுப்பை ஏற்கும் சக்தியும், பயிற்சியும் உடையதாக வளர்ச்சியடையும். அதோடு, ஜன நாயகமுறையில், தாலுகா, வட்டாரம், மாநிலம் ஆகிய நிலைகளில், நிர்வாகப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பும் மக்களுக்கே உண்டாகும். இவற்றிற்கெல்லாம் அடிப்படையான கிராமப் பொருளாதார நிலையைச் சீர்படுத்தி தகுந்தபடி வளர்ப்போமானுல், கிராமத் தலைவர்களின் குரலை, நாடாளும் மன்றங்கள் கூட கேட்கும் நிலை உருவாகும். இதுவே கிராமமக்களுக்கு உண்மையான சுதந்திரத்தை வழங்கும் ஒரே முறையாகும்.

கேந்திரக் கிராமங்கள்

1961-62-ல் நான்கு கேந்திரக் கிராம வட்டாரங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளது. இவற்றில் ஒவ்வொரு வட்டாரத்துடனும் 10 துணை நிலையங்கள் இணைக்கப்படும். இத்திட்டத்துக்குமொத்தம் ரூ. 3,52,100 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

கால்நடைகளைத் திட்டமிட்ட ரீதியில் முறையாக அபிவிருத்தி செய்வதற்காக, அகில இந்திய கேந்திரக் கிராமத் திட்டம் முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் அவ்வேலை மேலும் விரிவு படுத்தப்பட்டு தீவிரமாக்கப்பட்டது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் ரூ. 46 லட்சம் செலவில் 20 கேந்திரக் கிராம வட்டாரங்களை ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவட்டாரமும் 10 துணை நிலையங்களைக் கொண்டதாக அல்லது 10,000 கால்நடைகள் உள்ள 10 கேந்திரக் கிராமங்களைக் கொண்டதாக இருக்கும்.

மக்கள் ஆட்சியின் அடித்தளம்—பஞ்சாயத்து

ஜவஹர்லால் நேரு

பஞ்சாயத்து ஆட்சி முறை, மெல்ல மெல்ல, ஜனநாயக அமைப்புக்கு அசைக்க முடியாத ஓர் அடித்தளத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அரசியல் துறையில் மட்டுமில்லாமல், சமுதாய, பொருளாதாரத் துறைகளிலும், மகத்தானதொரு சக்தியாக அது மிளிர்கிறது. பஞ்சாயத்து ஆட்சி செய்யவேண்டிய பணிகள் எவ்வளவோ உள்ளன. கிராமப்புறங்களில், லட்சக்கணக்கான மக்கள் எல்லா வகையான துயரங்களையும் சுமந்து கொண்டு, சீர்கெட்ட வாழ்வு வாழ்ந்து வந்திருக்கின்றனர். சமூகத்தின் அடித்தளத்திலே கிடந்து உழலும் அவர்கள் எல்லாம், தன்னம்பிக்கையும் உள்ளுணர்வும் பெற்று, புதுப் பொலிவும் புது வலிவும் அடைந்து, அரசியல் அதிகாரம் மட்டுமல்லாமல், மற்றும் பல பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள தகுதியுடையவர்களாக மாற வேண்டும். கிராம மக்கள், எடுத்ததற்கெல்லாம் அதிகாரிகளிடம் ஓடி, குறைகளைத் தீர்க்கக் கருணை மனுவைச் அவர்களிடம் சமர்ப்பித்து, தங்கள் காரியத்திற்காக அவர்களின் காலைப் பிடித்துக் கெஞ்சிக் கூத்தாடும் அவல நிலை இனிமேல் என்றென்றும் தலைதூக்காத வகையில் ஒழிக்கப்பட்டாக வேண்டும்.

மக்களாட்சியின் மாண்பு

அரசாங்க, வளர்ச்சிப் பணிகளில் போதிய அனுபவம் இல்லாத பஞ்சாயத்து நிறுவனங்களிடம் ஒரேயடியாக அதிகாரத்தை அளிக்கக்கூடாது என்று எழுப்பப்படும் அச்சத்திற்கு அர்த்தமே கிடையாது. அவர்கள் எல்லாவற்றையும் அனுபவத்திலிருந்தே தெரிந்து கொள்வார்கள். அனுபவம் என்ற உரை கல்லிலே தீட்டித் தீட்டிப் பார்த்து, கால ஓட்டத்திலே, தங்களுடைய தவறுகளை அவர்களே திருத்திக் கொள்வார்கள். எல்லா நேரங்களிலும், சகல விஷயங்களிலும், மேலிடத்திலிருந்தே ஆலோசனைகளையும் உதவியும் செய்யப்பட வேண்டும் என்று சொல்வது மடத்தனம். வெளியிலே ஓடி ஆட அனுமதிக்காமல் வீட்டுக்குள்ளேயே குழந்தைகளைப் பூட்டிப் போட்டு வளர்ப்பதற்கு ஒப்பானது இது. நிர்வாக அதிகாரங்கள் பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டால், தங்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பஞ்சாயத்து நிறுவனங்கள் தவறிவிடும் என்ற தப்பெண்ணத்தை யாரும் வளர்த்துக் கொள்ள வேண்டாம். மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பீடித்துள்ள அதிகார ஆட்சி முறை மெல்ல மெல்ல அகற்றப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அவர்களுடைய காரியங்களில் அவர்களுக்கும் பங்கு இருக்க வேண்டும். தங்களைப் பிற்பட்ட வகுப்பினராகச் சேர்த்துக்கொள்ளும்படி சில பேர் சொல்வதை நான் கண்டேன். இது தரங்கெட்ட பிற்போக்குத்தனத்தின் அறிகுறியாகும். முன்னேற வேண்டும் என்று ஏழை மக்கள் என்றைக்கும் நிமிர்ந்த நெஞ்சுடனும், நேர்மைப் பார்வையுடனும் இருக்க வேண்டுமே தவிர, ஒரு சில சலுகைகளுக்காக கெஞ்சிக் கூத்தாடுகிற தரங்கெட்ட நிலைக்கு சென்றுவிடக்கூடாது.

அனுபவம் அளிக்கும் பாடம்

ஜனநாயகத்தின் உண்மையான அம்சம் என்னவென்றால், அது மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல உறுதுணையாக இருக்க வேண்டியதேயாகும். மனிதனுக்கு மனிதன் வித்தியாச முண்டு. எல்லோரும் ஒரே தரத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், தாங்கள் முன்னேற, எல்லோருக்கும் சரிசமமான வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். மக்கள், தங்கள் காரியங்களைத் தாங்களே செய்துகொள்ள, பஞ்சாயத்து ஆட்சி பெருமளவில் துணை செய்யும். அவர்களுடைய செயல் திறனில், வரவேற்கத்தக்க நல்லதொரு மாற்றத்தைக் கண்டிப்பாக உண்டாக்கித் தரும். அதிகாரிகள் ஆலோசனைகள் கூறலாம். கூட்டுறவு நிறுவனங்களில் அவர்கள் மக்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். ஆனால், இதற்கான தூண்டுதலும் ஆர்வமும், மக்களிடமிருந்தே வர வேண்டும். இத்தனை காலம் வசதிகள் இன்றி, வாடி வதங்கிப் போயிருந்த விவசாயப் பெருங்குடி மக்களும், ஹரிஜனங்களும், கால ஓட்டத்தின் நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொண்டு, புது வாழ்வுக்கு வழி வகுக்கும் புதுப்பாதையில் நடைபோட மகத்தான முறையில் ஒத்துழைக்க முன் வந்துள்ளனர். அவர்கள் இத்துறையில் ஈடுபட்டு பாராட்டும் வகையில் பணியாற்றியுள்ளனர். பல இடங்களில் பஞ்சாயத்துக்கள் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டித்தந்திருக்கின்றன, அதே போல், கல்வித் துறையில், பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக நடைபெற, பஞ்சாயத்துக்கள் முழு ஆர்வம் காட்டி பணியாற்றுகின்றன.

பஞ்சாயத்துக்கள் ஜனநாயக ஆட்சிக்கு உறுதியான அடித்தளமாக அமையும். அஸ்திவாரம் பலமாக இருந்து விட்டால், அதன் மீது எழுப்பப்படும் கட்டடத்தைப் பற்றி கவலைப்படவே தேவையில்லை. அதுவும் உறுதியாக அமைந்து விடும். பாராளுமன்றத்தில் பிரதி நிதிகளாக உள்ளவர்களைத் தேர்ந்து எடுக்கும் பணியில் பஞ்சாயத்துக்களும் முக்கிய பங்கு பெறும். பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்த வரையில், அவை கட்சிசார்பற்ற முறையில் இருந்தால், சிலாக்கியமானதாக இருக்கும். பஞ்சாப், ராஜஸ்தான ஆகிய மாநிலங்களில் பல இடங்களில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் கட்சி அடிப்படையில்

" ஆண்டவனின் படைப்பில் மிக உயர்ந்தவன் மனிதன். ஏனெனில், அவன் மனிதத்தன்மையின் உயர்வையும், புனிதத்தன்மையையும் ஒருங்கே பெற்றுள்ளான். அவனு ஃ குள்ள இந்த உயர்வினை நாம் புரிந்து கொண்டு அதற்குரித்தான மதிப்பை அளிக்க வேண்டியது நம் கடமையாகும். மனிதனுக்கு மனிதன், இடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை ஒதுக்கிவிட்டு, மனிதத்தன்மைக்கு மதிப்பளித்து வாழவேண்டும். இதுதான் கவிஞர் தாகூர் நமக்கெல்லாம் விடுத்துள்ள செய்தியாகும்."

(சென்னையில் நடைபெற்ற கவியரசர் தாகூரின் நூற்றாண்டு விழாவில் இந்திய உப ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்,)

அமையாமல் இருந்தது பெரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். நடத்தபபட்ட பஞ்சாயத்துத் தேர்தல்களில், ஏறக்குறைய 30 சத வீத அளவுக்கு கிராம மக்களின் ஏகோபித்த முடிவை ஒட்டியே நடை பெற்றுள்ளன. இது ஒரு மகத்தான சாதனையாகும். ஆட்சி முறையிலே உண்டாகியுள்ள இந்த மாறுதல் ஒரு புது வலிவையும், புது உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. ஒரு புதிய சமுதாயம் உருவாகிக் கொண்டு வருகிறது. பல இடங்களில், சுற்றுப்புற நகரங்களுக்குச் சென்று வாழ்ந்து கொண்டிருந்த ஏராளமான கிராமவாசிகள், புது உணர்வையும், புது மாறுதல்களையும், கால ஓட்டத்தையும் புரிந்து கொண்டு, தங்கள் தங்கள் கிராமங்களுக்கே திரும்பி வரத் தொடங்கியுள்ளனர். பஞ்சாயதது ஆட்சி ஒரு புது சகாப்தத்தை துவக்கி வைத்திருக்கிறது என்று துணிந்து கூறலாம்."

[சமீபத்தில் பவநகரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரசின் 69-வது மகாநாட்டில், பஞ்சாயத்து ஆட்சிப் பற்றிய தீர்மானத்தின் பேரில் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.]

[உபயம்: குருக்ஷேத்திரா.'

"அன்னைத் தமிழின் அருள்"

"விஜயாலயன்"

தொகையரு

நன்மை கிடைக்கிற ஆட்சியடா—பஞ்சாயத்து
நல்லதே தருகின்ற ஆட்சியடா !
தன்மையால் உயர்ந்திட்ட காந்திஜிக்கு—நம்ப
தமிழ்நாடு செய்கின்ற மாட்சியடா !!

பாடல்

1 அஞ்சாறு பேரு ஒண்ணு
அன்பாகக் கூடி நிண்ணு
பஞ்சாயத்தாட்சி அங்கே மலருது—புதுப்
பாதை நம்ப கண்களுக்குத தெரியுது

2 செஞ்சா ஒரு காரியத்தை
கிராம மக்கள் நன்மைக்காக
செய்யுகின்ற ஆட்சியாளர் வாழ்கவே !—நம்ப
தேசமெங்கும் ஜனங்களாட்சி சூழ்கவே !!

3 அறிவினாலே திட்டம் தீட்டி
திறமையாலே செய்து காட்டி
அருமையாக கிராம மக்கள் வாழவே—பஞ்
சாயத்தாட்சி அமைப்பு முறை போலவே

4 வறுமையோட்டும் வேளாண்மை
வளஞ்சுரக்கும் சிறு தொழில்கள்
சிறுமை நீக்கும் கல்வியை நம் கிராமங்கள்—இனிச்
செம்மையாக வளர்க்கலாகும் பாருங்கள்!

5 அன்னைத் தமிழ் அருள் சுரந்தாள்
அண்ணல் காந்தி கண் திறந்தார்
இன்னும் என்ன கிராம வாழ்வில் தொல்லையா—
ஏதும்
இணையில்லாப் பஞ்சாயத்தாட்சி இல்லையா

மானவாரி நிலங்களில் திருந்திய சாகுபடி

திரு. கே. எஸ். சுப்பிரமணியம்

உலகை உணர்வுடன இயங்கச் செய்வது வேளாண்மைத் தொழில். அதன் முக்கியத்துவத்தையுணர்ந்து, நம் தமிழ் நாட்டு அரசு, தனது ஐந்தாண்டுத் திட்டங்களில், வேளாண்மைக்கு முதலிடம் அளித்து வருகிறது. வேளாண்மையில் புதுமுறை பல புகுத்தி வெற்றி கண்டிருக்கிறது. அப்புது முறையிலே ஒன்றுதான், "மானவாரி நிலங்களிலே திருந்திய சாகுபடித் திட்டம்" (Dry farming Scheme)" இத்திட்டம், கோவை ஜில்லாவிலும், மதுரை ஜில்லாவிலும், நல்ல பணியாற்றி வருகிறது. மகசூலேயும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

பொதுவாக, கிணற்றுப் பாசனமல்லாத, மழையை எதிர் நோக்கி நிற்கும், வறண்ட புன்செய் நிலங்களில், விதைக்கப்பட்ட விதைகள், மழை தவறிவிட்டால், காய்ந்து உருத் தெரியாமல் எறும்பு முதலியவைகளுக்குக்கூட, பயன்படாத அளவிற்குத் தருதியற்றுப் போகின்றன! இந்த ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்காகத்தான், புன்செய் நிலத்தில், சீர்திருத்தமான இந்த முறைகளை அனுசரித்து, விளைவைப் பெருக்குதல் வேண்டும். அம்முறைகளாவன:—

(1) வரப்பிடுதல்.

(2) பண்படுத்துதல்.

(3) உரமிடுதல்.

(4) கண்டம் கண்டமாகப் பயிரிடுதல்.

(5) மாற்றுப் பயிரிடுதல்.

(6) பொறுக்கு விதைகளை உபயோகித்தல்.

(7) பூச்சிக் கொல்லி மருந்துகளை உபயோகப்படுத்துதல்.

பயிரின் விளைவுச் சக்திக்கு அடிகோலும் மற்ற எதைக் காட்டிலும், நிலத்தின் ஈரக் கசிவு மிகவும் அத்தியாவசியப் படுகிறது. மழை குறைந்த பிரதேசங்களிலும், கிணற்றுப் பாசன வசதியற்ற இடங்களிலும், வறண்ட காற்றிற்கும், வெய்யிலுக்கும், கொஞ்சம் நஞ்சமிருந்த ஈரக் கசிவும் பலியாகி விடுகிறது. பருத்தி போன்ற பண வகைப் பயிர்களும், சோளம், கம்பு, கொள், தட்டைப் பயிறு போன்ற உணவுவகைப் பயிர்களும், விதைக்கப் படுவதற்கு முன்பே, மழையைப் பெரிதும் எதிர் பார்க்கின்றன. அவைகளின் வளர்ச்சிப் பருவத்தில் மழையில்லாமலும் போய் விடலாம்! மேலும், நிலத்தின் மேற் புறத்திலுள்ள சத்துள்ள மண், ஆறு அங்குலத்திலிருந்து பன்னிரண்டு அங்குலம் வரையுள்ளது. பயிரின் விளைவுச் சக்திக்கு இம் மேல்மண் மிகவும் இன்றியமையாதது.

வறண்ட காற்று வீசும்போதும், மழை பெய்து அதன் மூலம் ஏற்பட்ட சிற்றோடைகளாலும் சரிவாகவும், வறண்டும் கிடந்த நிலங்களிலுள்ள மேல்மண் அரித்துச் செல்லப்பட்டு விடுகிறது. இதைத்தவிர்க்க, உயரத்தால் ஏற்றத் தாழ்ச்சியுள்ள சரிவான புன்செய் நிலங்களில், சம உயர வரப்புகள் போட்டு, நிலங்களைப் பாகங்களாகப் பிரித்து, சம உயரக் கோடுகள் வழியாக உழுதல் வேண்டும். இதன் மூலம் மண் அரிப்பு தடுக்கப்பட்டு விடுகிறது. ஈரக் கசிவும் காப்பாற்றப்படுகிறது. நிலத்தை, நவீனக் கருவிகள்கொண்டு பண் படுத்துதல் நல்லது.

பயிருக்கு வேண்டிய வளர்ச்சிச் சத்து குறைந்த போது, உரமிடுவதின் மூலம் சரிக்கட்டப் படுகிறது. கம்போஸ்ட் உரத்தைக் காட்டிலும், தொழு உரம் சக்தி வாய்ந்தது. உரமிடுவதால் பயிரின் விளைவுத் தரமும் உயர்கிறது. மாட்டு மூத்திரம், சாணம், இவைகளை, நல்ல குழிவெட்டி, அவற்றில் பத்திரப்படுத்தி வைத்து நல்ல உரமாக உபயோகப் படுத்தலாம். சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்திற்கு, மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை, ஐந்திலிருந்து ஆறு வண்டி, தொழு உரம் உபயோகித்தால் போதுமானது.

கண்டம் கண்டமாகப் பயிரிடும் முறையால் நிலம் பாதுகாக்கப் படுகிறது. கண்டம் கண்டமாகப் பயிரிடுவதால், நீண்டு, சரிவாகவுள்ள நிலங்களில் மண் அரிப்பும் தடுக்கப் படுகிறது. இம்முறையில், நீண்டு தொடர்ச்சியாகவுள்ள நிலங்கள், சிறு சிறு கண்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அரிப்பிற்குச் சாதகமாகவுள்ள பயிர்களும், அரிப்பைத் தடுக்கும் பயிர்களுமாக, மாறி மாறி வரிசைப்படுத்தப்படுகிறது.

நன்கு பண் படுத்தப்பட்டு, வரிசையாக விதைக்கப்பட்டவை தான், அரிப்பிற்குச் சாதகமாகவுள்ளவை. அடர்த்தியாகவும், நெருக்கமாகவும் வளர்க்கப்பட்டவை, அரிப்பிற்குப் பாதகமாகவுள்ளவை. அதாவது அரிப்பைத் தடுக்கும் இயல்புடையவை. மழை பெய்யும் போது, அடர்த்தியாகவுள்ள இப்பயிர்கள், மழையைத் தாங்கிக் கொண்டு, நீரோட்டத்தின் வேகத்தைக் குறைக்கின்றன. இதனால், மண் அரித்துச் செல்லப்படுவதும் தடைபடுகிறது. பொது

வாக, அரிப்பிற்கு சாதகமாகவுள்ள பயிர்களுக்கும், அரிப்பைத் தடுக்கும் பயிர்களுக்கும் உள்ள வரிசைகள் 3 : 1 அல்லது 4 : 1 என்ற வீதத்தில் இருத்தல் நல்லது.

மாற்றுப் பயிரிடு முறையால், நிலத்தின் சத்துக்கள் காக்கப்படுகின்றன. ஒரே இனப்பயிரைத் தொடர்ச்சியாக ஒரே மண்ணில் பயிரிடுவதால், பயிர் வளர்ச்சிக்கு வேண்டிய சத்துப்பொருள் தீர்ந்து போய் விடுகிறது. மாற்றுப் பயிரிடு முறையால், நிலத்தின் சத்துப் பொருள்களும் செழிப்பும் காப்பாற்றப் படுகிறது. இம்முறையில், ஒன்றன் பின் ஒன்றாக, பல்வேறு வகைப் பயிர்களும் பயிரிடப் படுகின்றன. பலதரப்பட்ட பயிர்களும், சத்தைப் பல்வேறான வகையில், கிரகித்துக் கொள்ளும் இயல்புடையன. அவைகள், நிலத்தின் ஈரத்தையும், பயிர் வளர்ச்சிச் சத்துக்களையும், மண்ணின் பலதரப்பட்ட பாகங்களிலிருந்தும் வெவ்வேறான அளவில் பெற்றுக்கொள்கின்றன. நல்ல வேளாண்மைக்கும், மண்ணைச் சரிவரக் காப்பதற்கும், மாற்றுப் பயிரிடுமுறை பயன் படுகிறது. களைகளால் ஏற்படும் நஷ்டம், இம்முறையால் தவிர்க்கப்படுகிறது. பூச்சிகளாலும், பயிர் வியாதிகளாலும், நஷ்டம் வராமல் காத்துக்கொள்ள, இம்முறை பயன் படுகிறது. மேலும், நிலச் சேர்க்கைப் பொருள்களும், தழைச்சத்துக் கலவைகளும், நிலத்தில் நிலைபெற்று நிற்க ஏதுவாகிறது.

சிறந்த பொறுக்கு விதைகளைத் தேர்ந்தெடுத்து விதைத்தல் வேண்டும். உயர் ரகப் பயிர்களிலிருந்தும், நோய் வாய்ப்படாத பயிர்களினின்றும், கிடைத்த விதைகளையே உபயோகித்தல் வேண்டும். இந்த விதைகள் நன்கு உலர்த்தப்பட்டிருக்க வேண்டும். தகுந்த மருந்து வகைகளை உபயோகித்து, பயிரை நாசம் செய்யும் பூச்சிகளையும், எலிகள் முதலியவற்றையும், கொல்ல வேண்டும்.

புன்செய் நிலங்களில் மேற்கூறிய முறைகளை அனுசரித்து விளைவைப் பெருக்குவதற்காகத்தான், "மானவாரி நிலங்களில் திருந்திய சாகுபடித் திட்டம்" (Dry farming Scheme) என்ற இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு, பணியாற்றி வருகிறது. விவசாயத் திட்டங்களை ஆதரித்து, நல்ல சீர்திருத்தமான முறைகளைப் பின்பற்றி விளைச்சலைப் பெருக்கி, நாட்டின் வளத்தைச் செழிப்புறச் செய்வோமாக.

வரப் பெற்றோம்

நாகப்பட்டினம் பஞ்சாயத்து கூட்டு மன்றத் துவக்க விழா சிறப்பு மலர் :

பஞ்சாயத்து ஆட்சிமுறை, கூட்டுறவு முறை, உணவுப் பெருக்கம், கிராமக்கைத்தொழில் வளர்ச்சி, குடும்பக் கட்டுப்பாடு, கல்வி வளர்ச்சி, இயற்கை உரங்களின் பயன் முதலான செய்திகளைப் பற்றிய பயனளிக்கக் கூடிய கட்டுரைகள் மலரில் இடம் பெற்றுள்ளன. மலர் அழகும் பயனும நிறைந்துள்ளதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

பூண்டி பஞ்சாயத்து யூனியன் சிறப்பு மலர் :

பஞ்சாயத்து ஆட்சியின் சிறப்புக்களைப் பற்றியும் செயல் முறைகளைப் பற்றியும், தொழில் வளர்ச்சி—கல்வி வளர்ச்சியில் நாம் காட்டவேண்டிய ஆர்வத்தைப்பற்றியும் விளக்குகின்ற கட்டுரைகளும், பஞ்சாயத்து ஆட்சியின் பெருமை பாடும் கவிதைகளும் மலரில் பொங்கி வழிகின்றன.

பரமத்தி பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப விழா மலர் :

"ஊராளும் மன்றமும் பாராளும் மன்றமும்" என்ற மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களின் கட்டுரை அழகான தமிழ் நடையில் பஞ்சாயத்து ஆட்சி முறையின் பழம் பெருமையை எடுத்துக் கூறுகிறது. தமிழ் நாடு தல நிர்வாகத்துறைத் துணைச் செயலாளர், வட்டார வளர்ச்சிப்பணி அதிகாரிகள் பல துறைகளைப் பற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளனர். அனைத்தும் பயனுள்ளன. காந்தியடிகளின் அன்புருவமும் அருட்காமும் அட்டையை அலங்கரிக்கிறது.

மீஞ்சூர் பஞ்சாயத்து யூனியன் சிறப்பு மலர் :

வட்டார வளர்ச்சிப்பணியின் ஒவ்வொரு துறையையும் புள்ளி விவரங்களுடன் நன்கு விளக்கும் பல பகுதிகளும், கிராமத் தலைவர்களின் புகைப்படங்களும், பயனுள்ள பல செய்திகளும் மலரில் நிறைய உள்ளன.

வேடசந்தூர் பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா மலர் :

இந்த வட்டாரத்தின் ஒவ்வொரு பஞ்சாயத்து உறுப்பினர்களின் பெயர்களும் பிற விவரங்களும், அடங்கியிருப்பதுடன், விநோபாஜியின் அரிய கருத்துரை முதலானவும் மலரைச் சிறப்பிக்கின்றன. வ. ச.

8 OCT 96

தமிழ்நாட்டில் பூதான இயக்கம்

இந்தியா ஒரு விவசாய நாடு. இந்திய மக்களுள் பெரும்பாலோர் விவசாயிகள். எனுறும் இந்தியா விவசாயத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும், முக்கியமாக முன் நிற்கும் காரணம், சமீபகாலம் வரையில் இருந்து வந்த ஜமீன்தார் முறையும், நிலச்சுவான்தார் முறை முதலான முறைகளுமேயாகும். உழுபவனுக்கும், அவன் உழும் நிலத்துக்கும் இடையே நில முதலாளித்துவம் என்ற பெருஞ்சுவர் எழும்பி உற்பத்தியில் உழவனுக்கு உற்சாகமின்றிச் செய்து வந்தது. பெரும்பான்மையான உழவர்களுக்கு நிலமில்லை. பெரும்பகுதி நிலம் ஒருவரிடம்முடங்கியிருத்தல் இந்த நிலையே இது நாள்வரை இருந்து வந்தது. இந்த நிலைமாற, எத்தனையோ நாடுகள் எந்தெந்த முறையையோ கையாண்டபோதிலும், நம் நாட்டில், நம்நாட்டு மக்களின் மனப்பாங்கிற்கேற்ப நாம் கண்ட முறைதான், உலகம் வியக்கும் இந்த அன்பு வழி. காந்தியடிகளின் சகாப்தத்திலே அவர் காட்டிய அறவழியில், இன்று நம் தலைவர்கள் நிலப் பிரச்னையைத்தீர்க்க கண்டுளள சிறந்த வழியே நிலக் கொடை இயக்கம் ஆகும். நிலக்கொடை இயக்கம் காந்தியடிகள் கண்ட சர்வோதய இயக்கத்தின் ஒரு கிளையாகும். எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் ஒரு சமுதாயத்தைக் காண காந்தியடிகள் காட்டிய அமைதிவழியே சர்வோயதயம் ஆகும். காந்தியடிகளுக்குப்பின் இந்த இயக்கத்தில் முழுக்கவனம் செலுத்தி, காந்தியடிகள் காட்டிய வழியில் நடந்து வரும் மகான் விநோபா அவர்கள் ஆவார்கள்.

1951-ம் ஆண்டில், ஐதராபாத்திற்கு அருகில் பொச்சம்பள்ளி என்ற இடத்தில் 100 ஏகர் நிலக்கொடை பெறுவதன் வாயிலாகத் தொடங்கியது இவ்வியக்கம். அதன் பின்னர் விநோபா அவர்களால் வேகமாக வலியுறுததப் பட்டு வந்தது. அவர் நாடெங்கிலும் மாநிலம் யாநிலமாகப் 'பாதயாத்திரை' செய்து நிலக்கொடை இயக்கத்தின் அடிப்படை உண்மைகளை மக்களுக்கு விளக்குவதுடன், ஆங்காங்கே அளிக்கப்படும் நிலக் கொடைகளையும், கிராம தானங்களையும் பெற்று வந்தார். அவருடைய இந்த இலட்சிய யாத்திரையை ஒட்டி நாடெங்கிலும் சர்வோதய சம்மேளனங்கள் நடக்கத் தொடங்கின. முதன் முதலில் விநோபாஜி அவர்கள் உத்தரப் பிரதேசத்தில் 1952, மே மாதத்தில் மொங்கராத் என்ற கிராமத்தைத் தானமாகப் பெற்றார்—உத்தரப் பிரதேசம், பீஹார், மேற்கு வங்காளம், ஒரிஸா, ஆந்திரா என்று பல மாநிலங்களிலும் தொடர்ந்த அவருடைய புனித யாத்திரையினபோது அவர் நிகழ்த்திய உரைகள் பெரும் பயனளித்தன. தாமே முன் வந்து, அன்புக்குக் கட்டுப்பட்டு, தம் உடன் உழைக்கும் விவசாயிகளுக்கு உதவுகின்ற மனப் பக்குவத்தை இதற்குமுன் இந்திய வரலாற்றில் நாம் கண்டதில்லை. இந்தப் பெரும் மனப்புரட்சியின் தன்மையை உணர்ந்த ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண், தம் வாழ்வையே இந்தப் பணிக்குத் தானமாக அளித்தார்—இதற்கிடையில் விநோபாஜி, பொருட் கொடைக் கொள்கையையும் வெளியிட்டார். இவ்வாறு வளர்ந்து வந்த இயக்கத்தின் தந்தை—விநோபாஜி அவர்கள் ஆந்திரப் பிரதேசத்தைக் கடந்து தமிழ் நாட்டை அடைந்தார்.

தமிழ் நாடு என்றுமே காந்தியடிகளின் அற வழியின் பெருமையை உணர்ந்து போற்றுவதில் முன்னிற்கும் நாடு. ஆகவே, அவர் வழி நடககும விநோபாஜி 1957-ம் ஆண்டு எப்ரல் மாதம் தமிழ் நாட்டில் பிரவேசித்த போது அவருடைய இயக்கத்துக்குப பெரும் ஆதரவு அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டுச் சர்வோதய இயக்கத் தொண்டர்கள் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்தனர். அவ்வாண்டு மே மாதம் 9, 10, 11 தேதிகளில் காஞ்சியில் சர்வோதய சம்மேளனம் கூடியது. நவம்பரில் பழனியில் சர்வ சேவா சங்கம் கூடிற்று. இவ்வாறு தாம் மேற்கொண்ட பணியைத் திறம்பட நிறைவேற்றக் கூடிய சிறந்த தொண்டர்கள் தமிழகத்தில் இருக்கக் கண்ட விநோபாஜி, இயக்கத்தின் பொறுப்புக்களை அவர்கள் இனிது நிறைவேற்றுவர் என்ற நம்பிக்கையுடன், தன் பயணத்தை, மைசூா, கேரள மாநிலங்களை நோக்கித் தொடங்கினர்.

இவ்வாறு தொடங்கிய நிலக்கொடை இயக்கமும், கிராம தான இயககமும் இனறு தமிழ் நாட்டில சிறப்புறப் பணியாற்று வருகினறன. நிலக்கொடை—கிராம தானத் தொண்டர்கள நாடெங்கெனும் பாத யாத்திரைகள் செய்து, நாட்டு மக்களுக்குச் சிறபபாக விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சர்வோதயததின் சிறப்புக்களையும், நிலக் கொடை—கிராம தான இயக்கங்களின் தத்துவங்களையும் விளக்கிக் கூறி வருகின்றனர். தொண்டுளளமும், தளரா முயற்சியும், காநதியத்தில் நீங்காப் பற்றும் கொண்ட தமிழ்நாட்டுச் சர்வோதயத் தொண்டர்கள், சர்வோதயச் சங்கததின் பலதுறைப் பணிகளையும் கிராமங்கள்தோறும் செய்து வருகின்ற காட்சி காந்தியடிகளின் கனவாகிய கிராம ராஜ்யம் வெகு தொலைவில்ல இல்லை எனற நம்பிக்கையை அளிப்பதாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள கிராமதானத் தொண்டர்கள் தொடாநது பணியாற்றுவதுடன, பிற மாநிலஙகளிலிருந்து வரும் சர்வோதயத் தலைவர்களும், தொண்டாகளும், தமிழ்நாட்டின் ஒவவொரு கிராமததையும் அடைநது, கிராம மககளுக்குச் சர்வோதயத் தததுவததின பெருமையை எடுத்துக் கூறுகினறனர். 19[illegible]-ம ஆண்டு மே

மாதம் 16-ம் தேதி கன்னியாகுமரியில் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் தமிழ்நாடு அகண்ட பாத யாத்திரையைத் துவக்கிவைத்தார். இப்பாத யாத்திரைக் குழுவினர் கன்யாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயமுத்தூர், மதுரை மாவட்டங்களில் தம் யாத்திரையை நடத்தியுள்ளனர்.

அடுத்து அகில இந்திய சர்வோதயப் பாத யாத்திரை மேற்கொண்டுள்ள திரு. ராம்குமார் கமல் எம்.ஏ.,எல்.டி. நேபாளத்தைச் சேர்ந்த திரு. அமர் பகதூர் ஆகியோர், தமிழ் நாட்டின் பல மாவட்டங்களிலும் சுற்றிப் பூமிதான, கிராமதானக் கொள்கைகளை விளக்கி வந்துள்ளனர். மேலும், இவர்களுடன் தமிழ்நாட்டுச் சர்வோதய சங்க ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

மைசூர் பூமிதான ஊழியர் திரு குட்டி பி.எஸ்.ஸி., தமிழ்நாட்டில் பாத யாத்திரை செய்து வருகிறார். இது வரை அவர் தென் மாவட்டங்கள் பலவற்றிலும் பல்லாயிரக் கணக்கான மைல்கள் நடந்து சென்று தாம் மேற்கொண்ட கொள்கையை ஊர்தோறும் விளக்கி வருகின்றார். ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்களும் கலந்து கொண்டு பாத யாத்திரை செய்கின்றனர். அவரிடம் பொருட்கொடை (சம்பத்து தானம்) யும், நன்கொடையும் பலரும் அளித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டுப் பூமிதான-கிராமதான ஊழியர்கள் ஆங்காங்கே கூட்டங்கள் கூட்டி நிலங்களைத் தானமாகப் பெற்று நிலமற்ற ஏழைகட்கும், அரிஜனங்களுக்கும் வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும், தொண்டர்கள் இப்பணியில் தனிக் கவனம் செலுத்தி வருகின்றனர். இராமநாதபுரம், முதுகுளத்தூர் பகுதிகளில் இப்பொழுது பாத யாத்திரை செய்வதுடன், நீராவி கரிசல்குளம், பேரையூர் இவ்விரண்டு கிராமங்களிலும் சுமார் 10 ஏக்கர் நிலம் 10 பேருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட செய்தியும் வந்துள்ளது. மற்றும் எல்லா மாவட்டங்களிலும் பூமிதானப் பணி நடைபெற்று வருகிறது என்றாலும், பூமிதான—கிராமதான இயக்க வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறுவது மதுரை மாவட்டமேயாகும்.

மதுரையின் தனிச்சிறப்பு

மதுரை மாவட்ட சர்வோதய சங்க ஊழியர் பலரும் எறும்பு போல், என்றும் சுறுசுறுப்புடன் பணியாற்றி வருகின்றனர். அவர்களுடைய தளராத முயற்சியால் மதுரை மாவட்டத்தின் பல பகுதிகளில் நிலமற்றவர் நிலம் பெற்று வாழும் காட்சியைக் காணலாம். குறிப்பாக, இப்பொழுது பூமிதான கிராமதான இயக்கப் பணிகளை மேலும் தீவிரப்படுத்தும் வகையில், தமிழ்நாடு பூமிதான இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்கள், இம் மாவட்டத்தில் பாத யாத்திரை தொடங்கியுள்ளனர். இதன் எதிரொலியாக மதுரை மாவட்டம் வேடசெந்தூர் வட்டாரத்திலுள்ள ஸ்ரீராமபுரம் கிராமத்திலும், மற்றும் காசிபாளையம், கல்வார்ப்பட்டி,குட்டம், தேவநாய்க்கன்பட்டி முதலான கிராமங்களிலும் சுமார் அறுபது குடும்பங்களுக்கு மேல் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் வத்தலகுண்டு வட்டத்தில், கிராமதான ஊழியர்களின் சாதனை தமிழ்நாடு பெருமைப்படக் கூடிய தொன்றாகும். வத்தலகுண்டு வட்டத்தில், ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதி கிராமங்கள், கிராம தானமாக அளிக்கப்பட்டுள்ளன. இந்த வட்டத்தின் பிறிதொரு சிறப்பு, அங்கு கிராமதானக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இந்த வட்டாரத்தில் இது வரை மொத்தம் 1,266.77 ஏக்கர் பரப்பளவு தானமாகப் பெறப்பட்டுக் கூட்டுறவு முறையிலும், தனி மனிதராலும் பயிரிடப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கிராமதான இயக்கம் இவ்வாறு வேகமாக வளருவதற்கும், 'எல்லாருக்கும் எல்லா முண்டு' என்ற சர்வோதயக் கொள்கையில் மக்கள் நம்பிக்கை கொண்டு செயலாற்றவும் காரணமாக இருக்கும் திரு. ஜகந்நாதன், மறைத் திரு. கெய்த்தன், திரு. வரதன் முதலான கிராமதான ஊழியர்களின் தொண்டு நம் அனைவராலும் போற்றிப் பாராட்டத் தக்கதாகும். அவர்களுடைய சலியாத உழைப்பினாலும், காந்திய வழியில் அவர்கள் கொண்டுள்ள தளராத நம்பிக்கையாலும்—தங்கள் வாழ்வை இந்த இயக்கத்துக்கென அர்ப்பணித்து விட்ட தன்மையாலும், கிராம மக்களுடைய மனதில் நிலம் தனி மனிதருக்கு உரிமையானதல்ல; அது சமுதாயத்தின் சொத்து—ஆகவே அதன் பயன் அனைவருக்குமாக இருத்தல் வேண்டும் என்கின்ற கொள்கை வேரூன்றியுள்ளது.

சர்வோதய சங்கத் தொண்டர்கள் நிலப் பிரச்னையில் தங்கள் கவனத்தைச் செலுத்துவதுடன், வட்டாரங்களின் கைத்தொழில், குடிசைத் தொழில் வளர்ச்சியிலும், பிற ஆக்க வேலைகளிலும் கவனம் செலுத்தி வருகின்றனர். பல இடங்களில் அவர்கள் ஆக்க வேலைப் பணிகளில் வட்டாரத்தின் அரசாங்க அதிகாரிகளுக்குப் பெருந்துணையாக இருந்து பணியாற்றுகின்றனர். கதர் அபிவிருத்தி, நூல் நூற்றல் முதலான துறைகளிலும், அவர்கள் குறிப்பிடத்தக்க பணியாற்றி வருகின்றனர். அம்பர் ராட்டையைப் பல இடங்களிலும் பரப்பிப் பயனபெறச் செய்யும் பெருமை அவர்களையே சாரும்.

இவ்வாறு தமிழ்நாட்டின் புனர்வாழ்வில், அமைதியாக, அதே நேரத்தில் வேகமாகப் பெரும்பணியாற்றி வரும், சர்வோதய ஊழியர்களின் பணி மேலும் வளர்வதாக !

[இந்திய சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி விளக்கமாகக் கூறி வந்த கட்டுரை ஆசிரியர், இந்த இதழில் மகாத்மா காந்தியடிகளின் நற்பண்புகளையும், சீரிய வாழ்க்கை நெறி முறையையும் பற்றி அழகாக விளக்கியுள்ளார்கள்.
—ஆசிரியர்.]

4. காந்தியடிகள் வாழ்க்கை—ஒரு சோதனைக்களம்

காந்தியடிகளின் வாழ்க்கை முழுவதும் ஒரு சோதனைக் களமாகவே இருந்து வந்தது. உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் அவர் கொண்டிருந்த உறுதி, உலகம் நலம் பெறவேண்டுமானால், அகிம்சையே சிறந்த வழி என்பதில் அவருக்கேற்பட்டிருந்த நம்பிக்கை, எல்லா உயிரினங்களையும் அன்பினால் அணைத்துக்கொள்ள வேண்டுமென்பதில் அவர் காட்டிய உற்சாகம், அஞ்சாமை என்னும் கவசத்திற்கு அவர் கொடுத்துவந்த மதிப்பு, ஓய்வே காணாத அவருடைய கடமையுணர்ச்சி, பொது நலப்பணியில் அவர்செலுத்திய கருத்து, இப்படிப் பலவும் சோதனைக்குள்ளாயின. ஒவ்வொன்றிலும் அவர் வெற்றியே கண்டுவந்தார். இதனால் உலகம் அவரை மகாத்மா என்று போற்றியது ; என்றென்றும் போற்றிக் கொண்டிருக்கும்.

காந்தியடிகளுக்கேற்பட்ட பலவித சோதனைகள், இவற்றில் அவர் எப்படி வெற்றி அடைந்தார் என்பவைகளைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும் ; முக்கியமாகப் பொதுநலப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்கள், அதிலும் கிராம நலத்திற்காக உழைக்கிறவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால் இவர்கள் அடிக்கடி பலவித சோதனைகளுக்குட்படும்படி நேரிடும். அப்பொழுது இவர்கள் திகைத்தல் கூடாது ; சோர்வோ, சலிப்போ கொள்ளக் கூடாது. காந்தியடிகளின் வாழ்க்கையை நோக்க வேண்டும் ; அவர் காட்டிவிட்டுச் சென்ற வழியில் அடியெடுத்து வைக்கவேண்டும். சோதனைகளில் வெற்றி பெறுவது நிச்சயம்.

எனவே, காந்தியடிகளின் பிள்ளைப்பருவத்திலும் பொது வாழ்வில் அவர் ஈடுபட்ட பின்னரும் நிகழ்ந்த சில சிறிய நிகழ்ச்சிகளை மட்டும் இந்தக் கட்டுரையில் சொல்லிக் காட்ட ஆசைப்படுகிறோம். இந்த மாதிரியான சிறிய நிகழ்ச்சிகள்தான் அவரைப் பெரிய ஆத்மாவாக, மகாத்மாவாக ஆக்கின என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சிறியவைகளில்தான் பெரியவர்களைக் காண வேண்டுமென்று சொல்லுவதுண்டு.

செல்லப் பெயர்

வீட்டில் நம்முடைய குழந்தைகளை ஏதாவது ஒரு செல்லப் பெயரிட்டு அழைக்கிறோமில்லையா, அதுபோல் காந்தியின் குடும்பத்தினரும் காந்தியை 'மோனியா' என்று அழைப்பது வழக்கம். அவருக்குச் சிறிது வயதான பிறகு, அதாவது வாலிபப் பருவத்தில் அவரது வயதொத்த நண்பர்கள் அவரை 'மோகன் பாய்' என்று அழைப்பார்கள்.

பொய்யறியாத பசு மனம்

காந்தியடிகளின் பிறந்த ஊராகிய போர்பந்தரில் சிறு சிறு கோயில்கள் பல உண்டு. இவற்றில் அடிக்கடி திருவிழாக்கள் நடைபெறும். சாமி புறப்பாடு முதலியனவும் உண்டு. இவைகளைப் பார்த்துச் சிறு பிள்ளைகளும், விளையாட்டாக மண் பொம்மைகளைக் கொண்டு திருவிழா முதலியன நடத்துவார்கள். ஒரு நாள் காந்தியுள்பட, காந்தி குடும்பத்தைச் சேர்ந்த சிறு பிள்ளைகள் ஒன்று கூடி, இந்த மாதிரி விளையாட்டாகத் திருவிழா நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இவர்களிலே ஒருவனுக்கு, மண் பொம்மைகளுக்குப் பதிலாக, ஏதாவது ஒரு கோயிலிலிருந்து சில விக்கிரகங்களை ஒருவருக்கும் தெரியாமல் எடுத்து வந்து வைத்து விளையாடினாலென்ன, என்று தோன்றியது. இது நல்ல யோசனையென்று கூடஇருந்தவர்கள் ஆமோதித்தார்கள். உடனே தங்களில் மிகச் சிறியவனான ஒருவனைச் சமீபத்திலிருந்த ஒரு கோயிலுக்கு அனுப்பி, முடிந்த மட்டில் சில விக்கிரகங்களை எடுத்துவரச் சொன்னார்கள். அச் சிறுவனும் துணிந்து அக் கோயிலுக்குள் சென்றான். அப்பொழுது கோயில் பூசாரி அங்கு இல்லை. அடுத்தாற்போலிருந்த தன் வீட்டுக்குச் சாப்பிடப் போயிருந்தான். ஒருவரும் இல்லாததைக் கண்டு சிறுவனுக்குத் தைரியம் பிறந்தது. உட்பக்கம் சென்றான். இரண்டொரு பித்தளை விக்கிரகங்களை எடுத்தான். துரதிருஷ்டவசமாக, கை தவறி ஒரு விக்கிரகம் கீழே விழுந்தது. விழுந்த ஓசையைக் கேட்டு பூசாரி ஓடிவந்தான். அவனைப் பார்த்ததும் சிறுவன், கையிலெடுத்த விக்கிரகத்தோடு ஓட்

மெடுத்தான். அந்த விக்கிரகத்தையும் வேறொரு கோயிலுக்குள் போட்டுவிட்டான். பூசாரியோ துரத்திக்கொண்டு வந்தான். அவன் ஓடுவதைப் பார்த்த மற்றச் சிறுவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் வீட்டுக்குள் போய் ஒளிந்துகொண்டுவிட்டார்கள். களவாட முயன்ற சிறுவன்,காந்தியின் பெரிய தகப்பனார் மகன். அந்தப் பெரிய தகப்பனாரோ பெரிய கடவுள் பக்தர். அதோடு கோபக்காரர். பூசாரி அவரிடம சென்று நடந்ததை எல்லாம் சொன்னான். அவர், காந்தியுள்பட குடும்பத்துப் பிள்ளைகள் அனைவரையும் வரவழைத்து நடந்ததென்னவென்று விசாரித்தார். தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று எல்லோரும் ஒரேயடியாகச் சாதித்துவிட்டார்கள். காந்தியைக் கேட்டார் பெரியவர். நடந்ததை நடந்தபடியே சொல்லிவிட்டார் காந்தி. அப்பொழுதே, அந்தச் சிறு வயதிலேயே, காந்தியின் பசு மனத்தில் சத்திய வித்து முளைவிடத் தொடங்கியது.

இன்னொரு சம்பவம். காந்தி, பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த பருவத்தில், ஒரு நண்பருடைய பழக்கத்தினால், மாமிசம் சாப்பிட ஆரம்பித்தார். ஆனால், இவருடைய பெற்றோர்கள் சுத்த சைவம். புலால் நாற்றமே பிடிக்காது. அவர்களுக்குத் தெரியாமல் இவர் சிறிது காலம் சாப்பிட்டு வந்தார். அந்த நண்பருடன் வெளியில் எங்காவது சென்றுதான் சாப்பிடுவது வழக்கம். சாப்பிட்டுவிட்டு வந்த தினத்தில் வீட்டில் சாப்பிட மாட்டார். தாயார் சாப்பிடக் கூப்பிட்டால் பசி எடுக்கவில்லை என்று சொல்லிவிடுவார். இப்படிப் பொய் சொல்லுகிறோமே என்ற எண்ணம் மட்டும் இவர் மனத்தை அரித்துக்கொண்டிருந்தது. கடைசியில் பொய் சொல்லாமல் இருக்க வேண்டுமென்பதற்காக மாமிச உணவு கொள்வதை அடியோடு விட்டுவிட்டார். “ தாய் தந்தையரிடம் பொய் சொல்லக் கூடாது என்ற எனது புனிதமான ஆசையினாலேயே மாமிச உணவை நான் விட்டுவிட்டேன்.” என்று சுய சரித்திரத்தில் கூறுகிறார். தவிர, “ சத்தியத்தைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பதை என்னுடைய பலதரப்பட்ட அனுபவங்கள் எனக்கு நன்றாக உணர்த்தியிருக்கின்றன ” என்று தமது வாழ்க்கையின் முதிர்ந்த பருவத்தில் இவர் கூறியிருப்பது சிந்திக்கத் தக்கது. மற்றும், சத்தியத்திற்கு இவர் தரும் விளக்கவுரை வருமாறு : “ சத்தியம் என்பது உண்மை பேசுவது மட்டுமல்ல ; மனத்திலும் உண்மையோடு இருப்பது என்பதையும் குறிக்கும்”. எண்ணமும், சொல்லும், செயலும் ஒன்றுபட்டிருப்பதே சத்தியம் என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

அஹிம்சையின் முதற் பாடம்

காந்தி விளையாட்டுப் பருவத்தில் கூட, யாருடனும் நெருங்கி விளையாட மாட்டார் ; பழகவும் மாட்டார். முரட்டுப் பிள்ளைகளைக் கண்டால் ஒதுங்கிவிடுவார். ஒவ்வொரு சமயம், குறுக்கிட்டு, ஒழுங்காக நடந்துகொள்ளுமாறு, அன்பான மொழிகளால் எச்சரிக்கை செய்வார்.

ஒரு சமயம் இவரைவிட மூன்று வயது மூத்தவனான ஒரு பையன், விளையாட்டு நடுவில், இவரைக் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டான். இவர் அவனைத் திருப்பி அடிக்கவில்லை. நேரே அவனைத் தம் தந்தையிடம் அழைத்துக்கொண்டு போனார். அவர் அந்தச் சிறுவனைக் கண்டித்து அனுப்பிவிட்டார்.

காந்திக்கு மூத்த சகோதரர்கள் இருவர் உண்டு. அவர்களோடு இவர் சேர்ந்து விளையாடுவார். கடைக்குட்டியானபடியால், இவரை, அவர்கள் முரட்டுத்தனமாக நடத்துவார்கள். அடித்தும் விடுவார்கள். இவரோ திருப்பி அடிக்க மாட்டார் ; தாயாரிடம் சென்று முறையிடுவார். “ அடித்தவரைத் திருப்பி அடிப்பதுதானே ?” என்று தாயார் கேட்பார். “ நன்றாயிருக்கிறதே நீங்கள் சொல்லிக்கொடுப்பது ? மற்றவர்களை அடிக்குமாறு நீங்கள் எனக்குச் சொல்லித் தரலாமா ? என்னை அடித்தவர் என் மூத்த சகோதரர். இவரை நான் அடிக்கலாமா ? அவரை மட்டுமல்ல ; யாரைத்தான் நான் ஏன் அடிக்க வேண்டும் ?” என்று பதில் கூறுவார் காந்தி. இதற்குத்தாயார், “ அண்ணன், தம்பிகள் அடித்துக் கொள்வது சகஜம்தான். இதில் தவறொன்றுமில்லை ” என்பாள். காந்தி இதற்குப்பதிலாக, “ அப்படிச் சொல்லக் கூடாது அம்மா ! அண்ணன் என்ன இருந்தாலும் வயதில் பெரியவனல்லவா ! ஆதலால் அவன் என்னை அடிக்கலாம். நான் அவனைத் திருப்பி அடிக்கக் கூடாது. அண்ணனைத் திருப்பி அடி என்று என்னிடம் சொல்லுவதற்குப் பதிலாக, அண்ணனைக் கூப்பிட்டு, “ தம்பியை அடிக்காதே என்று அவனுக்கல்லவோ புத்தி சொல்ல வேண்டும் நீங்கள் ” என்று நின்று நிதானித்துப் பேசுவார். ஆழ்ந்த கருத்துக்களடங்கிய இந்தப் பேச்சைக் கேட்டுத் தாயார் புத்ரிபாய் பூரித்துப்போவாள். அகிம்சையின் முதற் பாடத்தை எவ்வளவு சிறிய வயதில் கற்றுக் கொண்டுவிட்டார் காந்தியடிகள்

அகிம்சைக்கு இவர் கூறும் வியாக்கியானத்தை நாம் கவனிக்க வேண்டும். “ ஒரு கோப்பைத் தண்ணீர் கொடுத்தவனுக்கு இரண்டு கோப்பைத் தண்ணீர் கொடுப்பதில் எவ்வித பெருமையும் கிடையாது. கெட்டது செய்தவனுக்கு நல்லது செய்வதிலேயே பெருமை இருக்கிறது. இதைத்தான் பழிக்குச் சிறந்த பழியாக நான் கருதுகிறேன்.” “ இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல் ” என்ற வள்ளுவர் வாக்குக்கு எதிரொலி கொடுப்பது போலல்லவோ இருக்கிறது இந்த விளக்கவுரை !

அன்புக்குமுண்டோ அடைக்கும் தாழ்

1915–ம் ஆண்டில் காந்தியடிகள் சென்னைக்கு வந்திருந்தபோது, “ சுதேச மித்திரன் ” “ ஹிந்து ” பத்திரிகைகளை ஆரம்பித்தவரும், காங்கிரஸைத் தோற்றுவித்தவர்களுள் ஒருவருமான ஜி. சுப்பிரமணிய ஐயரைச் சென்று பார்த்தார். ஐயர் அப்பொழுது குஷ்ட நோயால் பெரி

[32-ம் பககம் பாாக்க]

பாண்டி நாட்டு நாடோடிப் பாடல்கள்

திரு. ராஜ. வேதசிகாமணி

மதுரையம்பதிக்கு அருகே உள்ள திருப்பரங்குன்றம் முருகனின் படைவீடுகளில் ஒன்று. மயிலேறும் பெருமானின் அருள் பூரணமாகச் சுரந்து திகழும் அந்த ஊரின் வெகு அருகாமையில்உள்ள கிராமமொன்றில், மாடி வீட்டுக்காரர், ராமுத் தேவர் பெரிய புள்ளி. அவருடைய ஒரே மகள் செல்லி என்றழைக்கும் செல்லம்மாள். அவள் இன்பச் சிறகடித்துப் பறக்கும் இளம் வானம்பாடி. கொள்ளை அழகு. மடியில் ஒடித்துக் கட்டிக்கொள்ளக் கூடிய அற்புத லாவண்யம் அவளிடம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

முத்து, செல்லியின் அத்தை மகன். ஆசை அத்தான். முரடன். ஆனால் செல்லியின் அன்புப் பார்வைக்கு முன்னால் அவன் சிறு குழந்தை.! கள்ளங் கபடமறியா இளம் பருவத்திலேயே இணைந்து வாழ்ந்த இரு இளம் உள்ளங்களும், செல்லி பருவ மங்கையானதும், பிரிவு என்ற கொடுமையிலே சிக்கிச் சிக்கி சுழன்றன.

முத்து, தாய்க்கு ஒரே பிள்ளை. ராமுத் தேவரின் தமக்கை, தாரமிழந்து அந்த ஊரிலேயே வசித்து வந்தாள். அண்ணனைப் போல் அவள் ஒன்றும் வசதி படைத்தவள் அல்ல. அவளுக்கிருந்த ஒரே சொத்தெல்லாம் முத்து தான்...

..மதுரையிலே மீனாட்சியம்மன் திருவிழா. ஊரே கலகலவென்று திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. ராமுத் தேவர், மனைவியுடன் மதுரைக்குத் திருவிழா பார்க்கச் சென்று விட்டார். அன்று மாலை எங்கோ சென்று விட்டு வந்த முத்து வரும் வழியில் மாமன் வீட்டினுள் நுழைந்தான். ஆள் அரவமே இல்லை. குரல் கொடுத்தான். பதிலுக்கு செல்லியின் குரல் உள்ளிருந்து கேட்டது. முத்துவுக்கு சொல்லொணாத மகிழ்ச்சி. அத்தானின் குரல் கேட்டுச் செல்லி ஓடிவந்து வெளி வாசல் படியில் நின்றாள். பருவம் தன் கை வண்ணத்தை அவள் மீதெல்லாம் விளையாடிவிட்டிருந்தது. தளதளத்த பயிர் போல், வாளிப்பு வண்ணம் கூட்ட, அழகுத் தேவதையாக நின்ற மாமன் மகளைக் கண்டதும் முத்து பாடத் தொடங்கி விட்டான் :—

“ ரோட்டோரம் வீட்டுக்காரி
ரோசாப்பூச் சேலைக்காரி
ரோட்டை விட்டுக் கிழேவாடி
கேட்டதெல்லாம் வாங்கித்தாரேன் !”

ஊரையே விலைக்கு வாங்கக்கூடிய மாமன் மகளுக்கு இவன் “ கேட்டதெல்லாம் வாங்கித் தருவானாம்!” என்ன தான் இருந்தாலும் ஆசை அத்தான் வாங்கிக் கொடுக்கின்ற பொருளே தனி மதிப்புடையது தானே! அவள் எவ்வளவு அழகாகப் பதில் கொடுக்கிறாள் பாருங்கள் :—

“ சுத்தியும் முள்ளுமில்ல
சூரங்கா வேலியில்ல. .
வேணுமென்ற ராசாவுக்கு
வேலி எதிருமில்ல !”..

இந்த சூட்சுமம் முத்துவுக்கா தெரியாது ? வீட்டில் ஒருவரும் இல்லையென்பதை எவ்வளவு அழகாகச் சொல் சொல்லிவிட்டாள் செல்லி ! ஒரே தாவில் வீட்டுக்குள் தாவினான் !

செல்லிக்குப் பேச நா எழவில்லை. நாணிக் கண் புதைத்தாள். மலரிதழ் போன்ற பாதங்கள் நிலத்தைக் கீறிக் கொண்டிருந்தன. என்ன தான் அத்தானாக இருந்தாலும் வீட்டுக்கு வந்த விருந்தாளி தானே ! வா என்று அழைக்கவேண்டாமா ?

“வாங்க அத்தான் !....சௌக்கியமா ? அத்தை எப்படி இருக்கிறார்கள் ?......”

“சௌக்கியம் தான் செல்லி.... அது சரி.... மாமியும் மாமனும் எங்கே காணோம் ?”

“மதுரைக்குத் திருவிழாப் பார்க்கப் போயிருக்காங்க ! ராத்திரி தான் வருவாங்க போலிருக்கு....”

இரு உள்ளங்களும் என்ன பேசுவதென்றே தெரியாமல் கிடந்தன..............

பின்பு......பிரியாத இரு உள்ளங்களும் தாற்காலிகமாகப் பிரிந்தன..........

மறு நாள்....வயல் பக்கம் செல்லி புறப்பட்டாள். முத்து வழியில் அவளைச் சந்தித்தான்.

அக்கம்பக்கத்திலே யாருமில்லே. கொஞ்சம் பழக்கமாகி விட்டதல்லவா ? கேலியாகப் பாடத் தொடங்கி விட்டான்.—

" போன வருஷத்திலே
புதுக்கனுக்குப் போட்டபுள்ள
இந்த வருஷத்திலே
ஏத்திட்டாளே தங்கநகை !"

செல்லி பேசவில்லே. முத்து மறுபடியும் பாடுகிறுன் !

" அஞ்சரப் பெட்டிக்குள்ளே
குஞ்சரம்போல் நானிருந்தேன்
பாக்காமல் போறியம்மா
படமெடுத்த நாகம்போல !"

அதற்கும் அவள் மசியவில்லே. கல் போல், உணர்ச்சிகளே அடக்கிக்கொண்டு பேசாமல் அப்படியே இருந்தாள். பெண்களால் தான் அப்படி இருக்க முடியும்! உணர்ச்சிகளே மறைத்துக்கொள்ள அவர்களால் தானே சுலபமாக முடிகிறது !

முத்துவா லேசில் விடுவான்......

" கூடமேல கூடவச்சி
குமரிப்புள்ள எங்கேபோறே ?"

செல்லி இப்பொழுது தான் வாய் திறக்கிறுள். எவ்வளவு கிண்டலுடன் வார்த்தைகள் வெளிவருகின்றன !

" ஏழுமலேக்கி அங்கே
எளவட்டம் தேடப்போறேன் !"

அவன் உச்சியில் ஓங்கி அடித்தது போல் அல்லவா பதில் சொல்லி விட்டாள்! அதற்கு மேல் அங்கு நிற்க முத்துவுக்குப் பைத்தியமா என்ன ?

ஆனுல், காலம் மறுபடியும் இருவரையும் ஒன்றுகச் சந்திக்க வைக்கிறது. மனதிற்குள் அன்பு பொங்கி வழிந்தாலும், வெளிக்குக காட்டிக் கொள்ளமாட்டார்கள் பெண்கள். அதிலும் அன்புப் போரிலே கடைசியில் முழு வெற்றி அவர்களுக்குத் தான் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனுல்தானே என்னவோ, கடைசி வரையில் விட்டுக் கொடுக்காமல், பிகு பண்ணிக் கொள்ளுகிறுர்கள். ஊடல் இல்லேயேல் ருசிக்காது அல்லவா ? அதுவும் செல்லியைப்போல் ஊடல்காரிக்கு சொல்லவ வேண்டும் ? ரொம்ப அழுத்தக்காரி. அதுவும் சொந்த அத்தான். அவனே கடைசி வரையில் அழ அழ வைத்து, திணறத் திணற அடிக்க வேண்டும் என்று அவளுக்குக் கொள்ளே ஆசை ! அவள் ஊர்க் கிணற்றில் இறங்கிக் குளித்து விட்டு வயற்காட்டுப் பக்கமாக வருகிறுள். தற்செயலாக எதிரே வந்த முத்து அவளேப் பார்த்து கிறங்கிப் போகிறுன். பாட்டு தானுக வருகிறது :—

" குன்னிமுத்துப் பாறையிலே
குனிஞ்சடிக்கும் வண்ணுப்புள்ள
நான்போட்ட சரிகைத்துண்டு
நைசா வெளுக்கவில்லே !"

அவனும் மகா குறும்புக்காரன் ! அவளுக்கு கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. எல்லாம் பொய்க் கோபம் தான்!...... "எங்கே வந்திங்க? இப்படித் தான் வயற்காட்டிலே ஒரு வயது வந்த பெண்ணே வம்புக்கிழுப்பதா?" என்று சீறுகிறுள். அவன் ஆண் பிள்ளேச் சிங்கமல்லவா...... என்ன பதில் கொடுக்கிறுன் பாருங்கள்

" நண்டுக்குழி மண்ணெடுத்து
நாகமுடி வளேயல்செய்து
பெண்டுகளேச் சிறையெடுக்க
பிறந்தேண்டி சிங்கக்குட்டி !"

வள்ளியைச் சிறையெடுத்த மயிலேறும் பெருமாள் கொலு வீற்றிருக்கும் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்தவன் அவன் என்பதை எவ்வளவு நைஸாகச் சொல்லி விடுகிறுன்! செல்லியைச் சிறையெடுக்க வந்திருக்கிறுனும்! அது மட்டுமா ? மேலும் அடுக்கிக்கொண்டே போகிறுன்?

" செம்பிலே பேரெழுதி
செவத்த புள்ளஊரெழுதி
வம்பிலே தாலிகட்டி
வாழறது எந்தவிதம் ?"

நேரடியாகப் பிரச்னேயைத் தொட்டு விடுகிறுன்..... எவ்வளவு நாளேக்கு இப்படிப்பட்ட வாழ்க்கை ? என்றைக்குக் தாலி கட்டி குடியும் குடித்தனமுமாகிறது ? ...... செல்லி ஒன்றும் பதில் பேசவில்லே. அவளாகப் பார்த்து முடிவு சொல்லி விடுகிற சமாச்சாரமா என்ன?

பேச்சை மாற்றி விடுகிறுள்.... "அத்தான்....இதோ சோளம் விதைத்து விட்டு வந்துடறேன். கிணற்றிலே இரண்டு கமலேத் தண்ணி அடிச்சுடுங்கள்.. வந்துடறேன்". என்கிறுள்..... முத்து கொஞ்சம் ஷோக் மைனர்..... கமலே அடிக்க முடியாமல் திண்டாடுகிறுன். இது தான் "சான்ஸ்" என்று அத்தானேக் கிண்டல் செய்து பாடுகிறுள் செல்லி......

" பொட்டலிலே கிணறுவெட்டி
போருக்காளே ரெண்டுமாட்டி
காப்பிக்கடை மச்சானுக்கு
கமலே ஓட்டத்தெரியலேயே !"

ஒரு சந்திப்பு, மறு சந்திப்பு. மேலும் அன்பு வளர்கிறது. ஒரு நாள் புதுத் துணி உடுத்தி செல்லி போய்க்கொண்டி

(34-ம் பக்கம் பார்க்க.)

உணர்ச்சிக் குவியலா ? உரையாடலா ?

காணிக்கை

திரு மீ. லீ. சபரிராஜன்

ஊருக்கு வெளியே பரந்த மேய்ச்சல் தரை ஒன்று இருந்தது. அங்கு புல் அடர்த்தியாக வளர்ந்திருந்தது. ஒரு பசு, புல்லைத் தின்னுமல், நின்ற இடத்தில் நின்ற படி, யோசனையில் மூழ்கி இருந்தது. அப்போது அந்தப் பக்கமாக ஓர் ஆடு வந்தது. அது பசுவைப் பார்த்ததும் "மே, அக்கா, நீ இங்கேயா இருக்கே !" என்று சொல்லி விட்டு, குதித்துக்கொண்டே அதனருகே சென்றது.

பசு திரும்பிப் பார்த்துவிட்டு, "ஆ, நீயும் வந்து விட்டாயா !" என்றது.

"அந்தப் பயல் இசக்கிமுத்து பருத்திக்கொட்டை அரைப் பதற்காகத் தெருப்பக்கம் போனுன். தொழுவத்திலே யாரும் இல்லே. "இது தான் சமயம்" என்று நான் கயிற்றை அறுத்துக்கொண்டு வந்து விட்டேன். உன்னைக் காணுமல் அங்கே இருக்க என்னுல் முடியவில்லே. இத்தனை வருஷமாகப் பக்கத்திலே பக்கத்திலே இருந்த வர்கள் அல்லவா நாம் ? மறந்து விட முடியுமா?" என்றது ஆடு.

பசு ஒரு பெரு மூச்சு விட்டது. பின்பு, "தம்பி, அவன் சவுக்குக்கட்டையாலே அடித்ததை நீ பார்த்துக் கொண்டு இருந்தாயல்லவா ? என் முதுகே ஒடிஞ்சு போச்சு. என் உடம்பெல்லாம் நோவுது" என்றது.

"உம்...விட்டுத் தள்ளு, முன்னுலே பச்சை பசேலென்று புல் இருக்கு, வயிருரச் சாப்பிடுவோம். இதெல்லாம் நமக்குப் பழகிப்போன விஷயந்தானே ? மறந்து விடுவோம். இனிமேல் கிடைக்கப் போகும் அடிக்கு உடம்பைத் தேற்றிக்கொள்வோம். கவலேப்பட்டு நடக்கப் போவது என்ன?"

"என்ன பிழைப்பு நம்ம பிழைப்பு ; கன்றுக்குட்டிக்குக் கூட வஞ்சகம் செய்துவிட்டுத் தான் பால் கொடுக்கிறேன். அப்படியிருந்தும் அவர்களுக்குத் திருப்தியே இல்லே. பால் வற்றிப்போனுல் நான் என்ன பண்ணுவேன் ? இந்த மனுஷாளுக்கு ஈவு இரக்கம் என்பதே கிடையாது. வாயில்லாச் சீவனுச்சே என்று பார்க்கிருர்களா?"

"நம்ம கஷ்டத்திலே எல்லோரையும் அப்படிச் சொல்லி விட முடியுமா ? அவர்களிடமும் நல்லவர்கள் இருக்கத் தானே செய்கிருர்கள் ?" என்றது ஆடு.

"அது யார்?" என்று வெறுப்புடன் கேட்டது பசு.

"காந்தி மகான் தான்—அவரை விட நல்லவர்கள் இருக்க முடியுமா?'

பசுவின் கண்கள் "பளிச்"சென்று ஒரு கணம் மலர்ந்தன. பக்திப்பரவசத்துடன் கண்ணை மூடிக்கொண்டு சற்று நேரம் அப்படியே நின்றது. பிறகு "ஆ! அந்த மகான் எங்களுக்கு எவ்வளவு ஆதரவாய் இருந்தார், எங்கள் மேல் அவருக்கு எவ்வளவு அன்பு இருந்தது!" என்று சொல்லிற்று.

உடனே ஆடு, "என்ன அப்படிச் சொல்லிவிட்டே! எங்கள் மேலேயும் அவர் அன்பாய்த் தானே இருந்தார். எங்களுக்கும் மதிப்பு கொடுத்தவர் அவர்தானே ; எங்கள் பாலேத்தானே அவர் சாப்பிட்டார்" என்றது.

"மெய் தான், ஆனுல் முதலாவது என் பாலேத் தான அவர் சாப்பிட்டு வந்தார். மனிதர்கள் எங்களுக்குக் கொடுக்கும் கஷ்டத்தைப் பார்த்து மனம் பொறுக்காமல் தான் அவர் அதை நிறுத்தி விட்டார். தெரியுமா உனக்குக்கதை ? ஒரு தடவை அவர் உயிருக்கே ஆபத்து வந்தது. அப்போது டாக்டர் அவரைப் பார்த்து, "பால் சாப்பிட்டால் தான் பிழைப்பீர்கள்" என்ருர். காந்தி "முடியாது" என்று சொல்லி விட்டார். பக்கத்திலே இருந்தவர்கள் எல்லோரும் கட்டாயப்படுத்திய பிறகு தான் அவர் உங்கள் பாலேச் சாப்பிட ஆரம்பித்தார். அவ்வளவு இரக்கம் இருந்தது அவருக்கு எங்கள் மேல். அந்தப் புண்ணியவானையல்லவா சுட்டுக் கொன்று போட்டார்களாம். நன்றியில்லாத மனிதர்கள்."

"அவரை நினைத்துக் கண்ணீர் விடுவதற்குக் கூட இந்த உலகத்திலே ஒரு மனிதன் இருக்க மாட்டான். நீ என்ன நினைக்கிறே?"

"ஆமாம், ஆமாம், நாமாவது அவரை நினைத்துக் கண்ணீர் விடுவோம், இன்று அவர் இறந்த நாளாம்" பசுவும் ஆடும் ஒன்றையொன்று கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்தன.

அப்போது அந்தப் பக்கமாக இசக்கிமுத்து வந்தான். அவன் கையில் ஒரு தடி இருந்தது. அவன் ஒரு ஹரிஜன். அவன் பசுவைத் தேடி வந்தான். அவன் ஆட்டைக் கண்டதும், "ஓஹோ, நீயுமா இங்கே இருக்கிறே? கூட்டுக் கள்ளர்கள் ! உங்களைத் தேடித் தேடி நான் எங்கெல்லாம் அலேவது ?" என்று கோபத்துடன் சொல்லி விட்டு வேகமாக அருகில் வந்தான்.

ஆடு திரும்பிப் பார்த்த விட்டு "அப்பா ஒரு அஞ்சு நிமிஷம் பொறு. நாங்கள் அழுகையை முடித்துக் கொள்கிறோம். அப்புறம் நீ மீதிவைத்திருக்கும் பூசையை வாங்கிக் கொள்ளுகிறோம்" என்றது.

இசக்கிமுத்து திகைத்துவிட்டு, "என் அழுகிறீர்கள் நீங்கள்?" என்று கேட்டான்.

"இன்று காந்தி மறைந்த நாள், அவரை நினைத்து ந கள் அழுகிறோம். எங்கள் மேல் அவர் எவ்வளவோ ன்பாயிருந்தார் அல்லவா, அதற்காகத் தான்".

இதைக்கேட்டதும் இசக்கிமுத்துவின் முகம் மாறியது. ஒரு கணம் அப்படியே நின்றான். அவன் கண்ணில் நீர் ததும்பிற்று. ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான், "காந்தி மகாராசா உங்களிடம்தான் அன் பாயிருந்தார் என்று நினைக்கிறீர்களா ? எங்கள் மேலே யுங்கூட அவர் அன்பாயிருந்தார். எங்களுக்காக அவர் எவ்வளவோ செய்திருக்கிறார். எங்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கச் சொன்னார். கோவில்களைத் திறந்து விடச் சொன்னார். அண்ணன் தம்பிகளைப் போல எங் களை அன்பாய் நடத்தச் சொன்னார். ஏன் ? எங்கள் பெயரை மாற்றி வைத்தவரே அவர்தான். நாங்கள் கடவுளின் குழந்தைகளாம். " ஹரிஜன் " என்றால் கடவுளின் குழந்தைகள் என்று பொருள். அது மெய்யோ பொய்யோ, நாங்கள் காந்திமகானின் குழந்தைகளாக இருந்தோம். உம், அந்த மகான் இப்போது இல்லை " அவனுக்கும் அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. அங்கு ஒரு புறமாக உட்கார்ந்து கண்ணீர் பெருக்கத் தொடங் கினான்.

அப்போது அந்த வழியாய் உழவன் பெரியகறுப்பன் வந்தான். அவன் இசக்கி முத்துவைத் தேடி வந்தான்.

" ஏண்டா, உன்னை எங்கெல்லாம் தேடி அலைவது ? அங்கே, தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் " என்று கோபமாய்க் கேட்டான்.

"இங்கே, நீ அழுதுகொண்டு உட்கார்ந்திருக்கிறாயே, என்ன விஷயம் ? "

இசக்கிமுத்து திரும்பிப் பார்த்துவிட்டு, " ஐயா, கோபித்துக் கொள்ளாதீர்கள். காந்தி மகானை நினைத் தேன். அவர் எங்களுக்குச் செய்ததையெல்லாம் நினை த்துப் பார்த்தேன். அழுகை வந்தது " என்றான்.

இதைக் கேட்டுப் பெரிய கறுப்பன் முகம் மாறியது. சற்று நேரம் அசைவற்று நின்றான். ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டான். அவன் கண்ணில் நீர் ததும்பியது. " ஆ! அந்தப் புண்ணியவான் எங்கள்மேல் எவ்வளவு அன்பாய் இருந்தார் ? எங்களுக்கு மதிப்புக்கொடுத்தவரே அவர் அல்லவா ? " இந்தத் தேசத்தின் உயிரே கிரா மங்களில்தான் இருக்கிறது " என்று சொன்னவர் அல்லவா ? அவரையும் ஒரு பாவி சுட்டுக் கொன்றானே !" இப்படிச் சொல்லி விட்டு இசக்கிமுத்துவின் அருகே உட் கார்ந்து அவனும் கண்ணீர் விடலானான்.

அப்போது அந்த வழியாய்ப் பெரிய கறுப்பனின் மனைவி குப்பம்மாள் வந்தாள். கணவன் அழுது கொண்டிருப்பதைக்கண்டு அவளுக்கு வியப்பும், கோபமும் உண்டாயின. " என்ன இது, பொழுது உச்சிக்கு வந்துவிடும் போலிருக்கிறது. தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டாமா ? இப்படி வேளான்மை பார்த்தால் பிழைப் பது எப்படி ?" என்று ஆத்திரத்துடன் கூறினாள்.

பெரிய கறுப்பன் திரும்பிப் பார்த்துவிட்டு, " கோபித்துக் கொள்ளாதே ! இன்று காந்தி மகானின் இறந்த நாளாம். அந்த மகானை நினைத்து இவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து எனக்கும் அழுகை வந்துவிட்டது. அந்தப் புண்ணியவான் குடியான வர்களுக்காக எவ்வளவோ உழைத்திருக்கிறார். அதை நினைக்காமல் இருக்க முடியுமா " ? என்றான்.

குப்பம்மாள் இதைக் கேட்டுவிட்டு, " காந்தி மகாத்மா இறந்த நாளா ! ஆ ! " என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். மாதர்களின் மேன்மைக்காக அப்பெரு மான் ஆற்றியிருக்கும் பணிகள் நினைவுக்கு வரவே: அவளுக்கும் கண்களில் நீர் ததும்பியது.

அப்பொழுது குப்பம்மாளின் கடைக்குட்டி மகன் பொன் னப்பன் அங்கு வந்தான். "அம்மா, அங்கு ஏன் அழு கிறாய் ? " என்று கேட்டான்.

குப்பம்மாள் அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு, " இங்கே என்னடா உனக்கு வேலை ? மணி ஆச்சு ; புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்கு ஓடு கிறாயா ? உதைக்கவா ? " என்றாள்.

" போகிறேன் அம்மா, கஞ்சி குடிக்காமல் எப்படிப் போவது ? என்றான் பொன்னப்பன்.

" இன்று காந்தி மகான் இறந்த நாள். அவரை நினைத்து நான் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும்போது கஞ்சி வேண்டுமாம் கஞ்சி : போகிறதுதானே ஒரு நாள் வெறும் வயிற்றோடு " என்று மறுபடியும் அதட்டினாள் குப்பம்மாள்.

" காந்தித் தாத்தாவை நினைத்து அழுகிறாயா ? அழு அழு, நானும் அழுகிறேன். நல்ல தாத்தா அவர் , எங்கள் மேல் அவர் எவ்வளவு அன்பாயிருந்தார் ' அப்பா அம்மா குழந்தைகளை அன்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லுவாராம். பள்ளிக் கூடத்திலே வாத்தியார் கூட அவர்களை அடிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறாராமே ; அந்தத் தாத்தா மாத்திரம் இப்போது உயிரோடிருந்தால், டிக்கட்டு வாங் காமலாவது ரயிலேறி அவரிடம் ஓடிப்போவேன். அவரைச் சுட்டுக்கொன்று போட்டார்களாமே ! நல்ல தாத்தர் போய் விட்டார் " என்று சொல்லிக்கொண்டே பொன்னப்பன் தன் அம்மாவின் மீது விழுந்து அழத் தொடங்கினான்.

அப்போது அந்தப் பக்கமாக உள்ளூர் முஸ்லீம் மதகுரு ஹாஜி இப்ராஹிம் சாஹ ப் வந்தார். ஆடும், பசுவும், இசக்கி

ளுத்துவும், பெரியகறுப்பனும் அழுது கொண்டிருப்பதைப் பார்த்தார். அவருக்கு அதிசயமாயிருந்தது. அவர் அருகே போனுர். சிறுவனைப் பார்த்து, " தம்பீ, என் அழுகிருய் ? " என்று கேட்டார்.

பொன்னப்பன் கண்களைத் துடைத்துக்கொண்டே, " இன்று காந்தித் தாத்தா இறந்த நாளாம் " அதற்காக அழுகிறேன் " என்ருன்.

" ஆ. அப்படியா ! பிஸ்மில்லாஹிர் ரஹ்மான் நிர் ரஹிம் ! காந்தி மகாராஜ்கி ஜே ! " என்று சொல்லி விட்டு சற்று நேரம் யோசனையில் மூழ்கினுர். பின்பு பொன்னப்பனைத் தட்டிக்கொடுத்துவிட்டு, " தம்பீ, நீ அழக்கூடாது " என்ருர் அன்பாக.

" குழந்தைகளாகிய எங்கள் மேல்தான் அவருக்கு அதிக அன்பு இருந்ததாம். அதை நினைத்தால் அழா திருக்க முடியுமா ? " என்ருன் பொன்னப்பன்.

இதைக் கேட்டதும் குப்பம்மாள் குதித் தெழுந்தாள் கோபத்துடன் , " உனக்கென்னடா, தெரியும் ? பொடிப் பயல் ! எங்கள் மேல்தான் அவருக்கு அதிக அன்பு இருந்தது " என்ருள்.

உடனே, பெரியகருப்பன் எழுந்தான். " அல்ல, அல்ல, எங்கள் மேல்தான் அவருக்கு அதிக அன்பு இருந்தது " என்ருன்.

" அல்ல, அல்ல. எங்கள் மேல்தான் அவருக்கு அதிக அன்பு இருந்தது " என்ருன் இசக்கிமுத்து.

" மே ! நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். எங்கள் மேலேதான் அவருக்கு அதிக அன்பு " என்றது ஆடு.

" பொய் ; எல்லோரையும் விட எங்கள் மேல்தான் அவர்க்கு அதிகஅன்பு " என்றது பசு.

ஹாஜி இப்ராஹிம் சாஹிப் இவற்றையெல்லாம் கேட்டு விட்டுச் சிரித்தார்.

பொன்னப்பன் எழுந்து நின்று, " தாத்தா, நீங் கள் சொல்லுங்கள், " காந்தித் தாத்தாவுக்கு யார் மேலே அதிக அன்பு ?" என்று கேட்டான்.

இப்ராஹிம் சாஹிப் தமது நீண்டு வளர்ந்த தாடியை ஒருமுறை உருவி விட்டுக் கொண்டே சொன்னுர். " தம்பீ, காந்தித் தாத்தாவின் மனம் இருக்கிறதே, அது கடலைப் போலப் பெரியது ; அங்கு எல்லோருக்கும் இடம் இருந்தது. கஷ்டப்படுபவர்கள் எல்லோர் மீதும் அவருக்கு அன்பு இருந்தது. ஒருவர் மீது அதிகம் ஒருவர்மீது குறைவு என்று சொல்ல முடியாது. கொல்ல வந்தவனைக்கூடக் கையெடுத்துக் கும்பிட்டவரல்லவா அவர்! அத்தகைய புண்ணியவான் இறந்த நாளன்று நாம் கண்ணீர்விட்டு அழக்கூடாது."

இப்ராஹிம் சாஹிப் சொல்லி முடிப்பதற்குள் பொன் னப்பன் குறுக்கிட்டான். " என்ன தாத்தா, அழாமல், பின்னே சிரிக்கவா சொல்லுகிறீர்கள் ?" என்று சற்று கோபமாய்க் கேட்டான்.

" அல்ல, தம்பீ ! காந்திமகான் எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டியதைப்போல் நாமும் எல்லோரிடமும் அன்பு காட்ட வேண்டும். அதுதான் நாம் அவருக்குச் செலுத் தக்கூடிய காணிக்கை. சும்மா அழுவதிலே என்ன இருக்கிறது ?" என்ருர் ஹ ஜி சாஹிப்.

" அச்சா ! பஹூத் அச்சா ! " என்ருன் பொன் னப்பன் ஆனந்தத்துடன்.

" பேஷ் ! நல்ல யோசனை !" என்று சொல்லிக் கொண்டே எல்லோரும் எழுந்தார்கள்.

ஆடு குதித்துக் கும்மாளம் போட்டுக்கொண்டு வீட்டை நோக்கி ஓடிற்று.

பசு ஆட்டின்பின் ஓடிற்று.

இசக்கிமுத்து தடியை வீசி எறிந்துவிட்டு, பசுவின் பின் ஓடினுன்.

" டேய், தம்பீ, மெதுவாக ஓடு !" என்று சொல்லிக் கொண்டே பெரியகருப்பன் இசக்கிமுத்துவின் பின் ஓடினுன்.

குப்பம்மாள், " வாடா ராசா, கஞ்சி ஊற்றுகிறேன் " என்று சொல்லிக்கொண்டே வீட்டை நோக்கி ஓடினுள்.

" கஞ்சி வேண்டாம், பள்ளிக்கூடம் போகிறேன் " என்று சொல்லிக்கொண்டே பள்ளியை நோக்கி ஓடினுன் பொன்னப்பன்.



"அன்பை வளர்த்து உயர்வு எய்திடுவோம்"

[திருமதி சௌந்தரா கைலாசம்

வருக பிலவ வருக !

1\. புத்தம் புதியதோர் ஆண்டுவந்தே—இன்று
பூத்தது பூத்தது என்று சொல்லி
இத்தமிழ் நாட்டினில் மக்களெல்லாம்—மகிழ்
வெய்தினர் வாழ்த்தினர் பாட்டிசைத்தே !
எத்தனை பேர்வந்து சொன் னாலும்—அதை
என்னுளம் ஏற்க மறுக்குத டி !
முத்தமிழ் வாழ்ந்திடும் நாட் டினுக்கு—நீயும்
முற்றும் புதியவள் இல்லையடி !

2 வந்தனை யாம்பல ஆண்டுமுன்னே—வெள்ளை
மக்களின் ஆட்சியில் இந்தியர்கள்
நொந்தன ராம்பல துன்பமுற்றே !—கண்டு
நொந்துகண் ணீரினை நீயும் மெத்தச்
சிந்திய வாறெங்கோ சென்றுவிட்டாய்—இன்று
தேடிவந் தாயெமை நாடிவந்தாய்
இந்திய மக்கள்சு தந்திரத்தை—எய்தி
ஏற்றம டைந்தைத் தானறிந்தே !

3 மோகனப் புன்னகைக் காந்தியவர்—முழு
மூச்சுடன் அன்னிய ஆட்சியினைப்
போகவைப் போமெனப் பொங்கியெழ,—அறப்
போரது மூண்டிட, இங்கடிமை
ஆகக்கி டந்தவர் இன்றுரிமை—தனை
அள்ளிய ணைத்துமே துள்ளுகின்றார் !
நீகளித் தோடியே காந்தியினை—இங்கு
நேருறக் கண்டிட வந்தனையோ ?

4 அன்பது கொண்டொரு காந்திமகான்—அவர்
ஆற்றிய தொண்டதன் ஆற்றலினால்
கண்கொள்ளாக் காட்சியாய் நாட்டுக் கொடி—நறுங்
காற்றில் பறந்திடும் நேரத்திலே
கண்பட்ட தோஎவர் கண்பட்டதோ —விண்ணில்
காந்தியை வேண்டி அழைத்தனரோ
என்னநி கழ்ந்ததிவ் கென்பதனை—உனக்
கெப்படிச் சொல்லுவேன் அன்புடையாய் !

5 மிஞ்சிவ ரும்மதப் பாழ்வெறியை—அடி
வேரொடு சாய்த்திடத் தானுழைத்தார்
அஞ்சவ ருந்துயர் வந்திடினும்—அவர்
அஞ்சுதல் இன்றிமுன் னேறிடுவார்
நெஞ்சினில் தூய்மை நிரம்பியவர்—எந்த
நேரமும் நல்லன எண்ணிடுவார்
கொஞ்சும்மு கத்தினில் புன்னகையே ! அது
கோடி பெறும் எனில் யார் மறுப்பார் ?

6 ஆசை அகற்றிய தூயரவர்—எங்கும்
யாருக்கும் கேடுநி னைத்தறியார்
பேசநின் றார் அவர் கூட்டத்திலே—மதப்
பித்துப்பி டித்தவன் நெஞ்சமிலான்
மாசினை நெஞ்சென வைத்திருந்தான்—காந்தி
மார்பினில் குண்டினைப் பாய்ச்சிவிட்டான்
தேசம் அதிர்ந்திடக் காந்தியவர்—நறுந்
தேகம்வி ழுந்தது பூமியிலே!

7 காந்திக் கதையிது கேட்டவுடன்—பெருங்
கண்ணீரின் வெள்ளத் தில்நீ விழுந்து
நீந்துகிறாய் இதற்கென்ன செய்வேன் —இங்கு
நீயெமக் காறுதல் தந்திடவே
போந்தனை என்றெண்ணி நாங்களெல்லாம்—உளம்
பூரித்து நின்றனம் உன்வ ரவால் !
வேந்தனின் நெஞ்சகம் சாந்திபெற—இனி
வேண்டிய நற்செயல் நாம்புரிவோம் !

8 கண்களின் நீரைத் துடைத்திடுவோம்—உயர்
காந்தியைச் சாய்த்த மத வெறியைத்
துண்டுதுண் டாகவே வெட்டிடுவோம்—அதைத்
தூளெனச் செய்திடச் சூளுரைப்போம்.
எண்ணிலாச் சாதிகள் பன்மதங்கள்—இவை
இல்லாத நன்னிலை கண்டிடுவோம்.
அன்பினால் யாவரும் ஒன்று என்றே—பெரும்
ஆனந்தக் கூத்துநாம் ஆடிடுவோம்.

9 இன்றைக்கு வையகம் பேரறிவின்—ஒரு
எல்லையை நாடியே ஓடுதடி !
நின்றிங்கே அன்பினால் ஒன்றாகி—நன்கு
நேசித்தல் இல்லார்க்கு வான்வெளியில்
சென்றிடும் கப்பல்கள் ஏதுக்கடி—நீயே
செப்பிடு ! என் பயன் வெற்றறிவால் !
என்ன செடி வளர்த் தென்ன பயன்—நெஞ்சில்
ஈரம்சி றிதேனும் இல்லாமலே

10 காலை மலர்ந்திடும் தேன்மலரும்—சென்று
காற்றில் பறந்திடும் காய் சருகாய் !
வேலைப் பழித்திடும் கூர்விழியால்—மிக
மேன்மை அடைபவள கையினிலும்
கோலைக் கொடுத்திடும் காலமதன்—திருக்
கூத்தைக் குறிப்பாலு ணர்த்து ...ம்.
வேலையை மேற்கொண்டு வந்தவளே ! வெகு
வேகமாய் ஓடிடும் இவ்வாழ்வே !

11 என்னென்ன வித்தைகள் செய்தாலும்—இங்கே
எத்தனை சொத்துக்கள் சேர்த்தாலும்
மண்ணிந்த வாழ்வென்று தானறிந்தே—உயர்
வானை அளந்திடும் பேரறிவோ(டு)
அன்பை வளர்த்துயர் வெய்திடுவோம்—அழி
யாதிந்த வையத்தைக் காப்பமெனும்
எண்ணத்தை மானுடர் நெஞ்சி லெலாம்—நிதம்
ஏற்றிடு ஏற்றிடு நற்பிலவ !

12 மேற்றிசை மூழ்கிய செங்கதிரோன்—இன்று
மீண்டுமெ ழுந்தனன் கீழ்த்திசையில்
நாற்றிசை யும்ஒளி தான்பரப்பி !—இந்த
நாளினில் காலம்ப றப்பதனைச்
சாற்றிட வந்தனை வந்தனையே—பழம்
சார்வாரி சென்றனள் தன்வழியே !
போற்றிம கிழ்ந்திடும் எம்முளத்தில்—நன்றி
பொங்கிப் பொழிந்திடும் ; ஏற்றருள்வாய் !

[தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று சென்னை வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது]

1, 2. முத்துப்பேட்டை பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா தொழில்துறை அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

3. மீஞ்சூர் பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா, உள்நாட்டுத் துறை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

4. உத்திரமேரூர் பஞ்சாயத்து யூனியனின் கூட்ட மண்டபத்தை, மத்திய அமைச்சர் ஸ்ரீ எஸ். கே. டே அவர்கள் 19–4–61-ல் திறந்து வைத்தார்கள்.





சென்னையில் உள்ள தமிழ் நாடு மண்பாண்ட [illegible] காகித விளையாட்டுச் சாமான்கள் தயாரிக்கும் கூட்டுறவு சங்கத்தின் வேலைப்பாடுகளைப் படங்கள் விளக்குகின்[illegible] இந்த மாதிரி கைத்தொழில் நிறுவனங்கள் தமிழகத்தின் கை வண்ண வேலைப்பாடுகளுக்கும், கிராமியக் கலை[illegible]ச்சிக்கும் அழகுணர்ச்சிக்கும் சான்றாகத் திகழ்கின்றன.

R.P

ன்னை மத்திய தொழில் நுணுக்கப் பள்ளியின் டணவு விடுதி ஆண்டுவிழா 5-4-61-ல் நடைபெற்றது.

மத்தியில்.—கலைஞர்களுக்குப் பாராட்டு.—சிறந்த கலைஞர்களை சென்னை நாடக சங்கம் சமீபத்தில் பாராட்டி. கௌரவித்தது.

சென்னை கவர்னர் அவர்களிடமிருந்து பரிசு பெறுகிறார் திருமதி எம். எஸ். திரௌபதி,

பரிசுகள் பெற்ற மற்ற கலைஞர்களையும் படத்தில் காணலாம்.



பூண்டி பஞ்சாயத்து யூனியன் துவக்க விழா. மக்கள் உற்சாகத்துடன் விழாவில் கலந்து கொண்டனர்.



கேள்வியும் பதிலும்

பஞ்சாயத்து வளர்ச்சியைப் பற்றி எழக்கூடிய பல்வேறு கேள்விகளுக்கு 'கிராம நலம்" அதிகாரபூர்வமான பதில்களைத் தந்துவருவதைப் பல நேயர்கள் வரவேற்றும், பாராட்டியும் எழுதி வருகின்றனர். இந்தக் கேள்வி அரங்கம் மேலும் சிறந்து விளங்கவேண்டும் என்று விரும்புகிறோம். எனவே, கேள்வி கேட்கும் அன்பர்கள், சில முக்கிய குறிப்புகளைக் கவனத்தில் வைத்துக்கொள்வது நலம்.

இத்துறையில், சட்டசபை அனுபவமும், செயல் முறையும் ஜனநாயக வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளன. சட்டப் பேரவையில், மக்கள் பிரதிநிதிகள் கேள்வி கேட்கும்போது, எத்தகைய ஒழுங்கு முறையைக் கையாள வேண்டும் என்பது குறித்து ஒரு சிறு நூல் வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டின் சட்டப்பேரவை இலாகா (Legislature Department) இதை வெளியிட்டுள்ளது. சட்டசபை, (Legislative Assembly) சட்டமன்றம் (Legislative Council) ஆகிய இரண்டும் சட்டப்பேரவை என்ற சிறப்புப் பெயரால் குறிக்கப்படுகின்றன. மக்கள் நலனுக்கான பொது விஷயங்களைக் குறித்து, அரசாங்கத்திடமிருந்து அதிகார பூர்வமான செய்திகளையோ, விளக்கங்களையோ பெற விரும்புவோர், கடைப்பிடிக்கவேண்டிய முக்கிய விதிமுறைகள் அந்நூலில் பின்வருமாறு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன :—

1. கேள்வியைத் தெளிவு படுத்துவதற்குத் தேவையில்லாத, ஒரு பெயரையோ, அல்லது விவரத்தையோ தெரிவிக்கக் கூடாது.

2. கேள்வியிலிருக்கும் விவரங்களுக்கு, கேள்வி கேட்போரே, பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

3. கேள்வியில், செய்தித் தாளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பாகங்கள் அடங்கி இருக்கக் கூடாது.

4. வாதங்களோ, அனுமானங்களோ, கேலிச் சொற்களோ அல்லது அவதூறான விவரங்களோ இருக்கக் கூடாது.

5. கருத்து அறிவிக்கும்படி கேட்பதாகவோ, கொள்கை அளவில் உள்ள சட்டப் பிரச்சினைக்கோ, அல்லது கற்பனையான ஒரு பிரச்சினைக்கோ, முடிவு சொல்லும்படியோ இருக்கக்கூடாது.

6. ஒருவருடைய உத்தியோகத்தை ஒட்டியிருந்தாலொழிய, தனிப்பட்ட நடத்தை அல்லது ஒழுக்கத்தைப் பற்றிக் கேட்கக்கூடாது.

7. தனிப்பட்ட அல்லது குறிப்பிட்ட இடத்திற்கு மட்டும் சம்பந்தப்பட்ட ஒரு குறையைப் பற்றிக் குறிப்பிடக்கூடாது.

8. ஒரு நீதிமன்றத்தின் விசாரணையில் இருக்கும் விஷயத்தைப் பற்றியோ, உயர்நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரின் நடத்தையைப் பற்றியோ கேட்கக்கூடாது.

9. மிக நீண்ட கேள்வியாக இருக்கக்கூடாது.

10. ஏற்கெனவே பதிலளிக்கப்பட்ட கேள்வியை மீண்டும் கேட்கக்கூடாது.

பஞ்சாயத்து ஆட்சி முறையில் ஆர்வம் கொண்டவரும், நடைமுறையில் விளக்கம் பெற விரும்புகின்றவரும், இக் குறிப்புக்களை மனத்தில் கொண்டு, கேள்விகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர், " கிராம நலம்."

கேள்வி : 1 (அ) 19-1-1957 தேதியிட்ட அரசாங்க ஆணை (எண். 171) யில் வரையறுக்கப்பட்டுள்ள 15 சத வீத நன்கொடை வசூலிக்கவேண்டும் என்பது இப்போதைக்கும் வலியுறுத்தப்படுகிறதா ?

1 (ஆ) அவ்வாறாயின், பஞ்சாயத்து யூனியன் மன்றம், நிலவரியின் மீது விதிக்கப்படும் தல சர்சார்ஜ் 25 சத வீதத்துக்கு மேற்படாமல் விதித்து, வசூலாகும் அத்தொகையிலிருந்து 15 சத வீதம் பொது நன்கொடைக்கு எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாமா ?

பதில் : (1) (அ) நன்கொடை வசூலிக்கும் விஷயம் 16-8-1960 தேதியிட்ட அரசாங்க ஆணை (எண். 664)-யில் கூறப்பட்டுள்ள முறைப்படி, ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். அரசாங்க மானியங்களைப் பெறுவதற்கான விதிகளில், வரி விதிப்பு விகிதத்தை உயர்த்துதல், குறிப்பிட்ட விகிதாசாரப்படி பொது நன்கொடைகள் வசூலித்தல் முதலானவைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. ஆகவே மேற்குறிப்பிட்ட 19-1-1957 தேதிய அரசாங்க ஆணை (எண். 171) யின் படி, இனிமேலும் தனியாக 15 சத வீதம் பொது நன்கொடை வற்புறுத்தப்படத் தேவையில்லை.

1(ஆ) 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 116-வது பிரிவின் கீழ் தல சர்சார்ஜ் விதித்தலைப் பற்றி ஏற்கெனவே, கிராம அபிவிருத்தி— தல நிர்வாகத் துறையின், 23-3-61 தேதியிட்ட அரசாங்க ஆணை (664)யில் விளக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் ஒரு ரூபாய் நிலவரியில் 25 ந.பைக்கு அதிகமாகவும் செஸ் சர்சார்ஜ் வசூலிக்க யாதொரு தடையும் இல்லை.

ஆனால், பஞ்சாயத்து யூனியன், அதன் சட்ட வரம்புக்குட்பட்ட வேலைகளுக்கான நிதியை, வளர்ச்சித் திட்டங்களுக்கான நன்கொடைகளாக எடுத்து உபயோகிக்கக் கூடாது. பஞ்சாயத்து யூனியன் தற்போது விதித்திருக்கும் வரி விதிப்பு, வளர்ச்சித் திட்டங்களுக்கான நன்கொடை நிதிகளுக்குப் போதவில்லை என்றால், மேலும் புது வரி விதிப்பதன் மூலமாகவே அந்தப் பற்றாக்குறையை ஈடு செய்துகொள்ளவேண்டும்.

"கடிதக் கருத்தரங்கு"

ஐயா,

"கிராமநலம்"—பத்திரிகையில் "கடிதப் பேச்சு" என்ற பகுதியில் "ஊருக்கு நல்லது சொல்வேன்" என்ற தலைப்பில் பஞ்சாயத்துத் தலைவர்களுக்குத் தாங்கள் எழுதிவரும் அரிய கருத்துக்களையும், சிறந்த ஆலோசனைகளையும் விடாமல் தொடர்ந்து படித்து வருகின்றேன். உண்மையிலேயே, தாங்கள் தற்போது எழுதிவரும் கருத்துக்களும், தங்கம் நிகர் எண்ணங்களும், "ஒப்பில்லா சமுதாயம்" அமைக்க அவசியம் பயன்படும் என்பது என் எண்ணம். இருப்பினும் "ஊரெல்லாம் ஒரு குடும்பம் ஆக வேண்டும். ஊரில் உள்ளவர்கள் எல்லாம் ஒருமித்து உழைக்க வேண்டும்" என்று சூளுரைத்துக்கொண்டு, சபதம் எடுத்துக்கொண்டு, சமுதாயச் சீரமைப்புப் பணியில் நாம் ஈடுபட்டால் நிச்சயமாக வெற்றி காண்போம் என்பதில் என்ன உறுதி இருக்கிறது?

"எல்லோரும் ஒரு குடும்பம் ஆக வேண்டும். ஜாதி மத பாகுபாடே கூடாது. பிறவியில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற நிலை இருக்கக்கூடாது" என்றுதான் நானும் ஒரு பஞ்சாயத்துத் தலைவன் என்ற முறையில், தாங்கள் சொல்லிவருவதுபோல், இப்பகுதி மக்களுக்குச் சொல்லிவருகின்றேன். ஆனால், இங்குள்ள மக்கள் "சாதியே கூடாது என்கிறீர்களே, சாதியை ஒழிக்க இந்த அரசாங்கம் சாதித்தது என்ன" என்று என்னிடம் கேட்கும்போது, உண்மையிலேயே அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைக்கிறேன். திணறுகிறேன்.

ஹரிஜனங்கள் பொதுக் கிணற்றில் பிறமக்களுடன் ஒன்று சேர்ந்து தண்ணீர் எடுத்துச் செல்லும் காட்சியும், உணவு விடுதிகளில், எல்லோரும் ஓரினம் என்ற நினைவில் சமமாக இருந்து உணவருந்தும் காட்சியும் என்று இந்த சமூகத்தில் வருமோ அன்றுதான் "சாதி" முழுக்க முழுக்க ஒழிந்தது என்று கூற முடியும். இதைச் செய்யவே அரசாங்கம் முன்வரவேண்டுமே ஒழிய, "ஒன்றே குலம் என்று சொல்வீர்" "தீண்டாமை வேண்டாம்" என்பன போன்ற விளம்பரத் தாட்களை அச்சடித்து வெளியிடுவதோடு தன் பணி முடிந்துவிட்டது என்ற பொறுப்பற்ற முறையில் அரசாங்கம் நடந்து கொள்ளக்கூடாது என்று பணிவான முறையில் என் தாழ்மையான கருத்துக்களைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் "சாதியை" ஒழிக்க இன்னும் பல அரிய யோசனைகளையும், நல்ல திட்டங்களையும், "கிராம நலம்," "கடிதப் பேச்சு," கருத்தரங்கு மூலம் மக்களுக்கு எடுத்துக்கூறும் பொறுப்பைத் தாங்கள் ஏற்று நடத்தி, இந்த ஒப்பற்ற பணியில் எங்களைப்போன்ற பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவ்வப்போது உதவவேண்டும் என்று தாழ்மையுடன், கேட்டுக்கொண்டு கடிதத்தை முடிக்கிறேன். வணக்கம்.

கே. ரத்தினவேல்,

தலைவர், கபிலக்குறிச்சி பஞ்சாயத்து.

கவியரசரின் கருத்தோவியங்கள்

"நான் தொடங்கி வைத்த காரியங்களிலும், பேசிய பேச்சுக்களிலும் ஓர் ஆழ்ந்த ஒற்றுமை உணர்வு இருப்பது புலனாகிறது; வெகு காலமாக எப்படி விளக்குவதென்று எனக்கே புலப்படாமல் இருந்த விஷயம் இது".

"முக்தி அல்லது விடுதலை எளிதில் கிட்டிவிடாது. மென்னியைப் பிடித்து அதைக் கொண்டுவந்துவிடவும் முடியாது. நாமே நம்மை அறிவதில் ஈடுபட்டு, நம்மை மறந்தால்தான் அது கிட்டும். அடிமைத்தனம் எந்த உருவில் இருந்தாலும் சரி, நம் அந்தரங்கத்தில்தான் அது குடிகொண்டிருக்கிறதே தவிர, வெளியுலகத்தில் இல்லை. நம் உள்ளுணர்வு அல்லது பிரக்ஞை மங்கிவிடுவதால்தான்—நாம் பொருளைத் தவறாக மதிப்பிடுவதால் தான், அடிமைத்தனமே தோன்றுகிறது".

"திறமையுடன் வாழவேண்டுமென்றால், உலகத்தில் தான் கண்ட அனுபவ உண்மைகளையும் அவற்றின் விதிமுறைகளையும் மனிதன் உணர்ந்தாக வேண்டும். அமைதியுடன் வாழ்வதற்கு, அவன்தனக்குச் சம்பந்தமுள்ள எல்லாவற்றோடும் ஒத்துப்போக வேண்டும். உலகப்படைப்பே இத்தகைய உறவை அந்த நிலைமைக்கு ஏற்றபடிமாற்றி அமைத்துக்கொள்வதிலேதான் இருக்கிறது."

"சத்தியம் என்பது மனிதனோடு சம்பந்தப்பட்டது. எதனால் நாம் பாதிக்கப்படுகிறோமோ, அதுவே சத்தியம்; இதை ஆழ்ந்து உணர்ந்தால், நம்மை நாமே உணர்ந்தவர்கள் ஆவோம். இதனால் நமக்கு ஆனந்தம் ஏற்படுகிறது. நம் வாழ்வே, இதில்தான் இருக்கிறது. இந்தச் சத்தியத்தின் எல்லையை நாம் எப்போதும் விரிவாக்கிக் கொண்டே இருக்கிறோம். மனிதனிடம் அடிப்படையாக உள்ள "சத்தியம்" என்ற இந்த ஆக்க முயற்சிக்கு அறிகுறியாகவே நம் கலைகளும், இலக்கியங்களும் விளங்குகின்றன."

—கவியரசர் தாகூர்.

("மனிதனின் சமயம்" என்ற நூலிலிருந்து).

மூன்றாவது அட்டைப்படத்தில் வெளியாகி இருக்கும் தாகூர் நிழற்படம் அளித்து உதவியவர்கள் :—தாகூர் மன்றத்தார் (Tagore Academy) சென்னை-18.]

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

வருவாய்த் துறைகளை மட்டும் அல்லாமல், செல வினங்களையும் இப்புள்ளி விவரங்கள் தெள்ளத் தெளிய விளக்குகின்றன. ஆண்டொன்றுக்கு, இந்தக் கிராமத் திலிருந்து சினிமா, பீடி, சிகரெட் என்று இந்த வகை யில் எவ்வளவு பணம் செலவாகிறது என்று புள்ளி விவரக் கணக்கெடுத்திருக்கிறார்கள். பத்தாயிரம் ரூபாய் க்கு மேல், ஆயிரம் பேர்கள்கூட இல்லாத இக் கிராமத்திலிருந்து வருடமொன்றுக்கு, பீடி சிகரெட், வெற் றிலைப் பாக்கு, சினிமா, என்று இந்த அம்சங்களுக்குச் செலவாகிறதாம். தனித்தனியாக, சிறுசச் சிறுகச் செலவழிக்கும்பொழுது ஒன்றும் தெரிவதில்லை; ஆனால் மொத்தமாக எடுத்துப் பார்க்கும் பொழுது, பல்லாயிரக் கணக்கான ரூபாய் என்று கணக்குக் காட்டும் பொழுது, கிராமவாசிகளுக்கு பிரமிப்புத் தட்டிவிட்டது. பாடுபட்டு உழைத்த பணம் பல்லாயிரக்கணக்கில் நகரங்களில் கொட்டி வீணுக்கப்படுவதை எந்த உண்மையான கிராம வாசியும் விரும்ப மாட்டான் அல்லவா? இந்தக் கிரா மத்தில் இப்பொழுது ஒரு பீடி, சிகரெட் கடை கூட கிடையாது. யாரும் கிராமத்தில் பீடியோ, சிகரெட்டோ பிடிக்கக்கூடாது. இது கிராமத்தின் கண்டிப்பான உத் தரவு. நப்பாசை பிடித்த கிராமவாசிகள் சிலபேர் இதற் காகக் கல்லுப்பட்டி போன்ற பக்கத்தில் உள்ள நகரங்களுக் குச் சென்று கொண்டிருந்தவர்கள்கூட, இப்பொழுது மெல்ல மெல்ல இப் பழக்கத்தைவிட்டு வருகின்றனர். ஹோட்டல்களில் சென்று இக் கிராம மக்கள் காபி முத லியன அருந்துவதில்லை. கிராமத்தில் உழைத்துப் பாடு பட்டுச் சேர்த்த பணம் நகரங்களில் தேவையில்லாத வழி களில் விரயமாக்கப்படுவதை அவர்கள் வெறுக்கிறார்கள். 'காடனேரி' மட்டுமல்ல. மற்ற எல்லா கிராமங்களிலும் கிராம மக்களே முன்வந்து, தங்கள் தங்கள் கிராமங் களில் இந்த மாதிரி தேவையில்லாத செலவு களுக்கு தங்கள் கிராமத்துப் பணம் எவ்வளவு விரய மாக்கப்படுகிறது என்று புள்ளி விவரக் கணக்கெடுத்துப் பார்த்தால், அதனால் ஏற்படுகின்ற மனமாற்றம் மிகப் பெரிய அளவில் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பயன் அளிக்கும் பணி

"காடனேரி" கிராமத்தில் எடுக்கப்பட்ட மாதிரி புள்ளி விவரக் கணக்கு (Sample Survey) பெருத்த பயனை அளித்துள்ளது. அந்தக் கிராமத்தைப் பற்றி எல்லாத் துறைகளிலும் அவசியமான தகவல்களை அது தருகின் றது. ஆகவே, தங்கள் கிராமத்தின் பொருளாதார நிலை பற்றி, கல்வி நிலை பற்றி, வேளாண்மை நிலை பற்றி, வரவு செலவினங்கள் பற்றியெல்லாம் அந்தக் கிராம மக்கள் மிகவும் தெளிவான முறையில் புரிந்து கொள்ள அது உறுதுணை செய்கிறது. இருக்கின்ற நிலைமையைக் கொண்டு, மேலும் மேலும் என்னென்ன நடவடிக்கைகள் எந்தெந்தத் துறையில் எடுக்க வேண்டுமோ, அவை களைச் செய்ய கிராம மக்களை நல்ல முறையில் தூண்டி விடுகிறது. கிராம மக்களே தங்கள் கிராம நல்வாழ்விற்கான திட்டமொன்றைத் தாங்களே தயாரித்துக் கொள்ள, இது நல்ல ஊக்கத்தையும் ஆர்வத்தையும் அளிக்கின்றது.

கிராமத்தில் "விவசாய இளைஞர் மன்றம்" என்று ஒரு சக்தி வாய்ந்த ஸ்தாபனம் நடைபெற்றுவருகிறது. இந்த மன்றத்தில் 20 இளைஞர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். ஒவ்வொரு இளைஞரிடமும் 30 பொலி ஆடுகள் பராமரிப்பில் உள்ளன. மொத்தம் இவர்களிடம் 600 ஆடுகள் உள்ளன. இந்தப் புள்ளி விவரக் கணக்கை கிராமத்தில் எடுக்க வட்டாரவளர்ச்சிப்பணி யாளர்களுக்கும் இந்த விவசாய இளைஞர் மன்றத்தினர் உருப்படியான முறையில் ஒத்துழைத்து வெற்றி காணச் செய்துள்ளனர்.

இந்த ஊரை ஓர் அழகிய ஊருணி இரண்டாகப் பிரிக் கின்றது. நான்கு பக்கமும் பச்சைப் பசேலென்று, மர கதப் படுதா விரித்தாற் போல் நெற் கதிர்கள். நடுவே ஊர். ஊரணியில் வடக்கு கிழக்குக் கரையாக ஓர் சிறு குன்று உண்டு. இக்குன்றின் மீது பெருமாள் அமர்ந் துள்ளார். இந்த ஊருணிக் கரையின் மீது அழகிய புளிய மரங்களும், வேப்ப மரங்களும் உள்ளன. மரங்களின் மத்தியில் ஹரிஜனத் தெருவை நோக்கி பிள்ளையார் கோயில் ஒன்று இருக்கிறது. இக்கோயிலும், அழகிய மரங்களும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒரு சாமியாரால் அமைக் கப்பட்டனவாம்.

ஊரின் கிழக்குப் பகுதியில் ஹரிஜன மக்கள் குடி யிருக்கின்றனர். இங்குள்ள ஹரிஜன மக்கள் சமுதாய அபிவிருத்திப் பணியில் மிகவும் ஆர்வமிக்கவர்கள். கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரம நிர்வாகி திரு ரா. குருசாமி நாடார் அவர்கள்தான் எங்களுடைய குரு என்று கிராம மக்கள் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்கின்றனர்.

கிராம வாலிபர்கள் அடங்கிய "தக்கர் பாபா வாலிபர் சங்கம்" என்று ஒன்று இங்கே இருக்கிறது. ஊருக்கு மத்தியில் காளியம்மன் கோயில் உண்டு. பொதுச் சாவடி ஒன்று அழகாக இருக்கின்றது. "தக்கர் பாபா வாலிபர் சங்கத்தினர்" பஞ்சாயத்து நிதி உதவியுடன், அழகிய சமுதாய மன்றம் (Community Hall) ஒன்று அமைத்துள்ளனர்.

காந்தி வாசகசாலை ஒன்று இருக்கின்றது. இந்த வாசகசாலை 1950-ம் ஆண்டில் மண் சுவர்களுடன் அமைக் கப்பட்டு திறக்கப்பட்டது. இந்த வாசகசாலையை அடுத்து 'வைத்தியநாத அய்யர் பூங்கா' ஒன்று இருந்தது. இப் போது அது நல்ல நிலையில் இல்லை. வாசகசாலையைத் திறந்து வைத்தவர் ஆந்திராவைச் சேர்ந்த ஒரு காந்தி ஊழியர். வாசகசாலை திறப்பு விழாவின் பொழுது ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாம். பொதுவாக, இந்த மாவட்டத் தில் பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த பெண் குழந்தை களின் காதுகளில் துவாரம் செய்து, பஞ்சால் துவாரத் த்தை அதிகப்படுத்தி ஈயக்குழைகளைப் போடுவார்கள், பருவ

மடைந்த பின்னர், தங்கத்தினுல் ஆன தண்டப்பூ போடு வார்கள். அழகிய சிறு ஹரிஜன குழந்தைகள் வாசக சாலைத் திறப்பு விழாவின்போது மேற்சொன்ன குழை களுடன் அமர்ந்திருந்தனர். ஆந்திரத்திலிருந்து வந்திருந்த காந்திய ஊழியர் இனிமேல் இந்த அநா கரிகப் பழக்கத்தை விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டு, தன் முன்னுல் அமர்ந்திருந்த ஒரு பெண் குழந்தை (7வயதுச் சிறுமியின்) கழுத்தில் தனக்களிக்கப்பட்ட மாலையை அணி வித்து, இக்குழந்தையின் காது மீண்டும் செப்பனிடப் பட்டு இதை நன்கு படிக்க வைக்க வேண்டுமென உருக்க மாகக் கேட்டுக்கொண்டார்கள். அந்தப் பேச்சு கிராமத்து மக்கள் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது. அந்த வயதுள்ள சிறுமிகளின் காதுகள் செப்பனிடப்பட்டன. இப்போது இந்தப் பழக்கத்தை யாருமே கைக் கொள்ளுவதில்லை. அந்தப் பெண் குழந்தை இப் போது கல்லூரியில் படிக்கின்றுள். காடனேரி கிராமத் தில் இப்போது மூன்று பட்டதாரிகள் உள்ளனர். இதில் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர் ஒருவர். சின்ன மணி என்று ஒரு பையன் இருக்கிறுன். இவன் கிசான் ராட்டையில் மிகவும் சன்னமாக அளவான நூல் (Nice Yarn) நூற்கிறுன். இவன் நூல் நூற் கும் திறமையே அலாதியானது. இவன் நூலின் தரத் திற்கும் ஏற்ப நெசவுத் தறி திருப்பூரில் தான் இருப்ப தாகச் சொல்கிருர்கள். பொதுவாகவே, காடனேரி கிராமத்தில் ஹரிஜன மக்கள் எல்லோருக்கும் நூல் நூற்கத் தெரிகிறது. சிலம்பம் விளையாடும் வாலிபர்கள் அநேகர் இக்கிராமத்தில் உண்டு.

வட்டார வளர்ச்சி அலுவலரால் இக்கிராமத்தில் ஒரு மாதர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பெண்கள் நல்ல உற்சாகத்துடன் வேலை செய்கிருர்கள். நல்ல உழைப்பாளிகள். நல்ல முறையில் ஊக்குவிக்கப்படுகிருர் கள். 80 ஏக்கர் நிலத்திற்கு மேல் ஜப்பானிய விவசாய முறை கையாளப்படுகிறது.

காடனேரி கிராமம் சிறிதானுலும், செய்துள்ள பணி பெரிது. கிராமத்தில் மாதிரி புள்ளி விவரக் கணக்கு எடுத்தது பெரிய காரியம். கிராம மக்களிடையே ஒரு புத்துணர்வையும், புது விழிப்பையும் இது ஏற் படுத்தியுள்ளது.

கிராமத்தில் 7 நாட்களுக்கு மேல் இந்தப் புள்ளி விவரக் கணக்குப் பொருட்காட்சி நடத்திக் காண்பிக்கப் பட்டது. கூட்டுறவு நீர்ப்பாசன சங்கம் ஒன்று அமைக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதை நிறுவுவதற்கான எல்லா வேலைகளும் அநேகமாக எடு த்து முடிந்து விட்டன. நீர்ப்பாசன வசதியின்மையால், கிராம மக்கள் இப்படிப்பட்ட சங்கத்தை அமைப்பதில், மிகுந்த அக்கறை காட்டுகின்றனர்.

"காடனேரி" கிராமம் எல்லா வகையிலும் முன் னேற்றப் பாதையில் ஏறு நடைபோடக் காரணமாக இருப் பது, அக்கிராமப் பஞ்சாயத்துதான். இந்த வலுவான ஸ்தா பனம் எல்லா மக்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு நல்ல பணிகளைச் செய்து வருகின்றது. தொண்டுள்ளம் படைத்த ஏராளமான இளைஞர்கள் இக்கிராமத்தில் உள்ள னர். அத்தனைபேரும், கிராமப் பஞ்சாயத்தை ஒரு மைய யாக வைத்துக்கொண்டு, எல்லாத் துறைகளிலும் சீரிய முறையில் பணியாற்றுகின்றனர். சிறந்த பணியாற் றும் பஞ்சாயத்து காடனேரி, மற்ற கிராமங்களுக்கு நல்ல வழிகாட்டியாகத் திகழ்கிறது எனலாம்.

[6-ம்பக்கத் தொடர்ச்சி.]

அளவில் பெருகியுள்ளன. பொறுக்குவிதைகளைப் பொறு த்தமட்டில், இராஜஸ்தானத்துக்குத் தேவையான விதை களை அங்குள்ள விதைப்பண்ணைகளே உற்பத்தி செய்து கொள்கின்றன.

கடந்த ஓராண்டுக்காலத்தில் கிராமத் தொழில்களைப் பொறுத்த மட்டில், தேவையான ஊக்கம் காட்டப்பட வில்லை என்பது உண்மையே. இந்த உண்மையை மாநில அளவிலும், வட்டார அளவிலும் உள்ளவர்கள் உணர்ந்தே உள்ளனர். இக்குறைபாட்டுக்குக் காரணம், மாநிலத்தில் தொழில்துறை வல்லுநர்கள் போதிய அளவு இல்லாமையேயாகும். இக்குறையை நீக்கச் சில அதிகாரி களை, உத்தரப்பிரதேசம் முதலான அண்டை மாநிலங்க ளுக்குப் போதிய பயிற்சிபெற்றுவர அனுப்பியுள்ளனர். மாநிலத்துக்குள்ளேயும் தொழிற் பயிற்சி நிலையங்களைத் துவக்க எண்ணியுள்ளனர். இத்திட்டங்கள் நிறைவேற்றப் படுமாயின், இப்பொழுது வேலையில்லாமல் இருப்போர் பலர், இதனுல் பெரிதும் பயனடைவர்.

பஞ்சாயத்து ஆட்சியின் பெருமை

இராஜஸ்தான் முழுதும், பஞ்சாயத்து ஆட்சியைத்துவக்கி செயல்படத் தொடங்கியது நிர்வாக அடிப்படையில் பெரிய அளவில் செய்யப்பட்ட மகத்தானதொரு புரட்சியின் முதற்படி என்பதில் ஐயமில்லை. ஏனெனில், குறிப்பாக அம் மாநிலமக்கள், நிலப் பிரபுக்கள், மகாராஜாக்கள், ராணுக்கள், ஜாகீர்தார்கள் முதலானுேரிடம் அடிமைகளாய் இருந்து அடங்கிக் கிடந்தகாலம் ஒன்றுண்டு. ஆனுல், இன்று அவர்கள், அரசியலில் ஏற்பட்ட மாறுதல்களினுல், பல புதிய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் அவாவுடையவர் களாய் விளங்குகின்றனர். ஆனுல், பஞ்சாயத்துத் தேர் தல்களில், சாதி வெறியும், கட்சிப் பூசல்களும் தலை தூக்கியிருக்கும் நிலை மிகவும் வெட்கப்படத்தக்கதொன்று கும். இது தவிர்க்க முடியாததாக உள்ளது. கால ஓட்டத் தில், மக்கள் அறிவு வளர வளர, இவை தாணுகவே மறைந்து விடும் என்று நம்பலாம்.

இறுதியாக, பஞ்சாயத்து ஆட்சியைப் பற்றிப் பொது வான அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டுமானுல், அது மக்களுடைய சமுதாய வாழ்வில் பல நன்மைகளை விளைத் துள்ளது என்று சொல்ல வேண்டும். இந்த நிறுவனங் களின் முடிவுக்கு வரும் வழக்குகள் பலவும் சமரசமாகத் தீர்த்து வைக்கப் படுகின்றன. வாதிப்பிரதி வாதிகளை விசா ரித்தல், சாட்சிகளை விசாரித்துப் பதிவு செய்துகொள்ளுதல், முதலானவை முறைப்படி நடப்பதில்லை என்று நாங்கள் சென்ற பல இடங்களில் கூறினர். பஞ்சாயத்துக்கள் மக்க ளின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றுள்ளன. பஞ்சாயத்து நீதி பரிபாலன விஷயத்தில் எந்தக் குறையை யும் யாரும் எங்களிடம் கூறவில்லை. விதிக்கப்படும் அபராதத் தொகை எல்லாம் வசூலிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் வருவாயுடன் சேர்த்துக்கொள்ளப் படு கின்றன. அவை கிராம வளர்ச்சிக்குப் பயன்படுகின்றன.

ஆந்திரப் பிரதேசம்

ஏறக்குறைய, இராஜஸ்தானத்தில் துவக்கப்பட்ட அதே நேரத்தில் தான், ஆந்திரப் பிரதேசத்திலும் பஞ்சாயத்து ஆட்சி துவக்கப்பட்டது. ஆந்திரப்பிரதேசத்தில் பொதுஜனப் பிரதிநிதிகளிடம் பொறுப்புக்கள் மாற்றப்பட்டதன் விளை வாக ஏற்பட்டிருக்கும் மாறுதல், எங்களுக்கு மிக மிகத் திருப்தி அளிப்பதாக இருந்தது. தங்கள் பொறுப்புக்களைப் பகுத்துணர்ந்து பணியாற்றுகின்ற திறனும், தங்களால்

முடிந்த அளவு வளர்ச்சிப் பணிகளைச் செய்யக் காட்டப்படும் ஆர்வமும் அவர்களிடையே மிகுந்திருக்கக் கண்டோம்.

பள்ளிகளைக் கட்டவும், பரதைகளை அமைக்கவும், பிற வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றவும், மக்கள் வேண்டிய நன்கொடை அளித்துதவுவதுடன், தாமே முன் வந்து எந்த ஒரு பிரதிபலனுமின்றி தாமும் உழைக்கின்றனர்.

பொதுஜனப் பிரதிநிதிகள்—அதிகாரிகளிடையே நிலவும் நல்லுறவு

மக்கள் பிரதிநிதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே எல்லா நிலைகளிலும் நல்லுறவு நிலவக் கண்டோம். பஞ்சாயத்து ஆட்சிச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள தண்டனை அளித்தல், ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் முதலான அதிகாரங்களை ஆந்திரப் பிரதேசத்தில்அமுல் நடத்தவேண்டிய தேவையே ஏற்படவில்லை என்ற உண்மையை அறிந்து நாங்கள் பெரிதும் வியந்தோம்.

அரிஜனங்களும் பிற பிற்பட்ட வகுப்பினரும்

ஏறக்குறைய, நாங்கள் கண்ட எல்லா இடங்களிலும், பஞ்சாயத்து சமிதி, ஜில்லா பரிஷத் முதலிய அமைப்புக்களில் உள்ள பிரதிநிதிகளிடையே, அரிஜனங்கள், பிற பிற்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நிலையை உயர்த்த உண்மையான ஆர்வம் நிலவக்கண்டோம். பல இடங்களில் அதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றனர்.

பாதை அமைத்தல், பள்ளி, மருத்துவ மனை முதலியன அமைத்தல், கிணறு வெட்டுதல், முதலான திட்டங்களினுல் அரிஜனங்களும், பிற்பிற்பட்ட வகுப்பினருமே, பெரிதும் பயனடைவோராக இருப்பர் என்ற உறுதியும் அளிக்கப்பட்டோம்.

அரிஜனங்கள் மட்டுமே வாழும் சில பகுதிகளில் சமுதாய நல நிதி உதவியுடன் அரிஜனங்களுக்குத் தனிப்பள்ளிக்கூடங்கள் இயங்கி வருவதை எங்கள் சுற்றுப்பயணத்தின் போது நாங்கள் கண்டோம். ஆனால் அரிஜனங்களே அந்த வகையான தனிப்பள்ளிகளை மூடிவிடுவதில் அக்கறை கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, அது நிரந்தரமானதன்று என்று கூறப்படுகிறது. தீண்டாமை ஒழிப்புக் குறித்து அரசியல் அமைப்புச் சட்டத்தில் வேண்டிய வகை செய்யப்பட்டிருத்தலினுலும், அது குறித்து மேலும் பல சட்டங்கள் இருப்பதாலும், அரிஜனங்களுக்கென்று தொடர்ந்து தனிப்பள்ளிகள் நடத்துதல் பொருத்தமற்ற செயலாகும். ஆகவே, எவ்வளவு விரைவில் இத்தனிச் சலுகைகள் நீக்கப்படுகின்றனவோ, அவ்வளவுக்கும் அது நன்மையே ஆகும்.

அரிஜனங்களின் நலனைக் கவனித்துக்கொள்ள, பெரும்பாலும் அரிஜன உறுப்பினர்களே அடங்கிய தனி நிலைக் குழுக்களை (Standing Committees) சமிதியிலும் ஜில்லா பரிஷத்திலும் அமைத்துக்கொள்ள ஆந்திரப்பிரதேச அரசாங்கம் சமீபத்தில் ஓர் ஆணை பிறப்பித்துள்ளது என்று அறிந்து மகிழ்ந்தோம். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை, காலப்போக்கில் அரிஜன நல முன்னேற்றத்துக்குப் பெரிதும் துணை செய்யும் என்பதுடன், அரசாங்கமும் அவர்கள் நலனில் தனிக் கவனம் செலுத்தும் என்ற உறுதிப்பாட்டையும் அளிக்கிறது.

விவசாய முன்னேற்றம்

குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்து நல்ல பலன் கண்டுள்ள பிறிதொருதுறை உணவுப் பொருள் உற்பத்தித் துறையாகும்.

ஒவ்வொரு பஞ்சாயத்து சமிதியும் இந்த விஷயத்துக்கு முதலிடம் கொடுத்து, ஏரிகளைச் சீரமைத்தல், கிணறு வெட்டுதல், பம்பு செட்டு அமைத்தல், முதலான நீர்ப் பாசன வசதிகளைப் பெருக்குவதன் மூலம், தனிக் கவனம் செலுத்துகின்றன. பொறுக்கு விதைகள் ஒழுங்காக விநியோகிக்கப்படுவதுடன், இச் சமிதிகளைச் சேர்ந்த விவசாயிகள், அரசாங்கத்தை எதிர்ப்பார்க்காமல், தங்களுக்கு வேண்டியதைத் தாங்களே சேமித்து வைத்துக் கொள்கின்றனர்.

மேலும் விவசாயிகள், உணவு உற்பத்தியைப்பெருக்க, உரத்தின் உபயோகத்தை நன்கு உணர்ந்தவர்களாக உள்ளனர். எனினும், சில நேரங்களில் தேவையான உரம் கிடைக்கப் பெறுமையால் உரப்பற்றுக் குறைத் தொல்லைகளை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. பல இடங்களில் பசுந்தாள் உரத்தைப் பயிரிடவும் ஊக்கமளிக்கப்படுகிறது.

இந்த மாநிலத்தில், நன்கு படித்தவர்களும், கிராமங்களில் இருந்து கொண்டு, உழவுத் தொழிலை மேற்கொண்டு, புதிய சாதனங்களையும், முறைகளையும் பயன்படுத்தி, நல்ல பலனடைகின்ற செயல் உண்மையில் பாராட்டுதற்குரிய தொரு செயலாகும்.

கல்விவளர்ச்சி

ஆரம்பக் கல்வி, உயர்நிலைக்கல்வி ஆகியவற்றின் நிர்வாகத்தைப் பஞ்சாயத்து சமிதிகளுக்கு மாற்றியபின், சாதாரண மனிதனும் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் காட்டக் கூடியதொரு புதிய ஊக்கமும், உற்சாகமும் கல்வித் துறையில் காணப்படுகிறது.

ஆரம்பப் பள்ளிகள் சமிதிகளின் பொறுப்பில் விடப்பட்டதிலிருந்து, ஆரம்ப ஆசிரியரை மேற்பார்வையிடல் உண்மையானதாகவும், உறுதியானதாகவும் இருக்கிறது.

ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை வேகமாக வளருவதுடன், அப்பள்ளிகளுக்கான கட்டடங்களும் மேலும் மேலும் கட்டப்படுகின்றன. உயர்நிலைப்பள்ளிகளும் ஜில்லா பரிஷத்திடம் ஒப்படைக்கப்பட்டபின்னர், இதே அளவு வேகமான வளர்ச்சியை அடைந்துள்ளன. அவற்றின் தரமும், எண்ணிக்கையும் கூட உயர்ந்துள்ளன.

வளர்ச்சி பெருத துறைகள்

கிராம அல்லது சிறு கைத்தொழில் குறிப்பிடத் தக்க அளவு வளராத துறைகளுள் ஒன்றுகும். இத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டாலொழிய, பெரும்பான்மையாளரான அரிஜனங்களும், பிற்பட்ட வகுப்பினரும் தங்கள் நிலையில் முன்னேற்றமடைந்ததாகக் கூற முடியாது. அதே போன்று, கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தும் பிரதிநிதிகள், குறிப்பிடத்தக்க அக்கறை காட்டவில்லை.

மாதர் நலன், குழந்தை நலன் முதலான விஷயங்களில், ஆந்திரத்தில் நாங்கள் அதிகமான வளர்ச்சியை எதிர்பார்த்தோமென்றுலும் ராஜஸ்தானைப் போன்றே ஆந்திரத்திலும் இத்துறைகளில் குறிப்பிடுமளவுக்கு முன்னேற்றம் காணவில்லை. எங்கள் சுற்றுப் பிரயாணத்தின் போது, ஓரிரு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் பஞ்சாயத்து சமிதியின் கூட்டங்களுக்கு பெண் உறுப்பினர் வராமலே இருந்து வருவதைக் கவனித்தோம்.

இருமாநிலங்களுக்கிடையே உள்ள சிறப்பான வேறுபாடுகள்.

இந்த இரு மாநிலங்களும் (ராஜஸ்தான், ஆந்திரா) பஞ்சாயத்து ஆட்சியை அமுல் நடத்தும் விஷயத்தில் முதன்மையானவையாக இருந்தும், அமுல் நடத்தத்

தொடங்கி ஓராண்டு காலம் கழிந்த பின்னரும், அவை அமுல் நடத்தத் தொடங்கியிருக்கும் சட்டத்தின் பல விஷயங்களில் பெரிய வேறுபாடுகள் நிலவி வருகின்றன. ஆந்திரப் பஞ்சாயத்து சமிதி, ஜில்லா பரிஷத் சட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சம், பழைய ஜில்லா போர்ட்டின் பல பொறுப்புக்களும், பஞ்சாயத்து சமிதி அல்லது ஜில்லா பரிஷத் ஆகியவற்றுள் ஏதாவதொன்றுக்கு மாற்றப்பட்டு விட்டன. ஆனால், ராஜஸ்தானத்தில் நிலைமை அவ்வாறில்லை.

ஆந்திரத்தில் உயர்நிலைப்பள்ளி, தொழிற்பள்ளி, தொழிற் பயிற்சிப் பள்ளி முதலான பள்ளிகளை நடத்துதல், அமைத்தல், விரிவுபடுத்துதல் முதலான பொறுப்புக்களும், பாதைகள், மருத்துவ மனைகள் முதலானவற்றை நடத்தும் பொறுப்புக்களும் ஜில்லா பரிஷத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதே போன்று, ஆரம்பப்பள்ளிகளும், போக்குவரத்து சம்பந்தமானவையும் பஞ்சாயத்து சமிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தத் துறைகளில், பொறுப்புக்கள், அரசாங்க மானியங்கள் அளிக்கப்படுவதால் மேலும் அதிகமாகின்றன. மேலும் சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தையும், பஞ்சாயத்து சமிதியிடம் ஒப்படைப்பதின் வாயிலாக, அதிகாரத்தை மேலும் விரிவுபடுத்த அரசாங்கம் மிகுந்தகவனம் செலுத்துவதாக எங்களிடம் சொல்லப்பட்டது.

ஆந்திராவில், ராஜஸ்தானைப் போலன்றி, ஜில்லா பரிஷத்தின் நிலைக்குழுக்களுக்கு, ஜில்லா பரிஷத்தில் "பதவியைக் கொண்டு உறுப்பினராக இடம் பெறும்" **(Exofficio-member)**மாவட்டக் கலெக்டர் தலைமை வகித்து நடத்துவார். ஆனால், ராஜஸ்தானில் பிரமுக், நிலைக் குழுக்களுக்குத் தலைமை வகிப்பார். நடைமுறை வேலைகளை நிலைக் குழுக்களுக்ளே நேரடியாக நடத்துமேயன்றி, பரிஷத் அல்ல.

ஆந்திராவின் பஞ்சாயத்து சமிதிகளும், ஜில்லா பரிஷத்களும் நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்கள் மிகுதியாக இருந்தபோதிலும் வருவாய்களைப் பெருக்கிக் கொள்ளும் அதிகாரம், நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்களை நோக்க, குறைவாகவே உள்ளது. பஞ்சாயத்து சமிதிகள் கடன் வாங்கவும், விதிக்கப்பட்டுள்ள வரிகளின் சர்சார்ஜ் வசூலிக்கவுமே முடியும். ஜில்லா பரிஷத்துக்கள், பஞ்சாயத்து நிதியிலிருந்து கடன் வாங்குவதற்கும், நன் கொடைகள் வசூலிக்கவுமே முடியும்.

(உபயம் : குருக்ஷேத்திரா.)

[16-ம் பக்கத் தொடர்ச்சி.]

தும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். அவரைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கையில், காந்தியடிகள், "தாங்கள் நாட்டுக்கு அருமையான தொண்டு செய்து வந்திருக்கிறீர்கள். தங்களால் நமது நாட்டுக்கே பெருமை ஏற்பட்டிருக்கிறது" என்று கூறினர். இதற்கு ஐயர், "நோய் காரணமாக ஒன்றும் செய்ய முடியாதவனுகிவிட்டேன்" என்று வருத்தப்பட்டார்; வருத்த மேலீட்டால் அழுதும்விட்டார். உடனே காந்தியடிகள், "தாங்கள் எற்கனவே தேசத்திற்காக நிறையச் செய்திருக்கிறீர்கள்; வருத்தப்படுவதற்குக் காரணமே இல்லை" என்று ஆறுதல் கூறியவண்ணம் தாம் மேலே போட்டுக்கொண்டிருந்த துணியால், ஐயரின் உடம்பில் காணப்பட்ட புண்களைத் துடைக்க ஆரம்பித்தார். காந்தியடிகளுடன் வந்திருந்த வி. எஸ். சீனிவாச சாஸ்திரியும், ஜி. ஏ. நடேசனும் இந்தக் காட்சியைக் கண்டு அப்படியே மனமுருகிப் போனர்கள்.

பொதுவாக நோயாளிகளுக்குப் பணிவிடை செய்வதில் காந்தியடிகள் கை தேர்ந்தவர். இதில் இவர் சலிப்புக் காட்டியதேயில்லை. குறிப்பாகக் குஷ்டரோகிகளுக்குச் சிசுருஷை செய்ய இவர் கூச்சப்பட்டதேயில்லை. தென்னாப்பிரிக்காவில் டர்பன் நகரத்தில் வக்கீல் தொழில் நடத்தி வந்தபோது, தம் வீட்டிலேயே ஒரு குஷ்டரோகியை வைத்துச் சிறிது காலம் வரை பராமறித்து வந்தார். இதே பிரகாரம் சபர்மதி ஆசிரமத்திலும், குஷ்ட நோயினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒரு சிறந்த பண்டிதருக்கு இடமும், உணவும் கொடுத்துக் காப்பாற்றி வந்ததோடு, அனேக சந்தர்ப்பங்களில் தம் கையாலேயே அவருக்கும் பணிவிடை செய்துவந்தார். ஓரிடத்தில் கூறுகிறார், "சத்திய வடிவமான கடவுளைக் காண விழைவோர், எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்பு செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்." "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ?"

அஞ்சாமையின் அணிகலன்

காந்தியடிகள் ஒருபோதும் அச்சத்திற்கு ஆட்பட்டது கிடையாது. ஆனால், 1935-ம் வருடம் வரை பாம்பைக் கண்டால் மட்டும் இவருக்குச் சிறிது பயம் இருந்துவந்தது. இதற்காக இவர் பெரிதும் மன வேதனைப்பட்டார்; தம்மிடத்தில் ஏதோ குறைபாடு இருப்பதனுல்தான், இந்த அச்சம் தமக்கு ஏற்பட்டிருக்கிறதென்று கருதி, பாம்பைப் பற்றிய பல விஷயங்களை ஆராய்ந்தார். கடைசியில் ஒரு பாம்பாட்டியின் செய்கையால் அந்த அச்சம் போய்விட்டது. எப்படியென்றால், 1935-ம் வருடம், வார்தாவைச் சேர்ந்த மகன்வாடி என்ற இடத்தில் இவர் தங்கியிருக்கையில் ஒரு நாள், தமது ஆசிரமத்தில் சக ஊழியர்களுடன் உட்கார்ந்துகொண்டு நிர்மாண வேலைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு பாம்பாட்டி இரண்டு மூன்று பாம்புகளைக் கொண்டுவந்து, இவருடைய அனுமதியின் பேரில், இவருடைய தோளிலும் தலையிலும் சிறிது நேரம் ஊர்ந்துகொண்டிருக்கும்படிச் செய்தான். இதைப் பொருட்படுத்தாமல் இவர் தமது வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். சக ஊழியர்கள் இதைப் பார்த்துப் பிரமித்துப்போனர்கள்.

இன்னும் ஜான்கந்தர் என்ற ஓர் ஐரோப்பிய அறிஞர், காந்தியடிகளைப் பற்றி மதிப்புக்கூறுகையில், "விதியைக் காட்டிலும் வல்லமை வாய்ந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு போராடியவர் காந்தி யென்றல் இவருடைய அஞ்சாமையை என்னென்று சொல்வது" என்று வியந்து பாராட்டியிருக்கிறர்.

கடமை புணர்ச்சி

தமக்கென்று ஏற்பட்டுள்ள கடமைகளைச் சரிவரச் செய்து கொண்டு போக வேண்டுமென்கிற பழக்கமும், அந்தக் கடமைகளைக் காலாகாலத்தில் செய்ய வேண்டுமென்ற உறுதியும் காந்தியடிகளுக்குச் சிறு வயதிலேயே ஏற்பட்டிருந்தன. பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் கூட, குறித்த நேரத்தில் பள்ளிக்கூடம் போய் விடுவார். வீட்டில் சாப்பாடு தயாராயிருந்தாலும், தயாராயில்லாவிட்டாலும் அதைப் பொருட்படுத்த மாட்டார். ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று முடிவு செய்து விட்டால், அதை எப்படியும் திட்டமிட்டபடி செய்தே தீருவார். இந்த நியதியை வாழ் நாள் முழுவதும் கடைப்பிடித்து வந்தார்.

"சொல்லின் செல்வர்" மறைந்தார்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகப் பெரும் பணியாற்றிய "சொல்லின் செல்வர்" டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் மறைவு கேட்டு மிகவும் வருந்துகிறோம். அவருடைய திடீர் மறைவுக்குச் சில தினங்களுக்கு முன்தான், சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருபத்து ஐந்து ஆண்டுகள் தமிழ்த்துறைத்தலைவராகப் பணியாற்றிய அப்பெருமகனுரைப் பாராட்டி மணிவிழா ஒன்று நடைபெற்றது. (அப்போது எடுத்த படங்களைக் கடைசி அட்டைப் பக்கத்தில் காணலாம்).

டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள், வரலாற்றுப் புகழ் படைத்த பேராசிரியர். அவரால் உருவாக்கப்பட்ட எண்ணற்ற மாணுக்கர்கள், தமிழகத்தில் மட்டுமின்றி, உலகின் பல்வேறு பகுதிகளிலும் சிறந்த தமிழ்த்தொண்டாற்றி வருகிறுர்கள். எனவே, டாக்டர் அவர்களின் தொண்டு, உலகில் எங்கெங்கு தமிழ் பேசப்படுகிறதோ அங்கெல்லாம் பரவி, தமிழின் இனிமையைப் பறைசாற்றி வருகிறது என்று கூறலாம். உலகெல்லாம் தமிழ் மணம் கமழச் செய்த, அவர் புகழ் வாழ்க !

சீரும் சிறப்பும் பெற்ற தீந்தமிழ் நூல் நயங்களை—சிறப்பாக, சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம் முதலான இலக்கியங்களின் அழகின்பத்தை, பண்டிதர் மட்டுமின்றி, பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில், அழகு சொட்டும் பேச்சுக்களின் மூலமும், எழுத்துக்களின் மூலமும் விளக்கிப் பெருந்தொண்டாற்றினுர் அவர்.

தமிழ்நாடு அரசாங்கத்தால் நிறுவப்பெற்ற தமிழ் வளர்ச்சி, ஆராய்ச்சி மன்றத்தில் ஆரம்பத்திலிருந்தே டாக்டர் சேதுப்பிள்ளை அவர்கள், ஓர் உறுப்பினராகத் திகழ்ந்தவர். அத்துடன், அம்மன்றத்தின் 'கிராமியக்கலைவளர்ச்சித் துணைக்குழு'வின் தலைவராகவும் அவர் சிறந்த பணியாற்றி வந்தார்.

இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தைத் தமிழாக்கம் செய்த பணியில், டாக்டர் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு.

கிராம நலத்திலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் டாக்டர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். தமிழ்நாடு ஊர்ப்பெயர்கள் பற்றிய அவருடைய "ஊரும் பேரும்" என்ற ஆராய்ச்சி நூல் அதற்குச் சிறந்த சான்றுகும்.

கவியரசர் தாகூர் நமக்களித்துள்ள தேசிய கீதத்துக்குத் தமிழறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் சிறந்த தமிழாக்கத்தை அகவற்பா வடிவத்தில் அமைத்துக் கொடுத்துள்ளார்.

பேராசிரியர் டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், 1956-ம் ஆண்டு அக்டோபர், "கிராம நலம்" காந்தி ஜயந்தி மலரில் எழுதிய, தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக்கொள்வோம்.

சி. வேங்கடசாமி.

தாகூர் அளித்த தேசிய கீதம்

ஜனகண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்யவிதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே, தவ சுப ஆஷிஸ மாஹே
காஹே தவ ஜெய காதா

ஜன கண மங்கல தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ! ஜய ஹே ! ஜய ஹே!!!
ஜய ஜய ஜய ஜய ஹே !

பேராசிரியரின் தமிழாக்கம் வருமாறு :

மக்கள் அனைவரின் மனமெலாம் ஆள்வோய் !
பாரத நாட்டின் வாழ்வினை வகுப்போய்

பாஞ்சால ஸிந்து குஜராத்து மராட்டிய..
திராவிட ஒரிஸா வங்கம் இவற்றின்

சிந்தை கிளர்ந்தெழச் செய்யுமுன் நாமம்
விந்தமும் இமயமும் எதிரொலி செய்யும்

கங்கை யமுனையின் இசையினில் கலக்கும்
இந்தியக் கடலின் அலை எடுத்தோதும்

அவையெலாம் பாடும் உன் புகழே
மன்னுயிர்க் காவல் நின் கையகத்ததுவே

பாரத நாட்டின் வாழ்வினை வகுப்போய்
வெல்க நீ ! வெல்க நீ ! வெல்க, வெல்க,
வெல்க, வெல்க, வெல்க நீ !

[18-ம் பக்கத் தொடர்ச்சி.]

ருந்தவளை முத்து வழியில் பார்த்து விட்டான். அவளுடைய அழகு அவனைக் கிறங்க வைத்தது. இருந்தாலும பிடியை விட்டுக்கொடுக்காமல் கேலியாகவே ஆரம்பிக்கிறான்.—

கட்டகட்ட பருத்திச்செடி
கணுக்கணுவாய் காய்க்கும்செடி
எங்களூரு பெண்களுக்கு
மாத்தைக்கொடு ரவிக்கைத்துணி !"

அது மட்டுமா ?

" வட்டப்பொட்டு வையாதடி !
வாசலிலே நில்லாதடி !
சுத்து வீட்டுக்காரியெல்லாம்
சூதா நினைச்சிடுவா !"

வார்த்தைகளிலே தான் எத்தனை ஆசை பொங்கி வழிகிறது !

அவளைத் தனக்குக் கட்டிக் கொடுப்பார்களோ இல்லையோ என்ற சந்தேகம் அவனுக்கு இருக்கத்தான் செய்கிறது! என்ன தான் மாமன் மகளானாலும், மாமா பணக்காரராயிற்றே ! அவன் மனம் குழம்புகிறது..... ஆனால் செல்லி கெட்டிக்காரி.....வைர நெஞ்சு படைத்தவள். ஆசை அத்தானைத் தவிர வேறு ஒருவனைக் கட்டிக்கொள்ளமாட்டேன் என்று தன் அப்பனிடம அடித்துச் சொல்லிவிட்டாள். ராமுத் தேவர் காரியக்காரர். ஒரே மகள். அவளுடைய இன்பம் தான் தன்னுடைய இன்பம் என்று கருதி பெருந்தன்மையாக அவள் இஷ்டப்படியே செய்வதாக வாக்களித்தார். முத்துவுக்கு இந்த விஷயம் தெரியாது. ....மனம் குழம்பிப் போய் என்ன என்னவோ சொல்கிறான்.—

" சோளவிதை போடையிலே
சொன்னியேம்மா ஒருவார்த்தை
சோளம் பயிராச்சி
சொன்னதெல்லாம் வீணாச்சி !"

அத்தோடு நிறுத்தவில்லை. "செல்லி....வா.... மதுரைக்குப் போவோம். அங்கே போய் நம்ப கல்யாணத்தை மீனாட்சி அம்மன் சந்நிதியிலே முடித்துக்கொள்ளலாம்!" என்கிறான். ஒழுங்கான முறையில் திருமணம் செய்து கொடுக்க மாமன் ஒத்துக்கொள்வாரா என்ற சந்தேகம் அவனுக்கு !

உண்மையை உடனே சொல்லிவிடாமல் மேலும் மேலும் அவனை அலைக்கழிக்கிறாள் செல்லி....அதிலே அவளுக்கு ஒரு தனி குஷி!

" ஆடு மாடு இங்கிருக்க
அத்தை மக நானிருக்க
வீடு வாசல் இங்கிருக்க
வீதி வழி போகலாமோ ?"

" எங்கும் போகவேண்டாம்......தேவையில்லை " என்று தான் சூட்சுமமாகச் சொல்லுகிறாள். அவனுக்கு அது புரியவில்லை. தட்டிக்கழிக்கிறாள் அவள் என்று எண்ணிக் கொண்டு பதில் சொல்லுகிறான்.

" ஆட்டை வித்தேன், மாட்டை வித்தேன்
அரைக் குலுக்கை தவசம் வித்தேன்
மாமன் மகள் பேச்சைக் கேட்டு
மயிலைக்காளை ரெண்டு வித்தேன் !

ஆசையோடு மாமன் மகள் தன்னோடு வருவாள் என்று நம்பி எல்லாவற்றையும் விற்று மதுரைக்குப் போக 'ரெடி' செய்து விட்டானும் ! இப்பொழுது என்னடா வென்றால் இந்த செல்லி 'பிடி' கொடுக்காமல் பேசுகிறாளே என்று அவனுக்கு ஆத்திரம் ! அந்த ஆத்திரத்தை மேலும் தூண்டிவிடுகிறாள் அவள் :—

" மதுரைக்குப் போக வேண்டாம்
மாங்கா தேங்கா வாங்க வேண்டாம்
மதுரைக் கடைச் சக்களத்தி
கை மருந்து வச்சிருப்பா ! ...

அவனுக்கு கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. " செல்லி மதுரைக்கு வரேன். உங்களுக்குத்தான் முந்தி விரிப்பேன். அப்படி இப்படின்னு முந்தாநாள் சோளக் கொல்லையிலே முழுசா சத்தியம் பண்ணியே. இதெல்லாம் என்னை ஏமாத்தறத்துக்குத்தானா ! " என்று சொல்லிக்கொண்டே எட்டி அவள் கையைப் பிடித்தான். அப்பொழுதுகூட அந்தக் குறும்புகாரி மசிகிறாளா என்ன ? அதுமட்டுமா ? குறும்புத்தனமான வார்த்தைகளையே கொட்டுகிறாள் ! :—

" வட்ட வட்ட பாறையிலே
வரகரிசி தீட்டையிலே
கையைப் பிடிக்காதீங்க
கருவளையல் சேதமாகும் ! ..

'கையைப் பிடிக்காதீங்க. கையிலே போட்டிருக்கிற வளையல் உடைந்து விடும் !'' என்று கூறுகிறாள். அவன் உள்ளம் உடைவது அவளுக்குப் பெரிசாகப்படவில்லை ! கைவளையல் உடைந்துவிடுமாம் !. எவ்வளவு அழுத்தலான வார்த்தைகள் !

பதிலைக்கேட்டுக் கல்லாக நிற்கிறான் முத்து. அவன் கண்களிலே நீர் கலங்குகி து. அப்பொழுதுதான் அவள் இறங்கி வருகிறாள் ! அவன் இதயத்தை இவ்வளவு நோம் வாட்டி எடுத்து விட்டு, கடைசியாக, தன் தகப்பன் அவர்கள் கல்யாணத்திற்குச் சம்மதித்துவிட்ட செய்தியைச் சொல்கிறாள் முத்துவிடம்.

சேதி கேட்டு முத்து பித்தனாகிறான். கோபம் எல்லாம் பறந்தோடி விடுகிறது. ஆசை பொங்கி வழிய அவனுனுடைய கைகளை இறுக்கிப் பிடிக்கிறாள். அவள் போட்டிருந்த கருவளையல் உண்மையிலேயே இப்பொழுது உடைந்துவிடுகிறது ! கரைபோட்டுத் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த இளங்காதலர்களின் அன்பு பெருக்கெடுத்த ஒன்றாகக் கலக்கிறது !

திருப்பரங்குன்றத்து முருகன் அவர்களைச் சேர்த்து வைக்கிறான் ! அந்த ஆண்டவனின் சந்நிதியிலே சென்று, அவன் முன்னிலையில் புது வாழ்வுப் பயணத்தைத் துவக்கத் துடிக்கிறான் முத்து :—

" கோழி முட்டைத் தோடு போல
கொழும்புச் சில சாயங்காச்சி
உடுத்திப் புறப்படடி
உள்ளூரு சாமி பார்க்க !''

முன்புபோல் 'பிகு' பண்ணவில்லை அவள் ! இப்பொழுது அவள் அவன் காதலி மட்டுமல்ல. அன்பு மனைவியுமாயிற்றே !

கிராம அபிவிருத்திக் கமிஷனரின் அறிவுரை :

"ஊருக்கு நல்லது சொல்வேன்" (பாரதியார்)

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு

அன்புள்ள கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு !

இம்மாதம் ஒரு முக்கியமான விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பஞ்சாயத்துக்கள் மூலம், கிராமத்தின் செல்வத்தைப் பெருக்குவதற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும், உங்களுக்கு, சர்க்கார் செய்து கொடுத்து இருக்கிறார்கள். பாலைவனம் போல காட்சி அளிக்கும் கிராமங்களைச் சோலைவனமாக்கும் சூழ்நிலை, இப்போது கிராமங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிகச் சிரமம் இல்லாமலேயே, கிராமத்திற்கு அழகும், அமைதியும், செல்வமும் தரும் ஒரு காரியம்—கிராமத்தைச் சுற்றி இன்று வீணாகக் கிடக்கும் நிலங்களில் எல்லாம், அந்தந்த இடங்களுக்கேற்ற மரம், செடி, கொடிகளை வைத்து வளர்ப்பதே ஆகும். ஊரிலுள்ள ஏரி குளங்கள், ஏரியின் நீர்ப்பிடிப்பு இடங்கள், கரைகள் முதலிய இடங்களில் பயன் தரும் மரங்களையும், விறகுக்கு உபயோகமாகும் மரங்களையும், பழம் தரும் மரங்களையும் வைத்து வளர்க்க ஏற்பாடு செய்வீர்களானால், அந்தந்த ஊர் விஸ்தீரணத்திற்குத் தகுந்தவாறு, ஒவ்வொரு கிராமத்திற்கும், ஆண்டு ஒன்றுக்கு, ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானமாகக் கிடைக்க ஏது இருக்கிறது.

எந்த நிலத்தில் எந்த மரம் நல்ல முறையில் வளரும் என்பதை, உங்கள் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்தில் உள்ள விவசாய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, அவர்கள் சொல்லும் ஆலோசனைகளைக் கேட்டு, அதன்படி, புளிய மரங்களையும், கருவேல மரங்களையும், பனை, தென்னை முதலிய மரங்களையும், மா, பலா, முதலிய பல்வேறு பழ மரங்களையும் வைத்து, கிராமத்தின் செல்வத்தைப் பெருக்க வழி செய்யலாம். நிலத்தை உழுது, விதைத்து, அறுத்து எடுக்கும் விவசாயத்தின் மூலமாகக் கிடைக்கும் வருமானம் மட்டும், நம்முடைய கிராமங்களுக்குப் போதாது. மரங்களை வளர்த்து, அதன் மூலம் வருகின்ற வருமானத்தைப் பெருக்குவதற்கு, பஞ்சாயத்து, திட்டமிட்டு, ஏற்பாடு செய்யுமானால், செலவுக்குப் போதிய வருமானமில்லையே, என்று எண்ணுகிற பல பஞ்சாயத்துக்கள், எதிர்பாராத அளவில், நல்ல வருமானம் பெறுவதற்கு இடமுண்டு.

எனவே, ஊரைச் சுற்றி காலியாக உள்ள இடங்களில் மரம் நடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

"ஊரைச் சுற்றி மரங்கள் நட வேண்டும், மரச் செல்வத்தை வளர்க்க வேண்டும் என்று, எண்ணினால் மட்டும் போதுமா! அதற்கும் பணச் செலவு ஆகுமே! பணத்திற்குப் பஞ்சாயத்து எங்கே போவது? அன்றாட வசதிகளைச் செய்து கொள்வதற்கே நிதி வசதி இல்லாத பஞ்சாயத்துக்கள், இந்த மரங்கள் நடும் வேலையையும் எப்படி ஏற்றுக் கொள்வது? இதற்கு சர்க்கார் பண உதவி செய்யுமா?" என்ற எண்ணம், மரங்கள் நடும் வேலையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று நினைக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் மனத்தில் தோன்றுவது இயல்பே.

மரங்கள் நடும் விஷயமாக, சர்க்கார் மூலம் பஞ்சாயத்துக்கள் என்ன உதவி பெறக் கூடும் என்பதை, எடுத்துச் சொல்வதே, இக்கடிதத்தின் முக்கிய நோக்கம்.

மரங்கள் நடுவதற்கு, முதலில் அதற்கேற்ற குழிகள் தோண்டப்பட வேண்டும். நல்ல விதமான விதைகளையும், நாற்றுக்களையும் தயார் செய்ய வேண்டும். மரங்களை வைத்தவுடன், சில மாதங்களுக்கு இடைவிடாமல் தண்ணீர் விடவேண்டும். துளிர்த்து வரும் இளம் தளிர்களை ஆடுமாடுகள் தின்றுவிடாமல், சுற்றிலும் மண் சுவர்களையோ, முள் வேலி முதலிய மற்றவைகளைக் கொண்டோ பாதுகாக்க வேண்டும்.

மரங்கள் நடுவதற்கும் பாது காப்பதற்குமான செலவுகளை, இப்போதைய ஏற்பாட்டின்படி, விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்து செலவு செய்து கொள்ளலாம்.

இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குத் தண்ணீர் விட்டு, ஆடு மாடுகள் கடிக்காமல் பார்த்துக்கொண்டால், ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்குள்ளாக, இந்த மரங்களால் கிராமங்களுக்குக் கைமேல் பலன் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மரங்கள் வளர்க்கும் ஏற்பாட்டின் மூலம், சில ஏரி குளங்களின் கரைகளில், கருவேல மரங்களை வைத்து வளர்த்ததின் பலனாக 5, 6 வருஷங்களில் 20,000 ரூபாய் 30,000 ரூபாய் என்று பணத்தைப்பெற்று, அந்தப் பணத்தை ஊர் நலனுக்குக்கான காரியங்களுக்காக உபயோகித்து வரும் கிராமங்களையும், நான் அறிவேன்.

உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால், மதுரை ஜில்லா, திருமங்கலம் தாலூகா, கல்லுப்பட்டி வட்டாரத்தைச் சேர்ந்த "காரைக்கேணி" என்னும் கிராமத்தில், அந்தப் பஞ்சாயத்துத் தலைவரும், சக ஊழியர்களும் உழைத்து, இந்த மரம் நடும் முயற்சிகளின் பயனாக, இரண்டு வருஷங்களுக்கு முன்பு, அந்த ஊர்க் "கண்மா"யில் ஏரியில் உள்ள கருவேல மரங்களை ஏலம் போட்டதின் மூலமாக, அந்த ஊருக்கு ரூ. 25,000 வருமானமாகக் கிடைத்து இருக்கிறது. "காரைக்கேணி" சாதாரணமான ஒரு சிறிய கிராமம். சுமார் ஆயிரம் ஜனத்தொகையைக் கொண்டது. அந்த ஊராரே ஊர்க் காவல் போட்டது மட்டுமல்ல; ஊரிலுள்ளவர்கள், மரங்களைப் பேணி வளர்ப்பதில், ஒரு குடும்பத்தாரைப் போல் இருந்து வந்தார்கள். மரங்களை, ஆடு மாடுகள் சேதப்படுத்தினால், "காவல்காரர் வந்து பார்த்துக்கொள்ளட்டுமே" என்று எண்ணாமல், அந்த ஊரிலுள்ளவர்கள் யாராயிருந்தாலும், ஊர்ப் பொது மரங்களை பாதுகாப்பதைத் தங்களுடைய கடமையாகக் கருதி வந்தனர். அதன் காரணமாக, மரங்கள் நல்ல முறையில் வளர்ந்து வந்தன. ஏலம் விட்ட கருவேல மரங்களைத் தவிர, ஊரைச் சுற்றியும் நிழல் தரும் மரங்கள் பலவும், கனி தரும் மரங்கள் பலவும், நட்டு, பயிராக்கியிருக்கிறார்கள். அவை யனைத்தும், ஊருக்கு நல்ல அழகையும், அமைதியையும் தந்துகொண்டிருப்பதை, சில மாதங்களுக்கு முன்பு நான் நேரில் சென்று பார்த்தபோது, மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். எல்லாக் கிராமங்களிலும் இம்மாதிரி வேலை நடைபெற வேண்டும் என்பது, சர்க்காருடைய பேரவாவாகும். ஊர்ப் பொதுவருமானத்தை உயர்த்துவதற்கு, ஒரு சிறந்த வழி, மரங்களை நடுவதாகும்.

இதைப்பற்றிய சந்தேகங்கள் ஏதேனும் இருக்குமானால், தயவு செய்து "கிராம நலம்" பத்திரிகைக்கு எழுதுங்கள். உங்களுடைய சந்தேகங்களைத் தீர்க்க, என்றும் தயாராயிருக்கிறோம். இது சம்பந்தமான விவரங்களை உங்கள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களிடமோ, கிராம சேவகர்களிடமோ கேட்டுத் தெரிந்துக்கொள்ளுங்கள்.

அன்புள்ள,

கோ. வேங்கடாசலபதி.

வாசகர்களுக்கு

நம்முடைய "கிராமநலம்" பத்திரிகையில், கிராம வளர்ச்சி சம்பந்தமாக நடைபெறும் வேலைகளைப் பற்றிய, நல்லவிதமான புகைப்படங்களை வெளியிட வேண்டுமென்பதே நம்முடைய விருப்பம். எனவே "கிராம நல"த்தில் வெளியிடுவதற்குரிய நல்ல புகைப் படங்களை அனுப்பிவைப்பதுடன், அந்தப் புகைப்பட சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் தனியாக ஒரு கடிதத்தில் எழுதி, படங்களையும் விவரங்களையும் "கிராம நலம்" ஆசிரியருக்கு அனுப்பி வைக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

புகைப்படங்கள் தேவை

அனுப்பப்பெறும் படங்கள் பிளாக் செய்வதற்கேற்ற முறையில் நல்லவிதமாக இருக்க வேண்டும். மிகச் சிறிய புகைப் படங்கள் பிளாக் செய்வதற்குப் பயன்படா. குறைந்தபட்சம் போஸ்ட் கார்டு அளவாவது இருக்க வேண்டும். நிகழ்ச்சிகள் ஊராருடைய ஒன்றுசேர்ந்த உழைப்பையும், மனோபாவத்தையும் காட்டக்கூடியவைகளாய் இருந்தால், மிகவும் நலமாக இருக்கும்.

உதாரணமாக, ஒரு பஞ்சாயத்துக் கவுன்சில் ஏகமனதாக, தலைவரையும், உபதலைவரையும் தேர்ந்து எடுத்திருந்தால், அப்பஞ்சாயத்துக் கவுன்சிலின் தலைவர், உபதலைவர்—இவர்களுடைய படம் நமக்குக் கிடைக்குமானால், அதை மகிழ்ச்சியுடன் வெளியிட உதவியாக இருக்கும்.

புகைப்படம் அனுப்பி வைப்பது சம்பந்தமாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் "ஆசிரியர், கிராமநலம், கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற விலாசத்திற்கு எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்.

ஆசிரியர்,
"கிராம நலம்"



பஞ்சாயத்து

அரசினர் இதழ்

தமிழ் நாட்டில் ரசாயன உர விநியோகம்

1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை, தமிழ்நாடு அரசாங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில், தமிழ்நாட்டில் செயற்கை உரத்தைச் சேர்த்து வழங்குகின்ற நிலைபற்றிய முழு விவரங்களும், அத்துடன் மாவட்டங்களிடையே இந்த உர விநியோகம் எந்த அடிப்படையில் விநியோகிக்கப்படுகிறது என்பதுபற்றியும், தங்களுக்குத் தெரியவில்லை என்றும், அதனால் மாவட்டங்களில் ஏற்படுகின்ற கூடுதலான தேவையைச் சமாளிக்கின்ற நேரம் வரும் பொழுது, தங்கள் நிலைமை மிகவும் சங்கடமாகி விடுகிறதென்றும், சில மாவட்டக் கலெக்டர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அத்துடன் உர விநியோக முறை, பாரபட்சம் காட்டும் முறையில் இருக்கிறதென்றும், அதனால் சில மாவட்டங்களுக்கு அவைகளுடைய உண்மையான பங்குக்கு மேலேயே ரசாயன உரம் கிடைத்து விடுகிறது என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. ரசாயன உர விநியோகம் பற்றிய வகையில், மாநிலத்தில் இப்பொழுது பொதுவாக அமுலில் உள்ள உரத்தைச் சேகரித்து வழங்குகின்ற முறைபற்றியும், கடந்த காலத்தில் இந்த உரம் மாவட்டங்களிடையே எப்படி பகிர்ந்து விநியோகம் செய்யப்பட்டது என்பதுபற்றியும், ஒவ்வொரு ஆண்டுக்கும் தங்கள் தங்கள் மாவட்டங்களுக்கு முறையே சாதாரணமாக எவ்வளவு உரம் கிடைக்கும் என்பதைப்பற்றிச் சரியாக முன்கூட்டியே தெரிந்து கொள்கின்ற வாய்ப்பு கலெக்டர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

2. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் விநியோகம் செய்வதற்காக கிடைத்த செயற்கை உரத்தின் அளவு என்ன என்பது கீழே காட்டப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து தெரியவரும். ரசாயன உரத்துக்குள்ள தேவையை முழு அளவுக்குப் பூர்த்தி செய்யப்பட முடியாவிட்டாலும், விநியோகத்துக்குக் கிடைத்த ரசாயன உரத்தின் அளவானது மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கப்பெற்ற அமோனியம் சல்பேட்டின் அளவு, ஏற்றமோ இறக்கமோ இன்றி, ஒரே அளவில் உள்ளது. ஆனால், யூரியா, கால்சியம் அமோனியம் நைட்ரேட் ஆகியவற்றின் அளவு உயர்ந்திருக்கிறது என்பதையும் இப்புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

பட்டியல்—1

தமிழ் நாட்டில் விநியோகத்திற்குக் கிடைக்கக்கூடிய செயற்கை உரம்.

உரவகை,	1957-58 டன்கள்.	1958-59 டன்கள்.	1959-60 டனகள.	1960 61 டன்கள். 10—2—61 வரை.
அமோனியம் சல்பேட்	84,045	90,705	83,301	80,000
யுரியா	7,547	14,825	21,198	7,000
அமோனியம் சல்பேட் நைட்ரேட்	9,280	10,530	9,185	9,000
கால்சியம் அமோனியம் நைட்ரேட்	1,000	..	6,650	2,000
மொத்தம் (அமோனியம் சல்பேட் என்ற வகையில்).	1,14,000	1,36,900	1,49,500	1,09,450
எருக் கலவைப் பண்ணைகளுக்கு ஒதுக்கப்பட்டது ..	22,000	30,500	28,400	26,103
மாவட்டங்களில் விநியோகிக்க ஒதுக்கப்பட்டுள்ள அளவு	92,000	1,06,000	1,21,000	83,347

1 டன் யுரியா — 2.25 டன் அமோனியா சல்பேட்
1 டன் சல்பேட் நைட்ரேட் — 1.3 டன் அமோனியம் சல்பேட்
1 டன கால்சியம் அமோனியம்நைட்ரேட்— 1 டன் அமோனியம் சல்பேட்

3. அமோனியம் சல்பேட்டைப் பொறுத்த வரையில், ரசாயன உரத்தின் தேவைகளையும், 1367-வது பசலியின் புள்ளி விவரங்கள் அடிப்படையில், முக்கியமான பயிர்களும், பயிர் செய்யப்பட்ட நிலத்தின் அளவும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

பயிரிடப்படும் நில அளவை ஒட்டித் தேவைப்படும் அமோனியம் சல்பேட்டின் அளவு.

பட்டியல்—2

மாவட்டம்.	நெல்.	கரும்பு.	புகையிலை.	பருத்தி.	அமோனியம் சல்பேட் என்ற வகையில்.	மொத்தத்தில் சதவீதம்.
செங்கற்பட்டு	37,982	57	..	7	38,046	8·7
வடார்க்காடு	34,283	9,845	56	32	44,216	10·1
தென்னார்க்காடு	40,984	8,623	89	76	49,772	11·2
தஞ்சாவூர்	91,683	3,328	168	2	95,181	21·5
திருச்சிராப்பள்ளி	33,486	8,320	113	1,231	43,150	10·00
மதுரை	24,053	3,752	149	2,885	30,839	7·1
இராமநாதபுரம்	27,416	1,350	62	3,584	32,412	7·5
திருநெல்வேலி	23,773	252	21	2,311	26,357	6·1
சேலம்	14,972	6,449	252	1,291	22,964	5·4
கோயமுத்தூர்	14,163	8,880	2,296	22,783	48,122	11 0
நீலகிரி	..	..	..	..	..	..
கன்யாகுமரி	6,280	..	..	..	6,280	1·4
மொத்தம் ..	3,49,075	50,856	3,206	34,202	4,37,339*	100·00

* தனி நைட்ரஜன, நெற்பயிருக்கு 1 ஏகருக்கு 30 பவுண்டு என்று கணக்கிடப்பட்டது.
கரும்புக்கு 1 ஏகருக்கு 160 பவுண்டு என்று கணக்கிடப்பட்டது.
புகையிலைக்கு 1 ஏகருக்கு 60 ,,
பருத்திக்கு 1 ஏகருக்கு 60 ,,
ஒரு பவுண்டு நைட்ரஜன் — 5 பவுண்டு அமோனியம் சல்பேட்.

உண்மையான தேவைக்கு ஏற்ற அளவில், விநியோகத்துக்குக் கிடைக்கின்ற உரத்தின் அளவு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

4. பல்வேறு மாவட்டங்களிடையே செயற்கை உரம் எந்த முறையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

1957–58-லிருந்து 1959–60 வரை சராசரி உபயோகம் (டன்களில்).

மாவட்டம்.	அமோனியம் சல்பேட்.	யூரியா.	அமோனியம் சல்பேட். நைட்ரேட்.	கால்சியம் அமோனியம். நைட்ரேட்.	அமோனியம் சல்பேட் வகையில் சராசரி வருட விநியோகம்.	மாவட்டங்களின் பங்குகளின் மொத்தத்தில் சதவீதம்.
செங்கற்பட்டு	5,619	2,093	478	150	11,099	8·7
வடார்க்காடு	8,850	1,949	891	413	14,807	10·1
தென்னார்க்காடு	5,589	680	163	126	7,457	11·2
தஞ்சாவூர்	9,003	1,612	1,517	240	14,842	21·5
திருச்சிராப்பள்ளி	8,944	1,069	575	200	12,297	10·0
மதுரை	2,735	330	153	100	3,776	7·1
இராமநாதபுரம்	2,089	502	198	146	3,622	7·5
திருநெல்வேலி	10,013	621	825	103	12,586	6·1
சேலம்	4,115	500	312	86	5,732	5·4
கோயமுத்தூர்	7,120	1,098	1,444	343	11,811	11·0
நீலகிரி	173	12	..	..	200	..
கன்யாகுமரி	2,138	478	33	33	3,289	1·4
எருக்கலவைப் பண்ணைகள் ..	16,687	3,605	3,270	606	29,655	..
மொத்தம் ..	83,075	14,549	9,859	2,546	1,31,173	100·00

1957-58-லிருந்து 1959-60 வரையுள்ள மூன்றாண்டுக் காலத்துக்குச் சராசரி உபயோகப்படுத்தப்பட்ட ரசாயன உரத்தின் அளவை மேலேயுள்ள புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து முதலாவதாக என்ன தெரிகிறதென்றால், யூரியா, கால்சியம் அமோனியம் நைட்ரேட் ஆகிய செயற்கை உரங்களுக்குள்ள தேவை, மாவட்டத்துக்கு மாவட்டம் பெருமளவுக்கு வித்தியாசமாக இருக்கிறது என்பதேயாகும். செங்கற்பட்டு, வடார்க்காடு, தஞ்சாவூர், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி முதலான அதிக முன்னேற்ற மடைந்துள்ள மாவட்டங்களில், உபயோகப் படுத்தப்பட்டுள்ள கரிம உரத்தின் (Nit ogerio s fertilisers) 35 சத வீத அளவுக்கு இந்த மாற்றுச் செயற்கை உரங்கள் உள்ளன. இந்தச் செயற்கை உரங்களைப் பொறுத்த வரையில், ஒரே அளவான் விநியோக முறையை அமுல் நடத்துவது இயலாததொன்று என்று இதனால் தெரிகிறது. ஆகவே, மாவட்டங்களிடையே செயற்கை உரங்களுக்குப் பலத்த போட்டி ஏற்படும் பொழுது, இதற்குப் பதிலாக, வேறு இரண்டு முறைகளைக் கையாள முடியும். ஒன்று, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அவை இப்பொழுது பெற்று வருகின்ற அதே வீதத்தில் கொடுப்பதாகும். இதனால், பல் வேறு மாவட்டங்களில் இப்போது உபயோகித்து வரும் உர அளவு, கிடைக்கின்ற உரத்தைச் சரியான கணக்கில் பகிர்ந்தளிக்கப்படும் வரையில், ஆங்காங்கே முடங்கியிருக்கும். மற்றொரு முறை, ஒவ்வொரு மாவட்டத்தின் தேவையை அறிந்து, அந்தந்த அளவையே மாவட்டங்களுக்கு விநியோகிக்க விதி வகுப்பதாகும்.

இந்த இரண்டு முறைகளுமே முழுதும் சரியானவையாகாது. ஆகையால், கீழ்க் குறிப்பிட்ட புள்ளி விவரங்களில் காட்டப்பட்டுள்ளபடி, இந்த இரண்டு முறைகளுக்கும் இடைப்பட்ட ஒரு முறையைக் கையாள்வதே நடைமுறைக்கு ஒத்ததாகும். * முதல பத்தியில, கடந்த மூனறாண்டுகளில பெற்று வரும் அளவுச்சராசரி அளவின் அடிப்படையில் மாவட்டங்கள் பெற்று வரும் சதவீத அளவு குறிக்கப்பட்டுள்ளது. † இரண்டாவது பத்தியில், விவசாய நிலத்தின் பரப் பளவின் அடிப்படையில், மாவட்டங்கள் பெறுவதற்குரிமையுடைய உண்மையான தேவையின் சதவீத அளவு குறிக்கப் பட்டுள்ளது. ‡ மூன்றாவது பத்தியில், சரியான முறை என்று கருதப்படும், இந்த இரண்டு முறைக்கும் இடைப்பட்ட முறையின் சதவீத அளவு குறிக்கப்பட்டுள்ளது.

1957-60-ல் மாவட்டங்களின் உர உபயோக சதவீதத்தையும், நெற்பயிர், கரும்பு, புகையிலை, பருத்தி முதலான பயிர் விளையும் நிலப்பரப்பின் அடிப்படையில், தேவையின் சதவீதத்தையும் காட்டுகின்ற பட்டியல் :—

மாவட்டங்கள்.	* மாவட்டங்கள் பெற்று வருகின்ற அடிப்படை உபயோகத்தின் சதவீதம்.	† பயிரிடப்படும் நிலப் பரப்பின் அடிப்படையில் தேவைப்படும் அளவின் சதவீதம்.	‡ வழங்கப்பட கூடிய அளவின சதவீதம்.
செங்கற்பட்டு	10·9	8·7	10·5
வடார்க்காடு	14·6	10·1	14·00
தென்னார்க்காடு	7·4	11·2	8·2
தஞ்சாவூர்	14·6	21·5	14·6
திருச்சிராப்பள்ளி	12·1	10·0	11·7
மதுரை	3·7	7·1	4·7
இராமநாதபுரம்	3·6	7·5	4·7
திருநெல்வேலி	12·4	6·1	11·6
சேலம்	5·7	5·4	5·5
கோயமுத்தூர்	11·6	11·0	11·3
நீலகிரி	0·2	..	0·2
கன்யாகுமரி	3·2	1·4	3·00
மொத்தம் ..	100·00	100·00	100·00

5. அடுத்த 1961-62-ம் ஆண்டில், தஞ்சாவூர் அதிதீவிர சாகுபடித் திட்டத்திற்கென (package plan) குறிப்பாக இறக்குமதி செய்யப்படுவதால் இப்பொழுது பெற்றுவரும் ரசாயன உரத்தின் அளவு உயரச் சாத்தியக்கூறு இருப்பதைத் தவிர, பொதுவாக கிடைத்து வரும உரத்தின அளவில் எதும் மாறுதல் இருக்காது. தஞ்சாவூர் தீவிர சாகுபடித் திட்டத்துக்கென குறிப்பிடப்பட்டு, இறக்குமதியாகும் உரம் அததிட்டத்துக்குட்பட்ட பிரதேசத்துக்கு மட்டுமே ஒதுக்கப்படு மாகையால், அதை நாம் கணக்கில் சேர்க்கவேண்டியதில்லை. 1961-ம் ஆண்டில் இந்தியாவில் புதிய உரத் தொழிற் சாலை எதுவும் உர உற்பத்தி மேற்கொள்ளப் போவதில்லை. ஆகவே, கடந்த மூன்றாண்டுகளில் கிடைத்து வந்த உர

அளவின் சராசரி அளவாகிய சுமார் 1,15,000 டன்களே கிடைக்கும் என்ற உத்தேச அடிப்படையில்கணக்கிடுவோம். இது, அமோனியம் சல்பேட்டும், இதர ரசாயன உரங்களும் கலந்த ஒத்த அளவேயாகும்.கீழ்க்கண்ட விதிகளின்படி, கிடைக்கின்ற இந்த உரத்தை, மாவட்டவாரியாகப் பங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது :—

(1) ஒவ்வொரு மாவட்டமும் இதுவரை பெற்றுவருகின்ற அளவு உரம் இப்பொழுதும் கிடைக்க உறுதியளிக்கப் படுகிறது. அதாவது, கடந்த மூன்றுண்டுகளில், மாவட்டங்களுக்குக் கிடைத்த அளவின் சராசரி அளவேனும் இப் பொழுதும் கொடுக்கப்படும்.

(2) மதுரை, இராமநாதபுரம் போன்ற உர உபயோகம் குறைவாக உள்ள மாவட்டங்களுக்கு அதிக அளவு கொடுக்கப்படும். ஏனெனில் பரப்பளவு அடிப்படையில் கொடுக்கவேண்டுமென்ற அவர்களின் கோரிக்கையை ஓரளவு ஈடு செய்யும் முறையில் அது அமையும்.

(3) தஞ்சாவூரின் மிகுதியான தேவை, தஞ்சாவூர் தீவிர சாகுபடித் திட்டத்திற்கெனத் தனியாகக் கொடுக் கப்படும் உர அளவினுல் ஈடு செய்யப்படலாம் என்பதால், பொதுவான பங்கீட்டு அளவு மிகுதிய கக்கப்பட மாட்டாது.

(4) ஒவ்வொரு மாவட்டத்துக்கும் கிடைக்கக் கூடிய யூரியா மற்றும் இதர மாற்று உரங்களின் அளவு தற்போதுள்ள அளவு முறைக்குக் குறைத்துக்கொள்ளப்படலாம்.

6. இந்த முறைகளை மேறகொண்டு, பல்வேறு மாவடடங்களுக்கு, 1961–62 ஆண்டில் கீழ்க்கண்ட விதிதாசார முறை கையாளப்படும். கொடுக்கப்படவேண்டிய அமோனிய சல்பேடின் அளவு 2-வது பததியில் கொடுக்கபபட்டிருக் கிறது. மிச்சமிருக்கிற அளவு அமோனியம் சல்பேட் நைட்ரேட், யூரியா, கால்சியம் அமோனியம் நைட்ரேட் முதலான செயற்கை உரங்களினுல் ஈடு செய்யப்படும் :—

	மொத்த பங்கு	அம்மோனியம் சல்பேட்
செங்கற்பட்டு	12,000	6,000
வடார்க்காடு	16,000	9,000
தென்னுர்க்காடு	9,000	6,000
தஞ்சாவூர்	16,000	9,500
திருச்சிராப்பள்ளி	13,300	9,500
மதுரை	5,500	3,500
இராமநாதபுரம்	5,500	3,500
திருநெல்வேலி	13,500	10,000
சேலம்	6.200	4,500
கோயமுத்தூர்	13,000	8,000
நீலகிரி	300	2,000
கன்னியாகுமாரி	3,700	2,500
மொத்தம்	1,14,000	74,000

7. பல்வேறு பயிர்களுக்கு, பல்வேறு பருவ காலத்துக்கு ஒத்தமுறையில், எல்லா மாவட்டங்களுக்கும், ஒவ்வொரு மாதத்துக்கும் தேவைப்படுகின்ற சதவீத அளவைக்காட்டுகின்ற பட்டியல் (இது செயற்கை உர பிரதம கண்காணிப்பாள ரால் தயாரிக்கப்பட்டது) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து, டிசம்பர் மாதம்—அதிக உரம் உபயோகிக்கும் மாதமாக இருந்தும், டிசம்பர் மாதத்துடன் முடிகின்ற காலாண்டுக்கான தேவை மிகவும் குறைந்தே உள்ளது. மூன்று மாதததுக்கு முன்னரே தேவையான உரம் வழங் கும்முறையில், இந்த வேலைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கூடுமான வரையில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு காலாண்டுக்கு வழங்கப்படவேண்டிய சதவீத அளவு நிச்சயமாக அளிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும். ஆனுல் மத்திய அரசாங்கம் அவ்வப்போது ஒதுக்குகின்ற உர அளவைப்பொறுத்தே இது இருக்கும். சேமிப்புகளைக் கெடாமல் பாதுகாத்துவைத்துக் கொள்ளவும், உரமிடும் பருவத்தில் பல்வேறுப் பயிர்களுக்குச் சரிசமான முறையில் வினி யோகம் செய்யவும் மாவட்டக் கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள். ஆனுல், அப்படி வினியோகம் செய்யப் படும்பொழுது, எந்தக் காரணத்தை முன்னிட்டும்முன்னதாகவே வினியோகம் செய்யாமலும், ஒரு பயிருக்கு ஒதுக்கப் பட்ட அளவை இன்னொரு பயிருக்கு மாற்றுமலும் இருக்கும்படிக் கவனமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும், எவ்வகையான சேமிப்பையும் ரெவினியூ போர்டு செய்வதில்லை என்றும், அதிகப்படி யான தேவைகளை, அதனுல் சமாளிக்க முடியாது என்பதையும் கலெக்டர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

8. எருக்கலவைப் பண்ணைகள் மாநிலத்தின் மொத்தப்பங்கில் 25 சத வீதத்தைப் பெறுகின்றன. மாவட்டங் களுக்கு, கலவை செய்யாத செயற்கை உரங்கள் வினியோகிக்கும்பொழுது இந்தப் பண்ணைகள் கலவை எருக்களை விற் பனை செய்வது கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. உபயோகப்படுத்தப்பட்ட அளவு, மாவட்டங்களுக்கு வினியோ கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள அளவு, இவைப்பற்றிய பட்டியலில் கண்டுள்ள புள்ளி விவரங்களில் எருக்கலவைப் பண்ணைகளுக்கு வழங்கப்படும் அளவு சேர்க்கப்படவில்லை.

9. ஏதாவது வரய்ப்பிருந்து,எதிர்பார்க்கின்ற அளவைவிட உரம் அதிகமாக மாநிலத்துக்குக் கிடைத்தால், மாவட்டங் களுக்கு அளிக்கப்படும் அளவு முறை குறிப்பிட்ட வீதாசாரத்தில் அதிகப்படுத்தப்படும்.

பல்வேறு மாவட்டங்களின் ரசாயன உர மொத்தத் தேவையில் மாதாந்தரத்தேவையின் சதவீத அளவைக் காட்டுகின்ற பட்டியல்

மாதம்.	செங்கற்பட்டு.	வடார்க்காடு.	தென்னார்க்காடு.	தஞ்சாவூர்.	திருச்சிராப்பள்ளி.	மதுரை.	இராமநாதபுரம்.	திருநெல்வேலி.	சேலம்	கோயமுத்தூர்,	நீலகிரி,	கன்னியாகுமரி,
ஏப்ரல்	..	..	3·4	..	1·0	0·6	..	...	2·8	..	விவசாயத் துறை இயக்குநரால் கணக்குக் கூட்டப்படவில்லை	..
மே	..	7·7	20·0	9.6	7·8	11.8	9·0	18.0	16·0	4·5	,,	..
ஜூன்	30	7·7	16·7	9·6	15·6	11·8	3·4	9·4	9 9	1·4	,,	10·0
மூன்றுமாத மொத்தம் ..	30	15·4	40·1	19·2	24·4	24·2	12·4	27·4	28·7	5·9		10·0
ஜூலை	20	12·0	16·7	9·6	15·6	15·8	27·0	22·5	9·9	7·3	விவசாயத் துறை இயக்குநரால் கணக்குக் கூட்டப்படவில்லை	..
ஆகஸ்டு	15	19·4	20·9	5·0	17·1	20·0	27·0	4·2	15·7	32·5	,,	40·0
செப்டம்பர்	15	15·5	8·4	28·2	17·1	10·9	27·5	10·8	19·1	24·8	,,	10·0
மூன்றுமாத மொத்தம் ..	50	46·9	46·0	42·8	49·8	46·7	81·5	57·5	44·7	64·6		50·0
அக்டோபர்	..	0·1	..	28·5	3·9	4·0	0·1	0·1	0·6	5·7	விவசாயத் துறை இயக்குநரால் கணக்குக் கூட்டப்படவில்லை	..
நவம்பர்	..	..	0·2	5·5	1·1	0·9	..	..	2·0	3·3	,,	..
டிசம்பர்	..	3·8	0·1	..	1·0	0.6	2·2	4·5	1·4	1·9	,,	..
மூன்றுமாத மொத்தம் ..	..	3·9	0·3	34·0	6·0	5·5	2·3	4·6	4·0	10·9		..
ஜனவரி	10	9·4	5·0	1·0	5·8	10·5	3·0	6·6	6·0	7.4	விவசாயத் துறை இயக்குநரால் கணக்குக் கூட்டப்படவில்லை	..
பிப்ரவரி	10	18·8	4·3	2.0	8·4	9·5	0·8	3·9	11·0	9·3	,,	..
மார்ச்	..	5·6	4·3	1·0	5·6	3·6	..	..	5·6	1·9	,,	..
மூன்றுமாத மொத்தம் ..	20	33·8	13·6	4·0	19·8	23·6	3·8	10·5	22·6	18·6		40·0
ஆக மொத்தம் ..	100	100	100	100	100	100	100	100	100	100		100

[ரெவினியூ போர்டாரின் (உணவு உற்பத்திப்பிரிவு) 8—2—'61 தேதியிட்ட அறிக்கை எண் 38371/60–5 F.P.III.B.]

தழை உரம் பற்றிய தப்பெண்ணங்கள்

[ஸ்ரீ எம். எஸ். சிவராமன், ஐ ஸி.எஸ். வேலைத் திட்ட நிர்வாக ஆலோசகர், திட்டக் கமிஷன்]

[இக் கட்டுரை ஆசிரியர் ஸ்ரீ எம். எஸ். சிவராமன், ஐ. ஸி. எஸ். திட்டக் கமிஷனில் உறுப்பினராவார். சென்னை மாநிலத்தில் விவசாயத்துறை இயக்குநராகச் சிறந்த பணியாற்றியுள்ளார்கள். வேளாண்மைத் துறையில் கனிந்த அநுபவம் பெற்றவர். தழை உரம் பற்றி அவர் கூறும் கருத்துக்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரும் பயனை விளைவிக்கும்.

—ஆசிரியர்.]

"கண்ணிருந்தும் குருடர்கள்" என்று ஒரு வசனம் உண்டு. பசுந்தாள் உரத்தைக் கண்டிப்பவர்களுக்கும், சில சுயநல சிரத்தையினருக்கும் இது முழுக்க முழுக்கப் பொருந்தும். மற்ற நாடுகளுக்கு ஈடாக விவசாய உற்பத்திமுறைகளில் முன்னேறத் துடிக்கும் இவர்கள் தங்கள் சொந்த நாட்டு முறைகளை மறந்துவிடுகிறார்கள். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் முக்கிய தானியங்களின் உற்பத்தியைத் துரிதமாகவும் திறமையுடனும் பெருக்குவதற்கு முற்றிலும் அனுஷ்டான சாத்தியமான வழி பசுந்தாள் உரம் போடுவதுதான். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 50 ஆண்டுகளாக நடந்து வந்துள்ள பரிசோதனைகளும், பழைய விவசாயிகள் பலரது அனுபவமும் இதை எடுத்துக் காட்டுகின்றன. நாட்டின் தென்கோடியில் உள்ள தாம்பரபரணிப் படுகையில், பழைய காலம் முதல் பசுந்தாள் உரத்தை உபயோகித்து வந்திருக்கிறார்கள். வட கோடியில், உத்தரப் பிரதேசத்தில் உள்ள அல்மோரா ஜில்லாவில், சில பகுதிகளில் நெற்பயிருக்கும் கம்போஸ்டு உரங்களை மாத்திரமே வழக்கமாகப்போட்டு வந்திருக்கிறார்கள். இந்த இரு பிரதேசங்களிலும் எக்கருக்குச் சராசரி 4,000 ராத்தலுக்கு மேல் நெல் கண்டுமுதலாகியிருக்கிறது. அதாவது, அகில இந்திய சராசரிக் கண்டுமுதலை விட நான்கு மடங்கு அதிகமாகக் கிடைத்திருக்கிறது. இந்தத் தகவல்கள் பலருக்குத் தெரியா. பசுந்தாள் உரங்கள் மிக நல்லவைதான் என்றாலும், திறமையான சாகுபடிக்குத் தேவைப்படும் தாவரப் போஷாக்கு சத்துக்களில் "ஒரு சிறு பகுதியைத்தான்" அவை (பசுந்தாள் உரங்கள்) தரமுடியும் என்று சொல்லிப் பசுந்தாள் உரங்களை மட்டம் தட்டும் போக்கு சமீபத்தில் அதிகரித்திருக்கிறது. சாரம் செறிந்த (Concentrated) உரங்களுக்குச் சமமாக, (பசுந்தாள் உரம் போன்ற) அளவில் பெரிய உரம் எதுவும் பலன்தராது என்று வேறு சிலர் கூறுகின்றனர். பசுந்தாள் உரத்தை உற்பத்தி செய்வதற்காக வருடத்தில் ஒரு போக மகசூலை இழக்க வேண்டிருக்கும் என்றும், அதனால் பணக்கார விவசாயிகளே இதை உபயோகிக்க முடியும் என்றும் இன்னும் சிலர் கருதுகின்றனர்.

புதிய வழி

சமீப காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை, இத்தகைய கண்டனங்கள் அடியோடு புறக்கணிக்கின்றன. அதாவது, ஒரு புரட்சிகரமான முறையில் பசுந்தாள் உர உபயோகத்தை வெகு துரிதமாகப் பரப்புவதற்கு வழி கிடைத்திருக்கிறது. பத்து ஆண்டுக் காலத்துக்கு முன்பு இவ்வளவு வேகமாய்ப் பரப்புவதற்கு வழி இல்லாமலிருந்தது. ஒரிஸ்ஸாவில் 1957–ல் பசுந்தாளை உபயோகித்த நிலப் பரப்பு 10,000 எக்கர்; அது 1958-ல் ஒரு லட்சம் எக்கராகவும், 1959-ல் 10 லட்சம் எக்கராகவும் அதிகரித்திருக்கிறது; 1960-ல் 40 லட்சம் எக்கராகவும், 1962-63-ல் 80 லட்சம் எக்கராகவும் மேலும் அதிகரிக்கும். (அந்த ராஜ்யத்தில் நஞ்சை நிலத்தின் மொத்தப் பரப்பு 90 லட்சம் எக்கர்). தானிய உற்பத்தியை அதிகரிப்பதில், சம்பந்தமுள்ள ஒவ்வொருவருக்கும் அறிவூட்டக் கூடியது ஒரிஸ்ஸாவின் அனுபவம். ஆனால், இந்தச் சாதனையின் உண்மையான முக்கியத்துவத்தைப் பலரும் உணரவில்லை. தமிழ் நாட்டில், தஞ்சாவூர் ஜில்லாவில் இந்த முறை 1951-52-ல் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு மணங்குக்கும் குறைவான ஸெஸ்பேனியா, ஸ்பெஷியோஸா வித்துக்களுடன் அது ஆரம்பமாயிற்று. (ஸ்தல விவசாயிகளுக்குப் பரிச்சயம் இல்லாத வெளிநாட்டுப் பசுந்தாள் அது). அந்த ஜில்லாவிலுள்ள 10 லட்சம் எக்கர் நெல் வயல்களிலும் நான்கு வருடங்களுக்குள் ஸெஸ்பேனியா ஸ்பெஷியோஸா பரவிவிட்டது. இவ்வளவு விரிவான பிரதேசத்தில் நெற்பயிருக்கு வேண்டிய பசுந்தாள் உரச் செடிகளை இந்த விவசாயிகள் வளர்த்தது காரணமாக மகசூல் எதுவும் நஷ்டமானதாகக் கருதுவது அபத்தம்.

இயற்கையும் செயற்கையும்

அயன மண்டல நாடாகிய இந்தியாவில் பயிர்கள் நன்கு வளர்வதற்கு, நீண்ட கால அவகாசம் கிடைக்கிறது. அதனால் பிரதான மகசூலை இழக்காமலேயே, அதே வயலில் தேவையான பசுந்தாள் உரச் செடியை விவசாயி உற்பத்தி செய்ய முடியும். வேறு பல நாடுகளில் இத்தகைய வசதியில்லை. அதனால் அந்நாடுகளில் கரிம மல்லாத ரசாயன உரங்களை உபயோகிக்கிறார்கள். அதோடு வைக்கோல், செடிகள், தண்டுகள் முதலிய தாவரக் கழிவுகளையும் வயலில் போட்டு மடக்கி உழுகிறார்கள். மண்ணில் கரிமப் பொருள் குறையாமல் இருப்பதற்காக இவ்வாறு செய்கிறார்கள். ஆனால் இந்தியாவிலோ இந்தத் தாவரக் கழிவுகள் கால்நடைத் தீவனமாக உபயோகிக்கப்படுகின்றன; கால்நடைச் சாண

மா பெருப்பாலும் மறைந்துவிட்டது. ஒரு சில வாரங்களுக்குள் உரச் செடிகளை மிகக் கணிசமாக உற்பத்தி செய்ய முடியும்.

தப்பெண்ணம் காரணமாகவும், தப்பெண்ணத்தை உண்டுபண்ணும் விதத்திலும் சிலர் வேறொரு கண்டனத் தைத்தெரிவிக்கிறார்கள். அதாவது, எளிதில் ஜீரணமாகும் உருவில் நைட்ரஜன் சத்து பசுந்தாள் உரத்தில் இல்லை என்றும், அதனால் பயிர்ப் போஷாக்குக்குப் பசுந்தாள் உரங்கள் தகுந்தவை அல்ல என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். கட்டக்கில் உள்ள மத்திய அரிசி ஆராய்ச்சிக் கழகம் நடத்தியுள்ள ஆராய்ச்சி, இந்தக் கண்டனத்தை முற்றிலும் பொய்யாக்குகிறது. ஒரே அளவு நைட்ரஜன் சத்துள்ள பசுந்தாள் உரத்தையும் அமோனியம் ஸல்பேட்டையும் ஒப்பிட்டால் இரண்டில் பசுந்தாள் உரம் தான் சிறந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அமோனியம் ஸல்பேட்டிலுள்ள 30 ராத்தல் நைட்ரஜனுக்குப் பசுந்தாள் உரத்திலுள்ள 20 ராத்தல் நைட்ரஜன் சமமாக இருக்கிறது.

நெற் பயிருக்கு வேண்டிய பூரண உரமாகப் பசுந்தாள் உரம் விளங்குகிறது. அதோடு, இவ்வுரத்தை வழக்கமாக உபயோகித்தால் மண் வளம் அதிகரிக்கிறது. உற்பத்திச்சாதனமாகிய விவசாய நிலத்தின் முதலீட்டு மதிப்பு உயர்கிறது. ரசாயன உரங்களை உபயோகித்தால் இத்தகைய பலன் கிடைப்பதில்லை.

ஏக்கர்வாரி சராசரி தானியக் கண்டுமுதல்

ராத்தல் (கட்டக்)

வருடம்	1949-50	1950-51	1951-52	1952-53	1953-54	54-55
விதை	டி (T) 90	டி 1212	பி.ஏ.எம். 9	டி., 1242	பி,ஏ,எம், 9	டி 1212
விளைச்சல்	2541	2474	3005	2734	3313	3461

இந்தியாவில் விவசாயத்தின் வருங்காலத்துக்கு உதவக் கூடிய மிக முக்கியமான ஆராய்ச்சி முடிவு இது. தமிழ் நாட்டில் நெல் விளைச்சலை அதிகரிப்பதில் கிடைத்துள்ள சமீப கால அனுபவமும் இதை முற்றிலும் உறுதிப் படுத்துகிறது. இந்த ராஜ்யத்தில் பசுந்தாள் உரத்தை உபயோகிப்பதில் சில வருஷ காலமாக விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. இதன் பலனைப் பசுந்தாள் உரம் போட்ட நிலத்தின் பரப்பு அதிகரித்தது. அதோடு நெல் மகசூலும் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. அதாவது 1953—54-ல் 1 122 ராத்தலாக இருந்த கண்டு முதல், 1954-55-ல் 1,149 ராத்தலாகவும், 1955-56-ல் 1,209 ராத்தலாகவும் 1956-57-ல் 1,255 ராத்தலாகவும், 1957-58-ல் 1,294 ராத்தலாகவும் அதிகரித்திருக்கிறது. வேறு எந்த ராஜ்யத்திலும் ஏக்கர்வாரி நெல் உற்பத்தி இவ்வாறு ஏறுமுகமாக இல்லை. பயிர்ப் பராமரிப்புச் சம்பந்தமான அடிப்படை விஷயங்களை முதலில் கவனித்தால்தான் நிச்சயமான விளைச்சல் சாத்தியமாகும் என்பதில் சந்தேகமேயில்லை.

பின் விளைவு

கம்போஸ்டுகள், அமோனியம் ஸல்பேட் ஆகியவற்றின் பிற்கால விளைவுகளை அறிவதற்காக மத்திய அரிசி ஆராய்ச்சிக் கழகத்தில் (கட்டக்) மற்றொரு பரிசோதனை நடந்தது. அங்கு இரண்டு நிலப்பரப்புகளில் நெல் விளைவிக்கப்பட்டது. ஒரு நிலத்தில், ஏக்கருக்கு 8,000 ராத்தல் வீதம் கம்போஸ்ட் உரங்கள் போடப்பட்டன; இன்னொரு நிலத்தில் 20 முதல் 40 ராத்தல் நைட்ரஜன் சத்துள்ள அமோனியம் ஸல்பேட் போடப்பட்டது. இவ்வாறு கரிம உரங்களையும் ரசாயன உரங்களையும் 8 வருட காலம் இடைவிடாமல் போட்ட பிறகு இந்தப் பரீட்சார்த்த நிலப்பரப்புகள் இரண்டு இரண்டு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒரு துண்டில் வழக்கம்போலக் கம்போஸ்ட் அல்லது ரசாயன உரம் போடப்பட்டது; இன்னொரு துண்டில் உரமே போடப்படவில்லை. முதலில் கம்போஸ்ட் போடப்பட்ட நிலத் துண்டில் இப்போது உரம் போடாமல் இருந்தும், உரம் போடாத வேறொரு நிலத்தைவிட அதில் 9-வது ஆண்டில் 550 ராத்தல் அதிகமாகவும், 10-வது ஆண்டில் 320 ராத்தல் அதிகமாகவும் நெல் விளைந்தது. ஆனால் 8 வருடகாலமாக அமோனியம் ஸல்பேட் இடப்பட்ட நிலத்தில், உரம் போடாத நிலைமையில், உரம் போடாத வேறொரு நிலத்தைவிட அதில் சற்றுக்குறைவாகவே கண்டுமுதல் ஆயிற்று. இந்த ஆராய்ச்சியின் பலன்களைக் கீழே காணலாம் :—

அமோனியம் ஸல்பேட், கம்போஸ்ட் ஆகியவற்றின்

பிற்காலப் பலனும், மொத்தப் பலனும் (கட்டக்)

உரமே போடாத பரீட்சார்த்த நிலம்	முன்பு அமோனியம் ஸல்பேட் போட்டது 20 ராத் . நைட்.	முன்பு அம். ஸல்பேட்டது 40 ராத் நைட்.	முன்பு கம்போஸ்ட் போட்டது 40 ராத்.
1957-58 2053	1941 (-112)	1976 (-77)	2605+542/
1958 59 1921	1895 (- 74)	19 5 (-16)	2241+320/
2-ன் சராசரி 1978	1918 (- 93)	1940 (-46)	2436+436/

குறிப்பு.—ஏக்கர் வாரியாகக் கிடைத்த பலனை அடைப்புக்குறிகளுக்குள் இருக்கும் எண்கள், ராத்தல் கணக்கில், காட்டுகின்றன.

எட்டு வருஷ காலமாக ரசாயன உரங்களை மாத்திரம் உபயோகித்த வயல்களில் கண்டுமுதல் குறைந்திருப்பதை ஏதோ அற்ப விஷயம் என்று அலட்சியம் செய்யக்கூடாது. அயன மண்டலச் சூழ்நிலை காரணமாக இந்திய மண்ராசிகளில் தாவர மக்கு (humus) குறைவாகவே இருக்கிறது. அதனால் ரசாயன உரங்களை மாத்திரம் உபயோகித்தால் கொஞ்ச நஞ்சம் இருக்கிற தாவர மக்கும் காலியாகிவிடும். விளைச்சல் குறைவதற்கு இது ஒரு காரணம்.

இந்தியாவில் பயிர் நிலத்தில் பெரும் பகுதி நிச்சயமற்ற மழையை நம்பியிருக்கிறது. இந்நிலையில், தாவரப் போஷாக்குப் பொருட்களில் ஒன்றுசிய பசுந்தாள் உரம் மற்றொரு பெரிய நன்மையைச் செய்கிறது. அதாவது, பாதகமான பருவங்களின் தீய விளைவுகளைத் தடுக்கும் மதிலாக அது பயன்படுகிறது. ஆண்டுதோறும் பசுந்தாள் உரங்கள் பயிராகித் துகைக்கப்படும் வயல்களில் பாதகமான பருவ காலங்களில் கூட வழக்கமான விளைச்சல் கிடைப்பதாகப் புலனாகியிருக்கிறது. பாசன வசதி யுள்ள நெல் நிலங்களின் விளைச்சல் பாதகமான பருவ காலங்களில் குறைகிறது என்றாலும், பருவத்தின் தீய விளைவுகளைக் குறைப்பதற்குப் பசுந்தாள் உரம் உதவுகிறது. பாசன வசதியற்ற நிலங்கள் சம்பந்தப்பட்டவரை நெல் அல்லது கோதுமையில் முக்கியமான வளர்ச்சிக் கட்டங்களின் போது பூமியின் ஈரச் சத்தைப் பாதுகாப்பதில் பசுந்தாள் உரத்தின் உதவி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.

முள்ளை முள்ளால் எடு

இயற்கைச் சிரமங்களை இயற்கை வசதிகளின் உதவியால் சமாளிக்கவேண்டும். அதுதான் சரியாகத் திட்டமிடுவதன் சாராம்சம். ஆகவே, அயன மண்டலப் பூமிகளின் தாவர மக்கு குறைவாய் இருப்பதைச் சரிக்கட்டுவதற்காக, வேகமாய் வளரும் அயன மண்டலத் தாவரங்களைப் பயன்படுத்த வேண்டும். பசுந்தாள் உரங்களின் முக்கிய சிறப்புகளில் இது ஒன்று. நாடு முழுதிலும் மண் ராசிகளில் நைட்ரஜன் குறைவாய் இருப்பதால் விளைச்சல்கள் பெருக முடிவதில்லை. மண்ணுக்கு அவசியமான நைட்ரஜனையும் தாவர மக்கையும் பசுந்தாள் உரங்கள் தருகின்றன. இது மாத்திரம் அல்ல, மண்ணில் ஏராளமாக இருக்கும் பாஸ்பேட்டுகள் போன்ற போஷாக்குச்சத்துக்களைப் பயிர்கள் பயன்படுத்திக் கொள்ளவும் அவை உதவுகின்றன. இந்தியாவில் உள்ள 10 கோடி ஏக்கர் நெல், கோதுமை, பார்லி வயல்கள் அனைத்திலும் மூன்றாண்டு காலத்துக்குள் இதையெல்லாம் சாதிக்க முடியும். இதற்காகும் செலவு ஏக்கருக்கு 5 நயா பைசாதான். மூல வித்துக்கள் அடங்கிய பொட்டலத்தின் விலை இது.

இந்திய விவசாயியின் ஏழ்மை

நம் நாட்டில் தாழ்வாக இருக்கும் சராசரி விளைச்சல்களை, பல காரணங்களால், இதுவரை அதிகரிக்க முடியவில்லை. பொதுவாக இந்திய விவசாயியின் ஏழ்மை, பரவலாகக் கையாளும் விதத்தில் உரப் பிரச்னைக்குக் காரிய சாத்தியமான பரிகாரம் சமீப காலம்வரை இல்லாதிருந்தது, செலவு மிகுந்த விவசாய முறைகளைக் கையாளச் சாதாரண விவசாயியின் சக்தியின்மை, கடனும் பண்டங்களும் போதிய அளவில் கிடைக்காமை ஆகியவையே இக் காரணங்கள். உற்பத்தியை உயர்த்துவதற்காகச் செலவைப் பாராமல் தேவையான சாதனங்களையும் கடன் வசதியையும் ஒவ்வொருவிவசாயிக்கும் உடனடியாக வழங்க முடியும் என்றால் இன்னும், பல வருடங்களுக்கு விவசாய உற்பத்தி சம்பந்தமாகச் சங்கடமே இருக்காது. ஆனால் தேச வியாபகமாக இவ்வாறு செய்ய நம்மால் இயலாது. இந்நிலைமையில் ஒவ்வொரு வயலுக்கும் தேவையான உரத்தை, செலவில்லாமல், வெளியிலிருந்து பண்ட சப்ளைகள் இல்லாமல் ஒவ்வொரு விவசாயியும் உற்பத்தி செய்து, அதன் மூலம் மகசூலைப் பெருக்குவதற்கு வழி (பசுந்தாள் உரம்) இருக்கிறது. விவசாய உற்பத்தியை அபரிமிதமாகப் பெருக்குவதற்கான முயற்சியை இவ்வழியில் ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கை நமக்குக் கிடைத்திருக்கிறது.

விளைச்சலைப் பெருக்குவதற்குப் பல வழிமுறைகள் உண்டு. ஆனால் உரம் பற்றிய வழிமுறை சம்பந்தப்பட்ட வரை தயக்கத்துக்கு இடமே இல்லை. மண் வளமும் விவசாயியின் மூலதன வசதிகளும் அதிகரிப்பதற்குக் கரிம உரங்களும் பசுந்தாள் உரங்களும் உதவுகின்றன. ஆனால் ரசாயன உரங்கள் போன்ற சாரம் செறிந்த உரங்கள் உற்பத்தித் திறனை ஊக்குவித்தபோதிலும் மண்ணுக்கு நிலையான நன்மை செய்வதில்லை. விவசாயத் துறையில் திட்டமிடுவதற்கு மண் வளம்தான் உண்மையான ஆதாரம். சுய உதவிதான் சாலச் சிறந்த மானிய உதவி. அதுதான் விவசாயியைச் சோர்வடையச் செய்யாமல் உருப்படியான பலன் அளிக்கும். விவசாயியின் முயற்சியால் மண் வளத்தை வளர்த்து விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இதன் விளைவாக அவர்களது உற்சாகம் பொங்கி எழும்; பிற்போக்குக் குட்டையிலிருந்து அவர்கள் கரை ஏறுவார்கள். பிறகு, ரசாயன உரங்களையும் பூச்சிக் கொல்லி மருந்துகளையும் உபயோகித்து, உற்பத்தியை மேற்கொண்டு பெருக்குவதற்கும், வெளியுதவியை அதிகமாக நாடாமல் நீர்ப்பாசன வசதியை நன்கு பயன்படுத்தவும் அவர்கள் சுயமாகவே திட்டம் வகுத்துக்கொள்வார்கள்.

———

பஞ்சாயத்துக்களின் ஆரம்ப நிர்வாக செலவுகளுக்கான முன்பணம் அளித்தல் —ரூ 100 வரை அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது

ஆணை:—புதியதாக அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் தேவையான பதிவேடுகள், அலுவலக நிர்வாகத்துக்கு வேண்டிய இதர பொருள்களைப் பெறுவதில் ஏற்படும் ஆரம்ப செலவுகளைச் சமாளிப்பதில் உண்டாகும் தொல்லை களைப்பற்றி, பல் வேறு பஞ்சாயத்துத் தலைவர்கள் அடிக் கடி குறிப்பிட்டுவந்திருக்கின்றனர். வரி வசூலைச் செய் வதற்காக முதலில், பஞ்சாயத்துக்களுக்கு ரிஜிஸ்டர் களும் பாரங்களும் தேவைப்படுகின்றன. ஆனால் ஆரம்ப நிலையில், புதியதாகத் தொடங்கப்பெற்ற பஞ் சாயத்துக்கள் இதற்கான செலவுகளை ஏற்கும் நிலையில் இல்லை. ஆகவே, இந்த வகையில், ஆரம்ப நிலையில் புதிய பஞ்சாயத்துக்களுக்கு ஓரளவு உதவுகின்றவகையில், திருப்பிச் செலுத்தப்படவேண்டிய வகையில் முன் பணம் அளிப்பது ஒரு நல்ல முறையாகும். ஆகவே, 1960-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு நமூனுக்கள், பதிவேடுகள் வாங்கிக் கொள்ளுதல் முத லான நிர்வாகச் செலவுகளுக்கென்று ரூபாய் 100 திருப்பித் தர வேண்டிய முன்பணம் அளிப்பதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

2. இந்த முன்பணம் கீழ்க் கண்ட முறைகளின் அடிப் படையில் அளிக்கப்படும்.

(i) ரெவின்யு டிவிஷனல் அதிகாரியால் இந்த முன் பணத்திற்கான அனுமதி அளிக்கப்படும்.

(ii) சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து இது விஷயத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அத்தீர்மானத்துடன் அப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி மனுச் செய்து கொண் டால், அதன்பேரில் இந்த முன் பணம் அநுமதிக்கப்படும்.

(iii) இந்த முன்பணம் மொத்தமும் ஒரே தவணை யில் $4\frac{1}{2}$ சதவீத வட்டியுடன் அடுத்த ஆண்டிலேயே திருப்பி வசூலிக்கப்படும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில், அசலுக்கும் வட்டிக்கும் சேர்த்து அபராத வட்டியாக $7\frac{1}{2}$ சத வீதத்துடன் வசூலிக்கப்படும்.

3. "பல வகைக் கடன்களும் முன் பணங்களும்—தல நிர்வாக நிதிகள் தனிப்பட்டோர் ஆகியோருக்குக் கடன் கள்" என்ற பிரிவின்கீழ் "புதியதாக அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கான ஆரம்ப செலவுகளை ஈடுகட்ட முன்பணம்" என்ற புதிய கணக்குத் தலைப்பில் செலவு கள் பற்றுவைக்கப்பட வேண்டும். காலப்போக்கில் மானி யங்களுக்குள்ளேயுள்ள சேம நிதியிலிருந்து நிதி ஒது க்கித் தரப்படும்.

4. சம்பந்தப்பட்ட எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் இந்த உத்தரவில் அடங்கிய செய்தியைத் தெரிவிக்குமாறு கலெக் டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறையின் 21-4-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1186)

நகரப்பஞ்சாயத்துக்களுக்கு முழு நேர நிர்வாகிகளை நியமிக்க முனிசிபல் மன்றங்களின் மேற்பார்வையாளருக்கு அதிகாரம்

நகராட்சி மன்றங்கள், ஸ்தல ஸ்தாபனங்க ளின் மேற்பார்வையாளர், நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந் தெடுக்கும் விதிமுறைகள் வகுப்பதும், புதிய இரண்டு தரங்களுக்கும் நிர்வாக அதிகாரிகளைச் சேர்த்துக்கொள் ளும் விஷயமும், மற்ற விஷயங்களும் ஒரு முடிவுக்கு வரும் வரையில், 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 40 (1) பிரிவின்படி, நகரப் பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ள மாவட்டக் கலெக்டர் கள், சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் நிர்வாக அதி காரிகளை நியமித்தல், மாற்றுதல் முதலிய அதிகாரங் களைப் பயன்படுத்தாமல் இருக்கும்படி, கேட்டுக்கொள்ளப் படவேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார். அதி கார மாற்றக்காலத்தில் 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 40 (1) பிரிவின்படி, மாவட் டக் கலெக்டர்கள் மட்டுமன்றி, நகராட்சி மன்றங்கள்—ஸ்தல ஸ்தாபனங்களின் மேற்பார்வையாளர், அரசாங் கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்த உரிமையுடையவர் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 60 (1) பிரிவின்படி, ஸ்தல ஸ்தாபன மேற்பார்வையாளரின் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கலெக்டர்களுக்கு உரிமை யில்லை. ஆகவே சட்டத்தின் 2 (15) பிரிவின்படி, கலெக் டர்கள், நிர்வாக அதிகாரிகளின் நியமனம்—மாற்றுதல் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவிக்க வேண்டிய தேவையும் இல்லை.

1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம், 157-வது பிரிவு, (1)-வது துணைப்பிரிவின்படி, முனிசிபல் மன்ற-ஸ்தல ஸ்தாபன மேற்பார்வையாளருக்கு, அதே சட்டத்தின் பிரிவு 40 துணைப் பிரிவு (1)-ன்படி எல்லா நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் முழு நேர நிர்வாக அதிகாரியை நியமிக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

[கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறையின் 17-4-61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1127)

பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களின் நடைமுறைகளைப் பற்றிய விதிமுறைகள்

பொது நிர்வாகப் பிரிவு:

1. நிர்வாகி.
2. இரண்டு மேல் வகுப்பு குமஸ்தாக்கள்.
3. ஒரு கீழ் வகுப்பு குமஸ்தா (இவர் பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட வேலையைக் கவனிப்பார்).
4. ஒரு கீழ் வகுப்பு குமஸ்தா (இவர் பொதுத் தொடர்புகளையும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் வேலையையும் கவனிப்பார்).
5. பொருளாளர் (கீழ் வகுப்பு குமஸ்தாவின் சம்பளவீதம்).
6. ஒரு தட்டெழுத்தாளர் (இவர் தபால் வேலைகளையும் கவனிப்பார்).
7. ஒரு அலுவலகச் சேவகர்.
8. ஒரு பதிவேடுகள் தஸ்தாவேஜிகளைக் கவனிக்கும் சேவகர்.

வரவு செலவு கணக்குப் பிரிவு:

1. கணக்கர்.
2. ஒரு கீழ் வகுப்பு குமஸ்தா.

கல்விப் பிரிவு:

1. தலைமைக் குமஸ்தா.
2 இரண்டு கீழ் வகுப்பு குமஸ்தாக்கள்.
3. ஒரு சேவகர் (250 ஆசிரியர்களுக்கு மேற்பட்டால் மட்டுமே இவர் இருப்பார்).

மாவட்டக் கலெக்டர்கள் மாநாட்டில், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவருக்குத் தனி குமஸ்தா நியமிக்கப்பட்ட வேண்டும் என்று கேட்கப்பட்டது. விதிகள் அதற்கு இடமளிக்காமையால், தலைவர் தம்முடைய உதவிக்கு, மேற் குறிப்பிட்ட பொது நிர்வாகத் துறையில், பொதுத் தொடர்புகளையும், பஞ்சாயத்து யூனியன் வேலைகளையும் கவனித்துக்கொள்ளும் குமஸ்தாவைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

3. பொது நிர்வாகத்துறையில் பஞ்சாயத்துக்களின் வேலைகளைக் கவனித்துக்கொள்ளும் குமஸ்தா பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியின் நேரடி மேற்பார்வையில் பணியாற்றுவார்.

பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் தனியொரு அலுவலகமாகவே கருதப்படும். அந்த அலுவலகம், பஞ்சாயத்து யூனியன் கமிஷனின் அனுமதியுடன், அவர் பெயராலேயே தொடர்புகளை வைத்துக்கொள்ளும். எல்லா, வளர்ச்சி அதிகாரிகளும், அந்த அலுவலகத்தின் துணை அதிகாரிகளாகவே கருதப்படுவர்.

அலுவலகப் பொறுப்பை நிர்வாகி (Manager) கவனித்துக்கொள்வார். எனினும் இவர் கமிஷனருக்கு உட்பட்டே பணியாற்றவேண்டும். இவர், கணக்கர், பொருளாளர், குமஸ்தாக்கள் முதலியோருடைய வேலையை மேற்பார்வையிடுவதுடன், அலுவலக நடை முறையை நன்கு கவனித்துக்கொள்வார்.

வளர்ச்சிப்பணி அதிகாரிகள் பெரும்பாலும் வெளியூர்களில் சுற்றுப்பயணம் செய்ய வேண்டியிருப்பதால், அலுவலகத்தில் அவர்கள் கவனிக்கவேண்டிய கடிதங்கள், கட்டுகள் முதலியவற்றைக் கவனிக்கச் சில நாட்களை ஒதுக்கிவைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி அக்கடிதக் கட்டுகளைப் பெறுவதிலும், அனுப்புவதிலும் காலதாமதம் செய்யக்கூடாது.

கணக்கர்கள் (Accountants) பணப்பட்டியல்களைத் தயாரிப்பதோ, பணத்தை வைத்திருப்பதோ, பட்டியலைப் பணமாக்குவதோ, செய்யக்கூடாது. இது இயங்கி வரும் பொருளாதார விதி முறைகளுக்கு விரோதமான செயலாகும்.

மேற்குறிப்பிட்ட விஷயங்களைக் கொண்டு பஞ்சாயத்து யூனியன் அலுவலாளரின் பணிகள் கீழ்க்கண்டவாறு வகுக்கப்படுகின்றன:

பொது நிர்வாகப் பிரிவு.

(i) **நிர்வாகி.**—அலுவலக மேற்பார்வை, ஒழுங்குப் பாதுகாப்பு, அலுவலக அமைப்பு விஷயங்கள்; பஞ்சாயத்துக் கணக்கு அறிக்கை—பலவகை வேலைகள் அனைத்தும்.

(ii) **மேல் வகுப்பு குமஸ்தா** I.—விவசாயம் கால்நடைப் பாதுகாப்பு, கூட்டுறவு கிராமத் தொழில், கதர்.

(iii) **மேல் வகுப்பு குமஸ்தா** II.—புள்ளி விவரங்கள்; பஞ்சாயத்து வளர்ச்சி பற்றிய—எல்லா வேலைகளைப் பற்றிய தொடர்புகளும்; வரிவிதிப்பு மானியங்கள் பற்றிய எல்லாத் தொடர்புகளும்.

(iv) **கீழ் நிலைக் குமஸ்தா** I—பஞ்சாயத்துக்களின் கணக்குத் தணிக்கை மட்டும்.

(v) **கீழ் நிலைக் குமஸ்தா** I.—நிர்வாகியால் ஒதுக்கித் தரப்பட்ட எல்லாப் பொதுத் தொடர்புகளும், யூனியன் மன்ற வேலைகள், யூனியன் தலைவரின் வேலைகள்.

(vi) பொருளாளர்.

(vii) தட்டெழுத்தாளர்.

(viii) அலுவலக சேவகர்.—அலுவலக வேலையுடன், மேற்பார்வையாளருக்கும் துணை செய்தல்.

(ix) தஸ்தாவேஜுகளின் சேவகர்.—தபால்; தபால்களை அனுப்புதல்; தஸ்தாவேஜுகளை கவனித்துக்கொள்ளுதல்.

வரவு-செலவு கணக்குப் பிரிவு.—

(i) **கணக்கர்.**

(ii) **கீழ் நிலைகுமாஸ்தா.**—கணக்கு வேலைகள் மட்டும்; கணக்குத் தணிக்கைத் தொடர்புகள் மட்டும்.

கல்விப் பிரிவு.—

(i) **தலைமைக்குமஸ்தா.**—பட்டியல் தயாரித்தல்; கல்வி நிர்வாகம் (நியமனம், மாற்றுதல், பதவி உயர்வளித்தல், தேர்ந்தெடுத்தல் முதலியன).

(ii) **கீழ் நிலைக்குமஸ்தா.** I.—கல்வி நிர்வாகத்தைப்பற்றிய மற்ற வேலைகள் எல்லாம்.

(iii) **கீழ் நிலைக்குமஸ்தா.** II.—சமூகக் கல்வி (ஆண் பெண் இருபாலார்க்கும்), கல்விபற்றிய மற்ற பலவகை விஷயங்களும்.

ஆறு சேவகர்களில், ஒருவர் யூனியன் தலைவருக்கென்று ஒதுக்கப்படுகிறார். மற்ற ஐவரும், அலுவலகத்திலும், தபால்களையும், கட்டுகளையும் முகாம்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் கொண்டு செல்லும் வேலையையும் கவனித்துக்கொள்வார்கள்.

கோவை மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் வட்டாரத்தின் தலைமையிடம் காரமடையில் இருக்க வேண்டுமென அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இந்த வட்டாரம் இனிமேல் காரமடை வட்டாரம் என அழைக்கப்படும்.

(11-4-61 தேதியிட்ட கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை அரசாங்க ஆணை எண். 1045.)



வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து 1961 ஜூன் மாதத்தில் ஒலி பரப்ப இருக்கும் கிராமிய நிகழ்ச்சிகளின் விவ்ரம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் :

நம் மாதர் மன்றம் ; திரைப்பட இசை ; நாட்டுப் பாடல் பயிற்சி ; பாட்டு.

ஒவ்வொரு சனிக்கிழமையும் :

முதியோர் இலக்கிய வகுப்பு ; பாரதிப் பாடல்கள் ; பாட்டு.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் :

வாராந்தர மார்க்கெட் நிலவரங்கள் ; பாட்டு.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் :

திரைப்பட இசை ; கிராம ரேடியோ மன்றம் ; பாட்டு.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் :

நமது திட்டம் ; மெல்லிசை ; பாட்டு.

இவையன்றி ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகள்:

வியாழன் (1-6-61)	..	நம் நிகழ்ச்சி நிரல்.
சனி (3-6-61)	..	காஷ்மீர விழாக்கள் (வருணனை).
ஞாயிறு (4-6-61)	..	ஆராய்ச்சிக் கூடம் ; "கிராமம் போவோமே." (செய்திக் கதிர்).
திங்கள் (5-6-61)	..	வானொலியின் டி.எஸ். ஒலிப்பதிவுகள் ; "வல்ல வனுக்கு வல்லவன்" (சி.பி. குமாரவேலு எழுதிய நாடகம்).
புதன் (7-6-61)	..	பழரசத் தயாரிப்புத் தொழிலாளி (பேட்டி) ; பாரதியார் பாடல்கள் ; மணல் மேட்டு மாநாடு (ஜி. செல்வம் அளிக்கும் தொடர் நிகழ்ச்சி).
வியாழன் (8-6-61)	..	"எழுத்துக்கார ஏகாம்பரம்" (வாசு அளிக்கும் தொடர் நிகழ்ச்சி).
சனி (10-6-61)	..	தொழிலாளர் நலன் (பேச்சு)
ஞாயிறு (11-6-61)	..	விவசாயிக் கடிதம் ; நாடோடிக் கலை : கரக ஆட்டம்.
திங்கள் (12-6-61)	..	அருட்பா ; "பொடிப் பையன்" நாடகம்—தயாரிப்பு பூமி நாதன்.
புதன் (14-6-61)	..	பிற நாடுகளில் கால் நடை அபிவிருத்தி—விவாதம் ; திருப்புகழ் ; அம்மாஞ்சி அரிஅரன்—தொடர் நிகழ்ச்சி (தயாரிப்பு : சுந்தர மூர்த்தி).
வியாழன் (15-6-61)		எழுத்துக்கார ஏகாம்பரம்—தொடர் நிகழ்ச்சி ;
சனி (17-6-61)	..	கிராம நலக் கழகம்—விவாதம்.
ஞாயிறு (18-6-61)	..	பாட்டைக் கேளுங்கள் (இசை நிகழ்ச்சி). "மிருச்ச கடிகம்"—நாடகம்.
திங்கள் (19-6-61)	..	நாட்டுப் பாடல் ; "மங்கல நாண்"—நாடகம் (சிவப் பிரகாசம் தயாரித்தது.)
புதன் (21-6-61)	..	"பாட்டும் படிப்பும்"—(ராகவன் தயாரித்தளிக்கும் இசை நிகழ்ச்சி). "காற்றுப் போக்கிலே கேள்விகள்"—விவாதம்.
வியாழன் (22-6-61)	..	"எழுத்துக்கார ஏகாம்பரம்" (தொடர் நிகழ்ச்சி).
சனி (24-6-61)	..	சிறிய நீர்ப்பாசனம்—பேச்சு; மொகரம் (சிறப்பு நிகழ்ச்சி).
ஞாயிறு (25-6-61)	..	நாட்டுப் பாடல்கள் ; கிராமச் சிறுவர்கள் (சிறப்பு நிகழ்ச்சி).
திங்கள் (26-6-61)	..	பாமாலை "ஊழிப் பயன்"—(சிறு கதை).
புதன் (28-6-61)	..	சித்தர் பாடல்கள் ; சிறு சேமிப்பு—விவாதம். குடிசைச் செல்வம்—இசை நிகழ்ச்சி.
வியாழன் (29-6-61)		"எழுத்துக்கார ஏகாம்பரம்" (தொடர் நிகழ்ச்சி).
வெள்ளி (30-6-61)	..	ஒன்றே குலம் (சிறப்பு நிகழ்ச்சி).

காலத்தை வென்ற கவியரசர்

கவியரசர் தாகூரின் புகழ்மணம் இன்று உலகெங்கும் வீசுகிறது. அவருடைய நூறுவது பிறந்தநாள் நானில மெங்கும் சீரும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. "குருதேவர்" என்றும் "மகரிஷி" என்றும் பக்தியுடன் போற்றிப் புகழப்படும் பாரதநாட்டுக் கவிஞர் அவர். "நோபல்" பரிசு பெற்ற இலக்கியப் பேரறிஞருமாவார். "கீழ்த் திசை நாடுகளின் புராதன பாரம்பரியங்களில் தோய்ந்து, பூர்விக, மத்திய கால இந்தியாவின் கலாச்சாரத்தை ஏற்றுக் கொண்ட தாகூர், மேற்கத்திய நாடுகள் வழங்கிய நல்ல அம்சங்களை வரவேற்றார். தாகூர், ஒரே உலகத்தை அடைவதற் காகப் பணியாற்றினார். அதற்காகவே வாழ்ந்தார்" என்று அந்தக் கவிஞர் பெருமானுக்குப் புகழ்மாலை சூட்டுகிறார் அமைச்சர் ஹுமாயூன் கபீர்.

"இயற்கையோடு இயைந்த இன்ப அன்பு நெறி" என்று நம் நாட்டுப் பண்பாட்டைக் குறிப்பிடுவார், தமிழ்ப் பெரியார் திரு.வி.க. இந்தப் பண்பாட்டுக்குச் சிறந்த உதாரணமாக வாழ்ந்தார், கவிஞர் தாகூர். உண்மையின் வடிவத்தை, அன்பு, அமைதி, அழகு ஆகிய கண்ணோட்டத்தோடு கண்டு, பல்வேறு கலைப் படைப்புக்களை அவர் படைத்தார். "உண்மை" என்ற தத்துவமே அவருடைய கலையுணர்வுக்கு உயிரூட்டியது. அவருடைய இலக்கியப் படைப்புக்களி லெல்லாம் ஊடுருவிச் செல்லும் மெய்யுணர்வாக "சத்தியம்" அமைந்தது. உலக அமைதியே அவர் இசைத்த கீதத்தின் எதிரொலி. "கீதாஞ்சலி" அவருடைய கவிதைப் பண்பாட்டின் கருவூலம்.

"உண்மையே கடவுள்" என்று உணர்ந்து வாழ்ந்தவர், காந்தியடிகள். அந்த உண்மையைக் கவிதையிலே கண்டு, கலையுருவில் வடித்துக் கொடுத்தவர், மகரிஷி தாகூர். நாதவடிவான இறைவனை அஞ்சலி செய்து புகழ்படைத்த கவிஞரின் வாழ்வு, பாரத மக்களின் அன்பு நெறியுடன் இயைந்த பண்பாட்டுக்கு, ஒரு சிறந்த அணிகலனாகும்.

அவருடைய வாழ்வு அன்பு நெறியின் அடிப்படையில் உருவாகியது. அவருடைய உள்ளம் குழந்தை உள்ளம்; அன்பு உள்ளம். கவியரசரின் இலக்கியப் படைப்புக்கள் எல்லாம், அழகின் திரு உருவங்கள்; கலையின் இன்ப ஊற்றுக் கள்; அமைதி பரப்பும் விண்மீன்கள். அமைதியும், ஆன்ம நேயமும் ஓங்கி வளர வேண்டும் என்பது, கவிஞரின் கீதம். "ஒரே உலகம்" என்று ஓங்காரக்குரல் எடுத்துப்பாடிய வானம்பாடி அவர். அமைதியை விழையும் அக்கவி உள்ளம் அமைத்த தொண்டு நிலையமே, "சாந்திநிகேதன்". இயற்கையோடு இயைந்து வாழும் கிராம மக்கள் வாழ்வில் முன்னேற்றம் காண, அவர் தோற்றுவித்த அமைப்பே "ஸ்ரீநிகேதன்".

கிராம வளம் பற்றிய உணர்வே இல்லாமல் அரசாங்கம் இருந்த அந்தக் காலத்தில், "கிராம நலம் தான் நாட்டு நலம்" என்றுணர்ந்த கிராமியக் கவிஞர் அவர். அன்பு நெறி நின்று வாழும் ஆன்றோர்கள், பகைவர்க்கும் தீங்கு எண்ணாத தூய நெஞ்சினராய் இருத்தல் முடியும். மகாத்மா காந்தியடிகளும், தாகூரும், எத்தனையோ விஷயங்களில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். கருத்து வேறுபாடுகள், உள்ள நிறைவு பெற்று முழுவாழ்வு வாழ்ந்த பெரியார்களைப் பிணைத்து வைத்தனவே தவிர, பிரித்து வைக்கவில்லை. அந்த இருபெருஞ் சுடர்களின் அன்பு நெறியைப் பற்றி "கவிஞர் தாகூர்" என்ற நூலில், டாக்டர். மு. வரதராசனார் பின்வருமாறு அழகாகக் குறிப்பிட்டுள்ளார் :

"காந்தியடிகள் இராட்டையால் நூல் நூற்றுக் கதர் அணிய வேண்டும் என்று, அதை ஓர் இயக்கமாக நடத்தியதைத் தாகூர் வெறுத்தார்; குறை கூறினார்; கட்டுரைகளும் எழுதினார். "கையால் நூல் நூற்று ஒரு நாட்டின் விடுதலைக்கு வழி தேட முடியுமா; எச்சில் துப்பி ஏரியை நிரப்பமுடியுமா;" என்றும் எழுதினார். ஆனால் அந்தக் கொள்கை காரணமாகக் காந்தியடிகளை வெறுக்கவில்லை. அதற்கு மாறாக, அவருடைய தூய வாழ்வையும், அறநெறியை யும் மிகப்போற்றுவதற்கு அறிகுறியாக, "மகாத்மா" என்ற பட்டம் சூட்டி உலகறியப் புகழ்ந்தார். ஒருமுறை காந்தியடி கள் சாந்தி நிகேதனத்துக்கு வந்தபோது, தாமே கதர் அணிந்து அவரை வரவேற்றார். கொள்கையில் இவ்வளவு உறுதியுடைய கவிஞர், அன்போடு பழகும்போது, குழந்தையிலும் குழந்தையாய் விளங்குவதைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள்.

காந்தியடிகளும், கவிஞர் தாகூருமாகிய இருபெருந்தலைவர்களின் வாழ்க்கையும் உலகத்தின் மணிவிளக்குகளாக ஒளிர்வதற்குக் காரணம், இந்த ஒப்பற்ற பெரும் பண்புதான். கொள்கையில் மிக மிக உறுதிகொண்டு உயிரையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்த சான்றோர்கள், பகைவர்க்கும் தீங்கு எண்ணாத தூய நெஞ்சினராய், ஒருவரை ஒருவர் வெறுப்பது என்பதைக் கனவிலும் கருதாமல் வாழ வல்லவர்கள் என்பதற்கும், இவர்களின் வரலாறு சிறந்த சான்றாகும்."

"சத்தியத்தின் குரல் அழைக்கும்போது, ஆக்க வழியில் ஈடுபட்ட ஆத்மா, செயல்புரிகிறது. இந்தச் செயலே கலையாகும்" என்பது கவியின் வாக்கு. கலையின் உண்மையான இலக்கணத்தை, இந்த அற்புதமான சொல்லோ வியத்தில் வடித்துக்கொடுத்த தாகூர், பாரத நாட்டுப் பண்பாட்டின் இலக்கியமாய், அமைதிச் சுடர் பரப்பும் மணி விளக்காய், என்றென்றும் ஒளிவிட்டுத் திகழ்வார்!

—×—

"நாட்டின் ஒற்றுமைதான் மிகமிக அத்தியாவசியமானது. நாம் நடத்துகின்ற இந்த விழா, அதைத்தான் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. தமிழ்க்கவி பாரதியாரும், ஆயிரக்கணக்கான மக்களைத் தன்னுடைய உணர்ச்சி மிக்க கவிதைகளின் மூலம் தட்டி எழுப்பியுள்ளார். தாகூரும் பாரதியும் உணர்ச்சிப் பிழம்புகளாய் நின்று, ஆவேசமூட்டும் கவிதைகளை வாரி வழங்கினர். நம் நாட்டின் விடுதலைக்காகப் போராட்டம் நடைபெற்ற காலத்தில், அவர்கள் ஆக்கித் தந்த கவிதைகள், இன்றைக்கும் மிகவும் பொருத்தமாக உள்ளன."

—சென்னை மக்கள் சார்பாக நடைபெற்ற தாகூர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் நிதி அமைச்சர் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணியம்.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



"சத்தியத்தின் குரல்"

"பிறகு, மிக இக்கட்டான சந்தர்ப்பத்தில், இந்தியாவின் கோடிக்கணக்கான அநாதைகளின் சார்பாக, அவர்களைப் போலவே அரை ஆடை பூண்டு, அவர்களிடம் அவர்கள் மொழியிலேயே பேசிக்கொண்டு, மகாத்மா காந்தி வந்து நின்றார். அச்சடித்த புத்தகங்களில் படிக்கின்ற கதையன்று இது; உண்மையாக நடைபெற்ற நிகழ்ச்சியாகும். இதனால்தான், அவரை மகாத்மா (பெரிய ஆன்மா) என்று பொருத்தமாக அழைக்கின்றனர். கோடிக்கணக்கான மக்களைத் தன்னுடைய குருதியின் குருதியாக, சதையின் சதையாக வேறு யார்தான் முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்? சத்தியத்தின் ஒளிப்பட்டவுடன், ஆன்மாவில் அடங்கியிருந்த பெரும் சக்தி, விடுதலை பெற்று வெளிப்பட்டது. அன்பு, வந்து நின்று தட்டியவுடன், இந்தியாவின் கதவுகள் திறந்துகொண்டன. அகமுகமாக இருந்த கஞ்சத்தனம் மறைந்தது. சத்தியம், சத்தியத்தைத் தட்டி எழுப்பியது".

—0—

"சத்தியத்தின் குரல் அழைக்கும்போது ஆக்க வழியில் ஈடுபட்ட ஆத்மா, செயல் புரிகிறது. இந்தச் செயலே கலை ஆகும்".

கவியரசர் தாகூர்.

Regd. No. M. 7277.

©
தமிழ்நாடு அரசாங்கம்
1961.

மேலே.—தமிழ்ப் பண்பாட்டு மன்றம், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர் களைப் பாராட்டிக் கௌரவித்தது. செனட் மண்டபத்தில் நடைபெற்ற மணி விழாவில் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் பேராசிரியர் சேதுப்பிள்ளையின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார் கள்.



மத்தியில்.—மலேயா விவசாயத் தலைவர்கள், 17-4-61 அன்று கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் அளவளாவினார்கள்.

கீழே.—11-4-61 அன்று ஸ்ரீ காமராஜ் அவர்கள் திருத்தி அமைக்கப்பட்ட சென்டிரல் ரயில் நிலையத்தை ஆரம்பித்து வைத்தார்.